இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 264
ஆவணி 1ஆம் நாள்
வியாழக்கிழமை
17 ஓகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048


## அரசியல் கைதிகள் உணவு ஒறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17
வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்ற வழக்கை வேறு நீதிமன்றுக்கு இடமாற்றம் செய்யக்கூடாது எனக் கோரி அநுராதபுரம் சிறைச்சா >> 25

## நல்லூர் வேலவனின் கைலாயக் காட்சி



நல்லூர்க் கந்தசுவாமி ஆலய திருவிழாவில் 20ஆம் நாளான நேற்று வள்ளி தெய்வானை சமேதரராய் வேலவன் கைலாய வாகனத்தில் அடியவர்களுக்குக் காட்சியளித்தார். (வ-37)

# 17 வருடங்களின் பின்னர் இந்திய சிப்பாய்களுக்கு கோப்பாயில் அஞ்சலி

### தூபியைக் கண்டுபிடித்து துப்புரவுப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 17
இந்த வார இறுதியில் இலங்கை வரும் இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட தமது சகாக்களுக்கு அஞ்சலி செலுத்த உள்ளது. இதற்காக, 17 ஆண்டுகளாகக் கைவிடப்பட்டுக் கிடந்த நினைவிடம் தேடிப் பிடித்துத் துப்புரவு செய்யப்படுகின்றது. விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கல்வியங்காட்டில் கொல்லப்பட்ட இந்திய இராணுவத்தினரின் நினைவாக அமைக்கப்பட்ட தூபியிலேயே அதிகாரிகள் அஞ்சலி செலுத்தவுள்ளனர்.



அழகு படுத்தப்படும் நினைவிடம் இதுதான் >> 23

### வாள்வெட்டுக் குழுக்களுக்கு

## நல்லூர் முடியட்டும் இருக்கிறது 'மங்களம்'

### வடக்கு டி.ஐ.ஜி. தீர்க்கமான கருத்து



யாழ்ப்பாணம், ஓக. 17
வாள்வெட்டுக்குழுக்களின் பிரச்சினை ஒன்றும் பெரியவிடயமல்ல.விரைவில் அவற்றை அடக்கி அனைத்தையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடுவேன். 600 பொலிஸார் நல்லூர்த் திருவிழா >> 25

## முதலில் சரணடையுங்கள் அதன் பின்னரே எதுவும்

### துன்னாலை வாசிகளுக்கு டி.ஐ.ஜி அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 17
துன்னாலையில் அண்மையில் பொலிஸாருக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகளுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சரணடைய வேண்டும். அதன் பின்னர் நீதிமன்ற நடவடிக்கைகள் ஊடாக இணக்கம் குறித்து ஆராயலாம். அப்படிச் செய்யாவிட்டால் தேடப்படுபவர்களைக் கைது செய்வதற்கான வேட்டை தொடரும்.
இவ்வாறு எச்சரிக்கையுடனான அறிவுறுத்தல் ஒன்றை கிராமத் தலைவர்களிடம் தெரிவித்தார் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொசான் பெர்னான்டோ.
துன்னாலையைச் சேர்ந்த கிராமத் தலைவர்கள் 10 பேர் நேற்று மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பொலிஸ் அதி >> 25

## கட்சியிலிருந்து நீக்கினால் நீதிமன்றத்தை நாடுவேன்

### மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17
கட்சி ஜனநாயக விழுமியங்களுக்கு முரணான இரு வேறு நிலைப்பாடுகளுடன் செயற்படுகின்றது. சட்டத்துக்கு மாறாகக் கட்சியிலிருந்து என்னை நீக்கினால் நீதி >> 25

## டெனீஸ்வரனின் முடிவால் செல்வம் எம்.பி. கவலை

யாழ்ப்பாணம், ஓக. 17
வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது பதவியில் இருந்து விலக >> 23

## நானே பதவியில் தொடர்கின்றேன்

### அமைச்சர் டெனீஸ் ஆளுநருக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17
வடக்கு மாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சராகத் தானே தொடர்ந்தும் பதவியில் இருக்கிறார் என்பதை ஆளுநர் ரெஜினோல்ட் குரேக்கு அறி >> 25

## தமிழ் அரசுக் கட்சியிடம் கையேந்துமா ரெலோ?

### தொண்டர்கள் ஆவலோடு காத்திருப்பு

>> 25

### மகிந்த மீதான விசாரணைகளை நடத்த

## சிறப்பு நீதிமன்றமா ட்ரயல் அட் பாரா?

### அரசு தடுமாறுகிறது; அரசமைப்பு என்பது நிர்வாணத்தை மூடும் ஆடையல்ல என்று அமைச்சர் ராஜித கொதிப்பு

கொழும்பு, ஓக. 17
மகிந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற பெரும் ஊழல், மோசடிகள் தொடர்பான நீதி விசாரணைகளை எப்படி முன்னெடுப்பது என்பது தொடர்பில் அரசுக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. தேவை ஏற்பட்டால் அரசமைப்பைத் திருத்தி சிறப்பு நீதிமன்றங் >> 23


see more news in
newuthayan.com


### பணியாளர்களைத் திட்டித் தீர்த்த விவகாரம்

## பொலிஸ் மா அதிபரின் செயல் மனித உரிமை மீறலே -ராஜித

கொழும்பு, ஓக. 17
இலங்கையில் மனித உரிமை மீறல் இடம்பெறுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் வகையிலேயே பொலிஸ் மா அதிபரின் செயற்பாடு இருக்கின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித தெரிவித்தார்.
எனினும் பொலிஸ் பேச்சாளர் அவரது கருத்தை மறைமுகமாக மறுத்தார்.
பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர பொலிஸ் தலைமையக மின் தூக்கி ஊழியரைத் திட்டி அடிக்கப்போகும் காணொலிக் காட்சிகள் >> 25



முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்றது சரியாத்தான் இருக்கும் போல...

### 20ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய இருந்த

## கட்சித் தலைவர்கள் - மைத்திரி சந்திப்பு நேற்றுத் திடீர் நிறுத்தம்


### அதனால் கூட்டமைப்பின் திட்டமும் பிசுபிசுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17
அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய்வதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்திப்பதற்குச் செய்யப்பட்டிருந்த ஏற்பாடு கடைசி நேரத்தில் நேற்றுக் கைவிடப்பட்டது. இதனால் இந்தக் கூட்டத்தின் பின்னர் அரச தலைவருடன் பேசலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போட்டு வைத்திருந்த திட்டமும் பிசுபிசுத்துப் போனது.
இந்தச் சந்திப்புக்கு அரச தலைவரே அழைப்பு விடுத்திருந்தார். எனினும் இறுதி நேரத்தில் திடீரென அது நிறுத்தப்பட்டது. காரணம் எதுவும் >> 25

# நிதி கிடைத்ததும் காணி விடுவிப்பு

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.17
அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் வழங்குவதாகக் கூறிய 148 மில்லியன் ரூபா கிடைத்ததும், முல்லைத் தீவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் விரைவில் விடுவிக்கப்படும்.
இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.
அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவிலுள்ள இராணுவத்தின் தலைமையகம் உள்ளிட்ட பகுதிகளை வேறு இடத்தில் அமைப்பதற்கு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் 148 மில்லியன் ரூபா வழங்குவதாகக் கூறியிருந்தார்.
அந்த நிதி கிடைத்த பின்னர் முல்லைத்தீவில் இராணுவத்தின் முக்கிய முகாம்கள் வேறிடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெறும்.
முல்லைத்தீவில் உள்ள 111 ஏக்கர் காணி விரைவில் விடுவிக்கப்படும் - என்றார்.
அதேவேளை "தமிழ் மக்களின் காணிகளில் இராணுவம் தொடர்ந்தும் குடியிருப்பது நல்லிணக்கத்துக்குச் சாதகமான சமிக்ஞை இல்லை. மக்கள் பொறுமை இழந்துவிட்டார்கள்.
உலக நாடுகள் இனியும் பார்த்துக் கொண்டிராமல் தலையிட வேண்டும்'' என்று ஐக்கிய நாடு கள் சபையின் பொதுச் செயலாளர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் வெளிநாடுகளின் தூதுவர்களுக்குத் தான் எழுதிய கடிதத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிக்குமாறு கோரி 170 நாள்கள் வீதியிலிருந்து தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தக் காணி விடுவிப்புத் தொடர்பில் இரா.சம்பந்தன், அரச தலைவருடன் நேரடியாகப் பேச்சு நடத்தியிருந்தார்.



(ஐ)

### காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

## பன்னாட்டுத் தூதரகங்களில் உறவினர்கள் முறைப்பாடு

கொழும்பு,ஓக.17
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், கொழும்பில் அமைந்துள்ள பன்னாட்டுத் தூதரங்களில் நேற்று முறைப்பாடு செய்தனர்.
வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்த 15 பேர் அடங்கிய குழுவினர் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளனர்.
அரச தலைவர் செயலகத்துக்குச் சென்றும் பயனில்லாத காரணத்தால் தாம் பன்னாட்டுத் தூதரங்களை நாடியுள்ளனர் என்று அந்தக் குழுவினர் தெரிவித்தனர்.
காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை வெளிப்படுத்த வேண்டுமெனவும், அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க வேண்டுமென்று வலியுறுத்தியும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 6 மாதங்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். "இந்தப் பிரச்சினை தொடர்பாக அரச தலைவர், தலைமை அமைச்சர் உள்ளிட்ட பலர் பல வாக்குறுதிகளை வழங்கினர். இதுவரை தீர்க்கமான முடிவெதுவும் எட்டப்படவில்லை. நாட்டில் நடைபெற்ற போர் நிறைவடைந்து 8 ஆண்டுகள் கடந்துள்ளன. எனினும் அரசு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் இதுவரை எவ்விதத் தீர்வையும் வழங்கவில்லை" என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

## மாணவர்களால் வரையப்பட்ட சித்திரங்கள் காட்சிப்படுத்தல்

தென்மராட்சி ஓக. 17
சித்திரப் பாடம் கற்கும் மாணவர்களால் வரையப்பட்ட சித்திரங்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு தென்மராட்சிக் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
மாணவர்களால் வரையப்பட்ட 300க்கும் மேற்பட்ட சித்திரங்கள் காட்சிப் படுத்தப்பட்டன.
நிகழ்வில் மாணவர்களுக்குக் சான்றிதழ்களும், விருதுகளும் வழங்கப்பட்டன.
சமூக விழிப்புணர்வை எற்படுத்தும் வகையிலான தெரு நாடகத்தை ஆற்றுகைப்படுத்திய ஆசிரியர்களுக்கும் விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
நிகழ்வில் வர்ணங்களைப் பயன்படுத்தாமல் குமிழ்முனைப் பேனாவால் புள்ளிகள் மூலம் சித்திரங்களை வரைந்த லதுசிகன் என்ற மாணவன் விருந்தினர்களால் பாராட்டப்பட்டார்.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. விருந்தினர்களாக யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி ந.அமிர்தலிங்கம், வட மாகாணக் கல்வித் திணைக்கள ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜா, வேள்ட் விஷன் லங்கா நிறுவன சாவகச்சேரிப் பிரதேச திட்ட முகாமையாளர் அ.கி.றொசைறோ, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் நா.ராஜன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
தென்மராட்சிக் கல்வி வலய அழகியற் பாடப் பிரிவினரின் ஏற்பாட்டில் வேள்ட் விஷன் லங்கா நிறுவன அனுசரணையுடன் இந்தப் போட்டிகள் நடத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-ரி.9)





யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிளும் ஹன்ரர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்து நேற்று நடந்தது. அதில் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் யாழ்.போதனா மருத்தவமனையில் சேர்க்கப்பட்டார். (ஐ-ரி-1,8)

## அக்கரைக் கடற்கரை விவகாரம் வடக்கு முதல்வரின் கவனத்துக்கு

வடமராட்சி,ஓக.17
தொண்டமானாறு அக்கரை உல்லாசக் கடற்கரைப் பிரச்சினை தொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் நால்வர் வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரனைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
வடக்கு முதலமைச்சர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.
பிரச்சினைகளை முதல்வர் கேட்ட றிந்தார். உல்லாசக் கடற்கரைப் பிரச்சினை தொடர்பில் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் பதிலளித்தார்.
"அக்கரை உல்லாசக் கடற்கரை தனியார் ஒருவருக்கு குத்தகைக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. அதனால் அங்கு பல கலாசார சீர்கேடுகள் இடம்பெறுகின்றன.
உல்லாசப் படகுகளால் வீச்சுவலைத் தொழில் பாதிக்கப்படுகிறது" என்று தெரிவித்து கடந்த 14 ஆம் திகதி அந்தப் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
கடற்றொழில் சங்கத்தினர் மற்றும் மாதர் சங்கத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

(ஐ-ரி.26)

## பல்லேகல காட்டில் திடீர் சுற்றிவளைப்பு

கொழும்பு,ஓக.17
வனஜீவராசிகள் திணைக்களத்தால் திடீரென மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் மான்களைக் கொன்ற வேட்டைக்காரர்கள், மணல் கடத்தல்காரர்கள், மாடுகளைத் திருடும் நபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். கல்கிரியாகம வனஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்தினர் இந்த திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். அனுராதபுரம், மாத்தளை, குருணாகல் மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள கஹல்ல, பல்லேகல காட்டின் கல்கிரியாகம பிரிவில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. சந்தேகநபர்களிடம் இருந்து இரண்டு மான்களின் இறைச்சி, அவற்றின் தலைகள், துப்பாக்கி, அதற்கான தோட்டாக்கள், மின் விளக்கு, மணல் ஏற்றிய இரண்டு உழவு இயந்திரங்கள், ஒரு டிப்பர், எருமை மாடுகளை ஏற்றிச் செல்வதற்காகக் கொண்டு வரப்பட்ட பாரவூர்தி என்பன கைப்பற்றப்பட்டன. சந்தேநபர்களின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

(ஐ)

## தொழு நோய் பரிசோதனை

தென்மராட்சி , ஓக 17
தென்மராட்சி மேற்குப் பிரதேச மக்களுக்கான தொழு நோய் பரிசோதனை முகாம் கைதடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று நடத்தப்பட்டது. அந்தப் பகுதியில் தொழு நோயின் தாக்கம் உள்ளமை அவதானிக்கப்பட்டது. அதனையடுத்து மாவட்ட தொழு நோய் தடுப்புப் பிரிவினர் இந்த பரிசோதனை முகாமை நடத்தினர். அதில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர், மாவட்ட தொழு நோய்ப் பிரிவு, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர். அதில் 67 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-ரி.9)

## மின்சாரம் தாக்கி தாய், மகன் உயிரிழப்பு

**பொலனறுவையில் சம்பவம்**

கொழும்பு,ஓக.17
மின்சாரம் தாக்கி தாயும் மகனும் உயிரிழந்தனர். இந்தத் துயரச் சம்பவம் பொலனறுவை புலஸ்திகம பிரதேசத்தில் நேற்று நடந்தது. வீட்டுக்கு அருகில் இருந்த மின்சாரத் தூணிலிருந்த அறுந்து விழுந்த மின்சார கம்பியைச் சிறுவன் எடுக்க முற்பட்டுள்ளான். அதன் போது மின்சாரம் சிறுவனைத் தாக்கியது. அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவரைக் காப்பற்ற முற்பட்ட தாயாரும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. 34 வயதுடைய தாய் மற்றும் 7 வயதுடைய மகன் ஆகியோரே உயிரிழந்தனர்.
புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்பொன்று அருகில் உள்ள வீடொன்றில் நடத்தப்பட்டு வருகிறது. அங்கு கலந்து கொள்ளும் மாணவர்களுக்குப் பகல் உணவு கொடுக்க ஏற்பாடு செய்யும் நோக்கில் தாய், தனது மகனுடன் சென்றுள்ளார். அதன்போது வீட்டுக்கு அருகில் உள்ள மின்சார தூண் ஒன்றில் இருந்து அறுந்து வீழ்ந்து கிடந்த மின் கம்பியை அந்தச் சிறுவன் தொட்டுள்ளார்.
அதனால் சிறுவனை மின்சாரம் தாக்கியது. அவரைக் காப்பாற்ற தாய் முற்பட்ட போது அவர் மீதும் மின்சாரம் தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(ஐ)


# சமுர்த்திப் பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் நிறுத்தப்படா

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.17
கடந்த காலங்களில் சமுர்த்தி பெறும் பயனாளிகளுக்கு எந்தக் காரணங்களைக் கொண்டும் கொடுப்பனவுகள் நிறுத்தப்படாது.
அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கு அரசு எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ளவில்லை . இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,



கணினி மூலமாக சமுர்த்தி பயனாளிகளிடம் சில வினாக்கள் கேட்கப்பட்டிருந்தன.
இது தொடர்பிலான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சமுர்த்திப் பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கான நடவடிக்கை இது அல்ல. இது தொடர்பில் நாம் கொள்கை ரீதியில் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். இதுவரையில் வழங்கப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு தொடர்ந்தும் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படும். எந்தவித குறைப்பும் மேற்கொள்ளப்படமாட்டாது. மாறாக இதுவரை சமுர்த்தி நிவாரணம் பெறாதவர்கள் இருப்பார்களாயின் நாம் அவர்களையும் உள்வாங்கத் தீர்மானித்துள்ளோம். - என்றார். (ஐ)



## ஹேமசந்திரவின் மனைவி சேவையில் இணைந்தார்

கொழும்பு,ஓக.17
பொலிஸ் உப பரிசோதகர் ஹேமசந்திரவின் மனைவி பள்ளம பொலிஸ் நிலையத்தில் தனது பொலிஸ் சேவையை நேற்றுப் பதிவு செய்தார்.
யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலராகக் ஹேமச்சந்திர கடமையாற்றினார். அவர் நல்லூர் பின் வீதியில் கடந்த மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தார். அவரது உயிரிழப்புக்கு மதிப்பளிக்கும் வகையில் மனைவிக்குப் பொலிஸ் உப பரிசோதகர் பதவி வழங்கப்பட்டது. அவரது மனைவி திருமணத்துக்கு முன்னர் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றியிருந்தார்.
இரண்டாவது குழந்தை பிறந்த பின்னர் அவர் சேவையில் இருந்து இடை விலகினார். அவரது கணவர் உயிரிழந்த பின்னர் அவரை மீண்டும் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு பொலிஸ் ஆணைக்குழு அனுமதி வழங்கியது. சேவையில் இணைந்த போதும் இதுவரை அவருக்குச் சீருடை வழங்கப்படவில்லை. அவர் சிவில் உடையில் தனது சேவையை பள்ளம பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்டு வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பொய் முறைப்பாடு வழங்கிய பெண் பிணையில் விடுவிப்பு

தென்மராமட்சி,ஓக.17
வெளிநாட்டில் பல லட்சம் ரூபா பணத்தைக் காப்புறுதியாகப் பெறுவதற்கு 89 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன என்று பொய் முறைப்பாடு செய்த பெண் நீதிமன்றால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவரது வழக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
கடந்த 7 ஆம் திகதி இரவு 8 மணியளவில் வரணி கரம்பைக்குறிச்சிப் பகுதியில் உள்ள வீட்டில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது என்று பெண் ஒருவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். ஆண்கள் வீட்டில் இல்லாத வேளையில் பின் கதவு வழியாக வீட்டினுள் புகுந்த திருடர்கள் தன்னையும், தனது சகோதரியையும் கத்தி முனையில் பயமுறுத்தினர் என்று அவர் முறைப்பாட்டில் தெரிவித்தார் தன்னிடமிருந்த 51 லட்சம் ரூபா பெறுமதியான 89 பவுண் தங்க நகைகளையும் வெளிநாட்டு நாணயத்தாள்களையும் திருடர்கள் கொள்ளையிட்டுச் சென்றனர் என்றும் அவர் முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். வெளிநாட்டு காப்புறுதித் திட்டத்தின் கீழ் நட்டஈடு பெறுவதற்காகவே பொலிஸ் அறிக்கை பெறுவதற்காக அந்தப் பெண் முறைப்பாடு செய்தமை ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்தது. விசாரணைகளை முழுமையாக மேற்கொண்ட பொலிஸார், பொய் முறைப்பாடு வழங்கிய பெண்ணுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபரை தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆள்பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ-9)



வவுனியா, தரணிக்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கு ஒலிபெருக்கி உபகரணத்தொகுதி நேற்று வழங்கப்பட்டது. வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினரும், முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருமான ப.சத்தியலிங்கம் தனது நிதி ஒதுக்கீட்டில் உபகரணத் தொகுதியை வழங்கினார். கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் தலைமையில் நிகழ்வுநடைபெற்றது. அதில் முன்னாள் அமைச்சின் பிரத்தியேக செயலாளர் ப.சத்தியசீலன், இணைப்புச் செயலாளர்கள் பாலச்சந்திரன் சிந்துஜன், அ.சுரேந்தர் மற்றும் கிராம மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## கையூட்டுப் பெற்றார் என பிரதேச சபை தலைவர் கைது

கொழும்பு,ஓக.17
கையூட்டுப் பெற்ற குற்றச்சாட்டில் தங்காலைப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் அவரைக் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. வீட்டில் வைத்து நபரொருவரிடம் இருந்து கையூட்டுப் பெற்ற போது அவர் கைது செய்யப்பட்டார் என்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைப் பணிப்பாளர் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த சந்திரசிறி தெரிவித்தார்.
மாத்தறைப் பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவருக்கு சொந்தமான காணிக்கான வரைபடத்துக்குத், தங்காலைப் பிரதேச சபையின் அனுமதியை வழங்குவதற்காக, காணி உரிமையாளரிடமிருந்து ஒரு இலட்சம் ரூபா பணத்தை அவர் கையூட்டாகப் பெற்றார் எனவும் அவர் கூறினார்.
சந்தேகநபர் அங்குணுகொலபெலஸ்ஸ நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கடலட்டை பிடித்த மன்னார் மாவட்ட மீனவர்கள் கைது

பருத்தித்துறை,ஓக.17
பருத்தித்துறைக் கடற்பகுதியில் சட்ட விரோதமான முறையில் கடலட்டை பிடித்த மீனவர்கள் மூவர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.
அவர்களிடம் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடலட்டைகள் மற்றும் அவர்களது படகும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். கடற்படையினர் மீனவர்களை யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர். நீரியல் வளத்திணைக்களத்தினர் மீனவர்கள் மூவரையும் பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். பருத்தித்துறை நீதிவான் நளினி சுபாஸ்கரன் வழக்கை விசாரணை செய்தார். மீனவர்கள் மூவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா ஆள்பிணையில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ,ரி,8,26)



## யோசிதவிடம் சி.ஐ.டி. நேற்று வாக்குமூலம்

கொழும்பு,ஓக.17
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மகன் யோசித ராஜபக்ச விடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று வாக்குமூலம் பதிவு செய்தனர்.



கடந்த அரசின் காலத்தில் செஞ்சிலுவைச்சங்கத்தால் சிரிலிய அமைப்புக்கு வழங்கப்பட்ட டிபெண்டர் ரக வாகனத்தின் நிறத்தை மாற்றி, யோசிதவின் பயன்பாட்டுக்குப் பெற்றுக்கொடுத்தமை தொடர்பில் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதேவேளை அவரது தாயாரான ஷிரந்தி ராஜபக்சவிடம் குற்றப் புலனாய்வு பிரிவினர் நேற்று வாக்குமூலம் பதிவு செய்தனர்.
அவரது சகோதரரான ரோஹித ராஜபக்சவிடம் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவு நேற்று வாக்குமூலம் பதிவு செய்தது. (ஐ)

## தென்னிலங்கை சமுர்த்தி பயனாளிகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஓக.17
சமுர்த்தி மீளாய்வின் போது கொடுப்பனவுத் தொகை குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தென்பகுதியில் சில மாவட்டங்களில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அம்பலாந்தோட்டை ,அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன." எமக்கு கிடைக்கும் சமுர்த்தி உதவித் தொகையை குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிந்தோம்.
அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டோம்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெறுகின்ற எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக மாத்தறை - கதிர்காமம் வீதியில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டது. (ஐ)

# அனுமதியின்றி அமைத்த கடைத் தொகுதி யாழ்ப்பாண நகரில் நேற்று அகற்றப்பட்டது





யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாண நகர் மையப் பேருந்து நிலையத்துக்குப் பின்புறமாக மின்சார நிலைய வீதியில் அமைக்கப்பட்டிருந்த கடைத் தொகுதி யாழ்ப்பாண நீதிவான் மன்றின் கட்டளைக்கு அமைவாக நேற்று அகற்றப்பட்டது.

'கடைத் தொகுதி அமைந்துள்ள காணி யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்துக்குச் சொந்தமானது. அவை உரிய அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்டன. அந்தக் கடைத் தொகுதியை அகற்ற கட்டளையிட வேண்டும் என்று' கோரி யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தால் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி அழைக்கப்படும் என்று நீதிவான் மன்று அறிவித்திருந்தது. எனினும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், நகர்த்தல் பத்திரம் அணைத்து வழக்கை கடந்த ஜூலை 20ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு மன்றிடம் கோரியிருந்தது. மன்று அனுமதி வழங்கியது. அன்றைய தினம் மன்றில் சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டது.

'யாழ்ப்பாணம் நகர் பகுதியிலுள்ள அரச காணியில் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்பட்டிருக்கும் கடைத் தொகுதியை அகற்றுமாறு' யாழ்ப்பாணம் நீதிவான் மன்று கடந்த ஜூலை 25ஆம் திகதி கட்டளை வழங்கியது.

அந்தக் கட்டளைக்கு இடைக்காலத் தடை கோரி கடைத் தொகுதி உரிமையாளர்களால் சட்டத்தரணிகள் ஊடாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது. அதனை யாழ்ப்பாணம் நீதிமன்று நிராகரித்திருந்தது.

இந்த நிலையில் கடைத் தொகுதி உரிமையாளர்களின் சார்பில் சட்டத்தரணிகள் கே.வி.எஸ். கணேசராசா, கே. சுகாஸ் ஆகியோர் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப்பேராணை மனுக்களைத் தனித்தனியே தாக்கல் செய்தனர். 123 தொடக்கம் 130 வரையான இலக்கங்கள் கொண்ட 8 மனுக்களும் நாளை வெள்ளிக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றால் விளக்கம் கோரலுக்காக எடுக்கப்படும் என்று சட்டத்தரணி க. சுகாஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் இந்த நடவடிக்கை தொடர்பில் அந்தக் கடைகளின் வியாபாரிகள் தெரிவித்ததாவது:

இந்தக் கடைத் தொகுதியை அப்போது அமைச்சராக இருந்த ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் அப்போது யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வராக இருந்த யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரே எமக்குத் தந்தனர். நாம் அடாத்தாக இந்த இடத்தில் கடைகளை அமைக்கவில்லை.

இந்தக் கடைத் தொகுதியை மாநகர சபை அனுமதி பெற்றே நிரந்த கட்டடங்களாக அமைத்தோம். மாநகர சபையின் அனுமதியுடனையே மின்சாரம் பெற்றோம். இவற்றுக்காக பல இலட்ச ரூபா நிதியைக் கடன்களாக வங்கி மற்றும் தனிநபர்களிடம் பெற்றுள்ளோம். கடந்த 7 வருடகாலமாக இந்த இடத்தில் கடை அமைத்து வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தோம். திடீரென நீதிமன்றில் எமக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, எமது கடைகளை அகற்றுமாறு நீதிமன்றக் கட்டளை பெறப்பட்டுள்ளது.

நாங்கள் இனி எங்கு சென்று வியாபாரம் நடத்துவது. இந்த கடையில் உள்ள பொருள்களை ஏற்றி சென்று இறக்க கூட இடமில்லாமல் இருக்கின்றோம். பொருள்களை ஏற்றும் செலவுக்குக்கூட பணம் இல்லாத நிலையிலையே உரிமையாளர்கள் இருக்கின்றோம்.

**2 வருட வாடகை செலுத்தினோம்**

2011ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையான காலப் பகுதி வரையில் மாநகர சபை எம்மிடம் இடவாடகை அறவிட்டது. அதன் பின்னர் கடை ஊழியர்களுக்கும் மாநகர சபை ஊழியர்களுக்கும் வாடகை கொடுக்கல் தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து மாநகர சபை எம்மிடம் வாடகை அறவிடுவது இல்லை. இது தொடர்பில் நாம் மாநகர சபைக்கு நேரில் சென்று வாடகையை கொடுத்த போதிலும், அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

**டக்ளசிடம் அதிகாரமில்லையாம்**

தற்போது கடைகளை அகற்ற நீதிமன்றக் கட்டளை பெறப்பட்டமையால், அப்போதைய அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து இது தொடர்பில் முறையிட்டோம். தனது கையில் தற்போது அதிகாரமில்லை எனவும் , இது தொடர்பில் அதிகாரமுள்ளவர்களிடம் சென்று முறையிடுமாறும் எமக்கு அவர் கூறினார்.

**கைவிரித்த முதலமைச்சர்**

அதனை அடுத்து வடக்கு மாகாண முதலமைச்சரிடம் இது தொடர்பில் முறையிட்டோம். இது நீதிமன்றத்துடன் சம்பந்தப்பட்ட விடயம் என்பதனால் அதில் தன்னால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறினார்.

**மேன்முறையீடு செய்துள்ளோம்**

அதனை அடுத்து நாம் தற்போது யாழ்ப்பாணம் நீதிவான் மன்ற தீர்ப்பை எதிர்த்து கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்துள்ளோம். அந்த மனுக்கள் செப்ரெம்பர் 18ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன என்றனர்.

இயற்கை நீதிக்கு எதிரானது

அதேவேளை, "மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து எதிர்வரும் 18ஆம் திகதி ஆதரிப்பதற்காக திகதியிடப்பட்டுள்ள நிலையில் அதற்கிடையில் அவசரப்பட்டு யாழ்ப்பாணத்தில் 9 கடைக்காரர்களின் கடைகளை அகற்றுவது என்பது இயற்கை நீதிக்கு எதிரானது" என சட்டத்தரணி சுகாஸ் தனது முகநூலில் கருத்து வெளியிட்டுள்ளார்.

**கருத்து கூற ஆணையாளர் மறுப்பு**

கடைகள் அகற்றப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளிடம் கருத்துக் கேட்ட போது, "இந்த நடவடிக்கை நீதிமன்றக் கட்டளைக்கு அமைய எடுக்கப்படுவதனாலும் வழக்கு விசாரணைகள் நிறைவடையாத நிலையில் உள்ளமையாலும் அது தொடர்பில் கருத்துக் கூற முடியாது" என மறுப்புத் தெரிவித்தார்.

(வ-37-8)

# தமிழ் அரசுக் கட்சி மீது தொடர்ந்து தாக்குதல்

## செயலாளர் கவலை

செங்கலடி,ஓக.17

தமிழரசுக் கட்சி தனக்குரிய கொள்கையுடன், மக்களின் எதிர்பார்ப்புகளை உணர்ந்து செயலாற்றி வருகிறது. இதனைப் பொறுத்துக் கொள்ளாத சில கட்சிகள் தமிழரசுக் கட்சியை வீழ்த்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றன. இது ஏனைய கட்சிகளின் முறையான செயற்பாடு அல்ல. கட்சி சார்பாக எங்களாலும் பதிலளிக்க முடியும். ஆனாலும் நாகரீகம் கருதி எங்களால் கருத்துக்களைக் கூற முடியவில்லை.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கிருஸ்ணபிள்ளை துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

வடமாகாண சபையில் இடம்பெறும் குழப்பங்களுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தான் காரணம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏனைய கூட்டுக் கட்சித் தலைவர்கள் குற்றஞ்சாட்டுவது தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணசபை அமைப்பதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மும்முரமாகச் செயற்பட்டது. கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் அனைவரும் அங்கு சென்று பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அந்த அடிப்படையில் மக்களும் ஆர்வத்துடன் வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்தனர். ஆரம்பத்திலிருந்து மிகச் சிறப்பாக நடைபெற்ற மாகாணசபை அண்மைக் காலமாகச் சில பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக அங்கிருக்கின்ற மாகாணசபை உறுப்பினர்கள் தீர்மானம் எடுப்பதற்கு முழுமையான சுதந்திரம் உள்ளது. அந்த அடிப்படையில் அவர்கள் பல தீர்மானங்கள் எடுத்துள்ளனர். அவை கட்சி மட்டத்துக்குக் கொண்டு வரப்பட்டன. கட்சியின் தலைவர் வடக்கு மாகாண சபை தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தார். அந்தப் பிரச்சினைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

தமிழ் தேசிய கூட்டமைப்பிலுள்ள கூட்டுக்கட்சித் தலைவர்கள் சிலர் வெவ்வேறு விதமான அபிப்பிராயங்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பிர் சுரேஷ் பிரேமச்சந்திரனோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனோ கூறுகின்ற கருத்துக்கள் அவர்களுடைய அபிப்பிராயம் சம்பந்தப்பட்டது. அவை ஒவ்வொன்றுக்கும் தமிழரசுக்கட்சி பதிலளித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

கூட்டுக்கட்சி என்ற வகையில் பொறுப்புடன் நமக்குள்ளே வருகின்ற பிரச்சினைகளை நமக்குள்ளே பேசித் தீர்ப்பதுதான் கண்ணியமான முறை. ஆனால் அந்தக் கண்ணியம் கடந்த நிலையில் தமிழரசுக் கட்சி மிகவும் பாரதூரமாக தாக்கப்படுவதைக் காண்கின்றோம். பல்வேறு சந்தர்ப்பங்களில் நெருக்கடிகளைச் சந்தித்திருந்தாலும் அவற்றைச் சரியான முறையில் தீர்வு கண்டு வழிநடத்திக் கொண்டிருக்கின்றோம்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப தமிழர்களுடைய ஒற்றுமையைப் பலப்படுத்திக் காட்ட வேண்டும் என்ற அடிப்படையில், கூட்டுக் கட்சிகளுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற நிறுவனங்களாக இயங்கிக் கொண்டிருப்பது உண்மை. தமிழரசுக் கட்சி என்ற அத்திவாரத்தின் மேல் தான் நாங்கள் இயங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். கூட்டுக் கட்சிகள் என்ற வகையில் நமக்குள்ளே வருகின்ற பிரச்சினைகளை நமக்குள்ளே நாங்கள் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டும். இதனை மக்கள் அரங்கத்துக்கு விட்டு மக்களைக் கிலேசமடையச் செய்வது முறையல்ல. எங்கள் எல்லோரிடமும் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தமிழரசுக் கட்சி மௌனமாக இருக்கின்றது என்பதற்காகத் தொடர்ந்து தாக்குதல் நடத்துவது முறையானதல்ல. என்றார்.

(ஐ)

# தரம் 5 பரீட்சை செயலமர்வுகளுக்கு நேற்று முதல் தடை

கொழும்பு,ஓக.17

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையுடன் தொடர்புடைய வகுப்புக்கள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதற்கு நேற்று நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது. பரீட்சைகள் திணைக்களம் இதனை அறிவித்துள்ளது. புலமைப்பரிசில் பரீட்சை முடிவடையும் வரை செயலமர்வுகள், பிரத்தியேக வகுப்புக்கள் மற்றும் சிறப்புக் கலந்துரையாடல்கள் என்பவற்றை இனி நடத்த முடியாது. மாதிரி வினாப் பத்திரங்கள் தொடர்பாக ஊடகங்களில் விளம்பரப்ப டுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளை மீறிச் செயற்படுவோர் தொடர்பாக பொலிஸ் நிலையம் மற்றும் பரீட்சைகள் திணைக்களத்துக்கு 119 அல்லது 1911 ஆகிய இலக்கங்கள் மூலமும் முறைப்பாடுகளைச் செய்ய முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை நாடு முழுவதும் அமைந்துள்ள மூவாயிரத்து 17 மத்திய நிலையங்களில் தரம் 5புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு இரண்டு லட்சத்து 56 ஆயிரத்து 728 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரி)

# குடும்பத் தலைவர் திடீர்ச் சாவு

தென்மராட்சி,ஓக.17

திடீரென வாந்தி எடுத்த குடும்பத்தலைவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் சாவகச்சேரி கைதடி கிழக்குப் பகுதியில் நேற்றுக் காலை நடந்தது. கைதடி கிழக்கைச் சேர்ந்த விஜயானந்தன் விஜயரூபன் (வயது37) என்பவரே உயிரிழந்தவராவார். அவர் காலையில் திடீரென தொடர்ச்சியாக வாந்தி எடுத்துள்ளார். பின்னர் மயங்கி விழுந்துள்ளார். அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளைக் குடும்பத்தார் மேற்கொண்டனர். எனினும் அவர் வீட்டிலேயே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அவர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான், பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-ரி.9)

# கல்வியங்காடு பொதுச்சந்தையின் குறைபாடுகளைத் தீர்ப்பாரா முதல்வர்?

## வர்த்தகர்கள் திண்டாட்டம்

யாழ்ப்பாணம் ஓக. 17

“வடக்கு மாகாண முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் கல்வியங்காட்டு சந்தையில்உள்ளபிரச்சினைகளைத் தீர்ப்பதாக வாக்குறுதியளித்து ஒரு மாத காலம் ஆகிவிட்டது. எனினும் இன்றுவரைஅடிப்படைப்பிரச்சினைகள் கூட தீர்க்கப்படவில்லை” என கல்வியங்காடுவர்த்தகர்கள்கவலை தெரிவித்தனர்.

இதுதொடர்பில்வர்த்தகர்கள்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:


கல்வியங்காடு பொதுச்சந்தையில் நிலவிவரும்பல்வேறுபிரச்சினைகள் தொடர்பாகவடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு வர்த்தகர்கள் முறைப்பாடு செய்தனர். இதையடுத்து கடந்தமாதம் 18ஆம் திகதி கல்வியங்காடு சந்தைப்பகுதிக்கு யாழ். மாநகரசபையின் அதிகாரிகள் சகிதம் முதலமைச்சர் வந்தார். வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர் கேட்டறிந்து கொண்டார். நீர், சுகாதார விடயங்களைஉடன்நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்என யாழ். மாநகர அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.


இதுகுறித்துதமக்கு 3நாள்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் முதல்வர்அதிகாரிகளுக்குப்பணித்திருந்தார்.

முதல்வர்வருகைதந்தபின்மறுநாள் சந்தைக் கட்டத்தின் மேற்பகுதி கடைகளுக்கு செல்லும் இடம் துப்புரவு செய்யப்பட்டது. மரக்கொப்புகளும் வெட்டபட்டன. அதன் பின்னர் ஒன்றும் நடைபெறவில்லை. ஒரு கிழமைக்கு ஒருதரம் மாத்திரம் மேற்பகுதி கடைகளுக்கு செல்லும் வாயில்களை மாநகர சபையினர் துப்புரவு செய்கின்றனர். உரிய கழிவகற்றும் செயற்பாடுகளை அவர்கள் மேற்கொள்வதில்லை.

மேல்பகுதிமுதன்மைவாயிலில் மதுபானவெற்றுப்போத்தல்கள், வெற்றிலைத் துப்பல்கள், பொலித்தீன்கள் போன்றன அதிகளவில் காணப்படுகின்றன. இதனால் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது.

இவ்வாறு அசுத்தமாகக் காணப்படுவதால் வர்த்தக நிலையங்களுக்கு மக்கள் வரத் தயங்குகின்றனர்.





கல்வியங்காடு சந்தைக்கட்டத்தின் மேற்பகுதியில் 12கடைகளும், கீழ்ப்பகுதியில் 12 கடைகளுமாக மொத்தமாக 24கடைகள் உள்ளன. இக்கடைகளை நாம் பொறுப்பேற்று 15வருடங்களுக்குமேலாகிறது. எனினும் இன்றுவரை மலசலகூட வசதிகள். குடிதண்ணீர் வசதிகள் செய்து தரப்படவில்லை. பலமுறை கோரிக்கை விடுத்தும் பயனில்லை. யாழ். மாநகரசபைக்கு நாங்கள் மாதாந்தம் உரிய முறையில் வரி செலுத்தி வருகின்றோம். எனினும் எங்களுக்குரிய வசதிகள் அவர்களால் உரியமுறையில்செய்து தரப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற மீன்சந்தையாக எமது சந்தை விளங்குகின்றது. இதனால் பெருமளவிலான பொதுமக்கள் தினமும் வருகின்றனர் எனினும், கழிவகற்றும் செயல்பாடுதிருப்திகரமானதாக இல்லை என்று வர்த்தகர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

“கல்வியங்காட்டு பொதுச் சந்தையை பார்வையிட்ட முதலமைச்சர் எம்மிடம் அறிக்கைசமர்ப்பிக்குமாறு கோரியிருந்தார். நாம்அங்குள்ள பிரச்சினைகள் மற்றும் வர்த்தகர்களின் கோரிக்கைகள் போன்றவற்றை பெற்று அறிக்கையை அனுப்பி வைத்துள்ளோம். அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கைதொடர்பில்கடந்தவாரமும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் சந்தையில் உள்ள பொது மலசலகூடத்தைதுப்புரவுசெய்வதற்கான முயற்சியை எடுத்துள்ளோம். மரக்கறி மற்றும் பழக்கடைகளுக்கான கேள்வி கோரல்கள் இடம்பெற்றுள்ளன.

துருசுப்பகுதியை அடைத்துத் தருமாறு கோரிக்கை விடப்பட்டிருந்தது. அதன்படி நாம் அதனை அடைத்துக் கொடுத்துள்ளோம்'' - என்று யாழ்ப்பாணமாநகரஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார். (ய-8-32)

## உடுவில் கலைஞர்கள் உதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஓக.17

உடுவில் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்டவறுமைக்கோட்டின்கீழ் வாழும்கலைஞர்களுக்கு கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் உதவிவழங்கும் செயற்றிட்டத்தின்கீழ் 2017ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உடுவில்பிரதேச கலாசார அதிகாரசபையில் அங்கத்துவமுடைய கலைஞர்கள் 55வயது தொடக்கம் 77 வயதுக்குட்பட்டவர்கள், மாதாந்த வருமானம் 7500 ரூபாவுக்கும் குறைந்தவர்கள், 15 வருடங்களுக்கு மேல் கலைப்பணியாற்றிய அரச உதவி இதுவரை பெறாத கலைஞர்கள் இந்த உதவிக்காக விண்ணப்பிக்க முடியும்.

உடுவில்பிரதேசகலாசார அதிகாரசபையின் ஒருங்கிணைப்பாளரிடம் விண்ணப்பங்களைப் பெறமுடியும்.

விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 28ஆம் ஆம் திகதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு வலி. தெற்கு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ய)

## சந்நிதியில் சொற்பொழிவு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும்வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில்நாளைவெள்ளிக்கிழமை நாளை முற்பகல் 10.30 மணிக்கு கந்த புராணம் எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிமூத்த விரிவுரையாளர் ஆ. குமாரவேல் சொற்பொழிவை வழங்குவார். (4-173)

## கந்தபுராண படிப்புநிறைவு

யாழ்ப்பாணம்.ஓக.17

நீர்வேலி தெற்கு ஸ்ரீ முருகையா கோயிலில் இன்று வியாழக்கிழமை கந்தபுராண படிப்புநிறைவைமுன்னிட்டு மு.ப.10 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து நண்பகல்மகேஸ்வர பூஜை நடைபெறும் அறிவிக்கப்பட்டது. (4-17)

## கால்நடை வைத்திய முகாம்களை மேலும் விரிவாக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்ப்பாணமாவட்டத்தில்முன்னெடுக்கப்பட்டுள்ள கால்நடைகளுக்கான மருத்துவமுகாம் மக்களுக்கு பயனுள்ள வகையில் அமைத்துள்ளது. இதனால் எதிர்வரும் காலத்தில் அதிகமான மருத்துவமுகாம்களை நடத்த உரியவர்கள் முன் வரவேண்டும் என மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர் என்றுயாழ்ப்பாணமாவட்டகால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடைகளை வாழ்வாதாரத்துக்காக வளர்ப்பவர்கள்அதிகம்உள்ளனர். மக்கள்தாம் வளர்க்கும் கால்நடைகளுக்கு நோய்கள் ஏற்பட்டால் அருகில் உள்ள கால்நடை வைத்தியநிலையங்களுக்கு கொண்டு செல்கின்றனர். அவ்வாறு செல்லமுடியாத நிலையில், நோய்கள் கண்டுபிடிக்கப்படாமலே சில கால்நடைகள் இறக்கின்றன.

இவ்வாறுஉள்ளமக்கள்மத்தியில்நாம் தேடிச்சென்று கால்நடைகளுக்கான மருத்துவ உதவிகளை வழங்கும் போது ஏராளமான மக்கள் பயனடைகின்றனர்.

கடந்தவருடம் கோப்பாய் இடைக்காடு பிரதேசத்தில் நடமாடும் மருத்துவ முகாம் ஒன்றை நடத்தி இருந்தோம். அதுஎமக்குவெற்றியைத்தந்திருந்தது. அதனைத் தொடர்ந்து இந்தவருடம் 4 நடமாடும்முகாம்களைநடத்தஅனுமதி கிடைத்தது.

அதன்படி தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், கரவெட்டி மற்றும் சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் நடமாடும் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன்போது கால்நடைகளுக்கு கருத்தடை, ஏனையசத்திரசிகிச்சைபோன்ற பல்வேறு சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் பறவைகளுக்கான சிறப்பு மருத்துவ சிகிச்சைப் பிரிவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேசங்களுக்கு நாம் தேடிச்சென்று இவ்வாறான நடமாடும் மருத்துவ முகாம்களை மேற்கொள்வதால் அது மக்களுக்கு மிகவும் நன்மை தரக்கூடியதாக அமைகின்றது. எதிர்காலத்தில் இவ்வாறான மருத்துவ முகாம்களை அதிகம்நடத்தப்படும்-எனதெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

## மந்திகை வைத்தியசாலைக்கு 50,000 டொலர் பெறுமதியான இருதயத்தை இயக்கும் கருவி

### புலம்பெயர் சமூகம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஓக.17

பருத்தித்துறை ஆதாரமருத்துவமனைக்கு 50 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியானஇருதயத்தைதற்காலிகமாக செயற்பட வைக்கும் உபகரணம் ஒன்று கடந்த திங்கட் கிழமை மருத்துவமனைநிர்வாகத்திடம்கையளிக்கப்பட்டது.

பிரித்தானியாவில் வாழும் வடமராட்சிப்பிரதேசமக்கள் இந்த உபகரணத்தை சிங்கப்பூரில் கொள்வனவு செய்து அனுப்பியுள்ளனர்.

இந்த உபகரணம் இல்லாத காரணத்தால் மருத்துவமனையில்அனுமதிக்கப்படும் இருதய நோயாளர்கள் இவ்வளவுகாலமும் நோயாளர் காவுவண்டிகள் மூலம் யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

அண்மையில் மருத்துவமனையைப் பார்வையிட வந்த பிரித்தா னியாவில் வதியும் வடமராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களிடம் நிர்வாகத்தி னர் வேண்டுகோள் விடுத்திருந்த னர். இதனையடுத்து இக் கருவி வழங்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் நாடுகளில் வதியும் வடமராட்சிப் பிரதேச மக்கள் கடந்தமாதம் மூக்கடைப்பைஇயங்கச்செய்யும் உபகரணங்கள் மற்றும் சத்திர சிகிச்சைக்குப்பயன்படுத்தும்கருவிகள் உட்படசுமார் 27மில்லியன்ரூபாபெறுமதியானமருத்துவஉபகரணங்களை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ய-9)

## இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு அபிவிருத்திச் சபையினர் உதவவேண்டும்

### தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கோரிக்கை

தென்மராட்சி, ஓக.17

“தென்மராட்சி பாடசாலைகளின் இணைபாட விதான செயற்பாடுகளுக்கு அபிவிருத்திச் சபையினர் உதவி செய்து மாணவர்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கவேண்டும்” என வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாவகச்சேரியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற தென்மராட்சி விழா 2017இல் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன் வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த ஐந்து வருடங்களாக வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினர் சுகாதார மேம்பாடு மற்றும் குடிதண்ணீர் விநியோகம் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வந்தனர்.

இந்தநிறுவனம் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் தனது சேவைகளை நிறைவு செய்யவுள்ளது. அந்த நிறுவனத்தினர் தமது வேலைத்திட்டங்களுக்கு மேலதிகமாக மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கும் அனுசரணை வழங்கியிருந்தனர்.

எனவே, அவர்களால் விட்டுச்செல்லும் பணிகளை தென்மராட்சி அபிவிருத்திச் சபையினர் தொடர்ந்து மேற்கொண்டு மாணவர்களை ஊக்குவிக்கவேண்டும்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பிரதேச நலனுடன் மாணவர்களின் நலனிலும் அக்கறையுள்ளவர்கள் என்பதைக் காணமுடிகிறது. எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சொந்த நாட்டில் அக்கறைகொண்டு மக்களுக்கு உதவிகள் புரிவது அவர்களின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. போர்க்காலத்தில் அழிவடைந்த தென்மராட்சிப் பிரதேசத்தை ஒரு வளமிக்க பிரதேசமாக மாற்ற புலம்பெயர் நாடுகளில் உள்ள பெருந்தகைகள் எடுத்துவரும் செயற்பாடுகள் பாராட்டத்தக்கது. இந்த முயற்சிகளில் மாணவர்களின் நலனும் கருத்தில் கொள்ளப்படுவதை நாம் அனைவரும் வரவேற்கின்றோம்-என்றார். (ய-9)

# குளப்பிட்டி விபத்தில் படுகாயமடைந்தவரை அடையாளம் காணவும்

யாழ்ப்பாணம், ஓக.16
குளப்பிட்டிச்சந்தியில்கடந்தசனிக்கிழமைமுற்பகல்இடம்பெற்ற வீதி விபத்தில் நபர் ஒருவர் படுகாயமடைந்தார்.
இவர்தற்போதுயாழ். போதனாவைத்தியசாலையில்சேர்க்கப் பட்டுள்ளார். ஐம்பது வயது மதிக்கத்தக்க பொது நிறமுடைய ஒருவரே இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளார்.
படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் இருக்கும் இவருக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின் றது. எனினும், இவரது பெயர் மற்றும் முகவரி தொடர்பில் எவ் வித விவரங்களும் இல்லை. இவரது உடல்நிலை கவலைக்கி டமாக உள்ளது. எனவே, உறவினர்களை தொடர்பு கொள்ளு மாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சிறி பவா ணந்தராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (ய)

## தொழில்நுட்பவியல் மாணவர்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும்

யாழ்ப்பாணம், ஓக. 17
யாழ்ப்பாண. உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 14ஆவது பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது.
2016ஆம் கல்வியாண்டில் முழுமையாக கற்கை நெறியைப் பூர்த்தி செய்த அனைத்துக் கற்கை நெறிகள் சார்ந்த மாண வர்களும் எதிர்வரும் 10 அம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு உரிய ஆவணத்தைப் பெற்று பட்டமளிப்பு விழா விற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு உதவிப்பதிவாளர் கேட்டுள்ளார். (4)

## நடுவர் சபை அமர்வு இடம்பெறாது

யாழ்ப்பாணம், ஓக. 17
நல்லூர் நடுவர் சபை அமர்வு நல்லூர் முருகன் ஆலயத் தேர்த்திருவிழா காரணமாக எதிர்வரும் ஞாயிறுக் கிழமை இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டது.
இந்தத் தினத்திற்குப் பதிலாக எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக் கிழமை அமர்வு இடம்பெறும் என்று நடுவர் சபைத்தவிசாளர் நா.நித்தியானந்தன் தெரிவித்தார். (4)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 70 | 70 | 60 | 50 |
| கத்தரி | 140 | 80 | 90 | 70 | 100 |
| மரவள்ளி | 80 | 60 | 70 | 60 | 70 |
| பயிற்றை | 120 | 130 | 150 | 100 | 140 |
| பாகல் | 200 | 120 | 200 | 160 | 160 |
| க.கிழங்கு | 90 | 130 | 130 | 130 | 80 |
| பெ.வெங்காயம் | 140 | 120 | 130 | 130 | 130 |
| சி.வெங்காயம் | 150 | 170 | 150 | 160 | 180 |
| பூசணி | 80 | 60 | 50 | 50 | 60 |
| தக்காளி | 160 | 120 | 130 | 140 | 160 |
| வாழைக்காய் | 100 | 90 | 70 | 60 | 100 |
| கீரை | 20 | 20 | 25 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 20 | 30 | 30 |
| ப.மிளகாய் | 300 | 290 | 350 | 290 | 280 |
| புடோல் | 80 | 80 | 60 | 100 | 60 |
| கோவா | 140 | 140 | 130 | 100 | 100 |
| வெண்டி | 80 | 80 | 80 | 100 | 60 |
| போஞ்சி | 160 | 150 | 130 | 160 | 180 |
| லீக்ஸ் | 120 | 100 | 90 | 100 | 120 |
| தேங்காய் | 60 | 60 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 120 | 110 | 80 | 100 | 120 |
| தேசிக்காய் | 100 | 60 | 70 | 80 | 100 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 160 | 150 | 150 | 160 | 180 |
| கரட் | 100 | 180 | 190 | 270 | 200 |
| முருங்கைக்காய் | 50 | 90 | 50 | 40 | 60 |

# சைக்கிள் காவல் நிலையங்களுக்குள் மாநகரசபையினர் திடீர் பாய்ச்சல்

### மோசடிகள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17
யாழ்ப்பாண மாநகரசபை யால் நிர்ணயிக்கப்பட்ட கட்ட ணத்துக்கு மேலதிகமாக கட்ட ணம் வசூலித்த மூன்று வாகன பாதுகாப்பு நிலை யங் கள் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என யாழ்ப்பாண மாநகரசபை யின் ஆணை யாளர் பொ.வாகீசன் தெரிவித் தார்.
நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு நல்லூர் ஆலய சூழலில் அமைக்கப்பட் டுள்ள வாகன பாதுகாப்புத் தரிப்பிடங் களில் மோட்டார் சைக்கிள்க ளுக்கு 10 ரூபாவும் துவிச்சக்கர வண்டிக ளுக்கு 05ரூபாவும் என மாநகர சபை யினால் நிர் ணயிக்கப்பட்டுள்ளது.
இருந்தபோதிலும் சில வாக னத் தரிப்பிட உரிமையாளர் களால் மோட்டார் சைக்கிள்க ளுக்கு 20 ரூபாவும் துவிச் சக் கர வண்டிகளுக்கு 10ரூபாவும் அறவிடப்படுகின்றது என எமக்கு ஆதாரபூர்வமாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன.
அவ்வாறு அதிக கட்டணத்தை வசூலித்த வாகனப் பாதுகாப்பு நிலையங்களை நாம் சுற்றி வளைத்தோம். அப்போது அங்கு வழங்கப்படும் பற்றுச் சீட்டுக்களில் மாநகரசபையின் இறப்பர் முத்திரையும் பொறிக் கப்பட்டு இருக்கவில்லை என் பது கண்டறியப்பட்டுள் ளது. கைப்பற்றப்பட்ட பற்றுச்சீட்டு களை நாம் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்ப டைத் துள்ளோம். மேலதிக நட வடிக் கைகளை மேற்கொண்ட பொலிஸாரிடம் முறைப் பாட்டையும் பதிவு செய்துள் ளோம். இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்வார் கள் என்றார். நல்லூர் ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள வாகனப் பாதுகாப்பு நிலை யங்களில் நிர்ணயிக்கப்பட்ட கட்ட ணத்தை விட அதிகமான கட்ட ணத்தை அறவிடுகின்ற னர்.
இதுதொடர்பில் யாழ்ப்பான மாநகர சபை நடவடிக்கை எடுக்காது அவர்களுக்கு ஆதர வாக செயற்பட்டு வருகின்றது என பொது மக்கள் குற்றம் சாட்டி வந்தனர். மேலும் கடந்த வருடமும் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்றன. இருந்த போதிலும் இது தொடர் பில் மாநகரசபை நடவடிக்கை எடுக்க தவறி விட்டது எனத் தெரிவிக்கப்பட்டு வந்த நிலை யில் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ய-8)

## தவறவிட்டவர் பெற்றுக்கொள்ளவும்

மீசாலை வடக்கு வேம்பிராய் வரணிசாலையில் திங்கட் கிழமை ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
இந்தப் பணத்தை எடுத்தவர் அதனை சாவகச்சேரி பிரதேசச பையின் வரணி உப அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்.
எனவே, பணத்தை தவறவிட்டவர் உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்துசாவகச்சேரி பிரதேச சபையின் உப அலுவலகத்தில் அதனைப் பெற்று க் கொள்ளமாறு அலுவ லகப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (ய-9)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 900 | 800 |
| நண்டு | 400 | 400 | 500 | 500 |
| கணவாய் | 700 | 600 | 700 | 700 |
| பாரை | 600 | 500 | 500 | 500 |
| சுறா | 500 | 700 | 800 | 900 |
| சீலா | 500 | 400 | 500 | 500 |
| விளை | 600 | 400 | 350 | 300 |
| முரல் | 400 | 350 | 350 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 450 | 450 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 600 |
| ஓரா | 400 | 300 | 300 | 400 |
| திரளி | 300 | 200 | 200 | 200 |
| நகரை | 300 | 150 | 400 | 200 |
| சூடை | 200 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 250 | 200 | 300 | 300 |
| திருக்கை | 400 | 200 | 400 | 250 |
| மதனம் | 250 | 150 | 200 | 300 |
| கொய் | 150 | 30 | 80 | 50 |
| பாலை | 250 | 200 | 500 | 300 |
| வாழை | 200 | 200 | 400 | 250 |

# நல்லூர் கஜவல்லி திருவிழா

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 17
நல்லூர் கந்தசுவாமிகோயில் முன்பாக அமைந் துள்ள செல்லப்பாசுவாமிகள்நினைவாலயத்தில் இன்று சொற்பொழிவு இடம்பெறும்.
யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலய ஆதீன குரு பிரம்மசிறி கு.சரவணபவானந்தசர்மா தலை மையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சொற் பொழிவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ் நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்த வுள்ளார். (4)

++++++++++++++++

## பாட்டுக் கச்சேரி

யாழ்ப்பாணம், ஓக. 17
இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க் காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 தொடக்கம் 8 மணி வரை இசைக்கச்சேரி இடம் பெறும்.
தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுச ரணையுடன் நடத்தும் இந்தத் தெய்வீக இசையரங் கில் பாட்டு சுகன்யா அரவிந்தன், வயலின் ஆர். ஜெயராமன், மிருதங்கம் வி.ரமணா, கடம் கே.ரவிசங்கர், முகர்சிங் சி.செந்தூரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (4)

++++++++++++++++

## கந்தபுராண எழுச்சி

யாழ்ப்பாணம், ஓக. 17
"கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடை யாளம்" தொனிப்பொருளிலான நிகழ்வில் இன்று யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் கலந்து கொள்ளவுள்ளார்.
நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவில் கந்த புராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுரர்ண எழுச்சிவிழா இன்று மாலை 6.30 மணிக்குநல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும் . (4)

++++++++++++++++

## கண்டேன் சீதையை

யாழ்ப்பாணம் ஓக.17
நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் "சங்கீத கதாப்பிரசங்கம்" நிகழ்வில்இன்று வியாழக்கிழமை கம்பராமாயணத்தின் "கண்டேன் சீதையை " பகுதி இடம்பெறவுள்ளது. கான கதா வாரிதி கலாபூ ஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா இதனை நிகழ்த்தி வருகின்றார். நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் 8 மணிவரை இந்த நிகழ்வு இடம்பெறும். (4-ரி)




ஆண்களுக்கான இடுப்புப் பட்டிகள் பல வகைகளில் நவீன வடிவில் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை ஆயிரத்து 300 ரூபாவில் இருந்து ஆயிரத்து 500 ரூபா வரைவிற் பனை செய்யப்ப டுகின்றன.

இது புதுசு

## பசுக்களை செயற்கைமுறை சினைப்படுத்தும் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஓக. 17
வடக்கு மாகாணத்தில் பசுக்களை செயற்கைமுறையில் சினைப்படுத்தும் முறைமை தொடர்பான பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

"பால் உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சியில் பசுமாடுகளை செயற்கை முறையில் சினைப்படுத்துவதற்கான பயிற்சிப்பட்டறைக்கு விண்ணப்பிக்க விரும்பு பவர்கள் அவர்களது பிரதேசங்களில் உள்ள கால்நடை சுகாதார உற்பத்தி திணைக்களங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்" என வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்க ளத்தின் பணிப்பாளர் எஸ். வசீகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
வடக்கு மாகாணத்தில் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் முயற்சியாக நல்லின பசுக்களை உருவாக்க செயற்கைமுறை சினைப்படுத்தல் இடம்பெற்றுவருகின்றது. இந்த செயற்கை முறை சினைப்படுத்தல் முறைமை தொடர்பில் எமது திணைக்களத்தின் ஊடாக பயிற்சியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

செயற்கைமுறைச் சினைப்படுத்தலை பயில்வதன்மூலம் வேலையற்ற இளைஞர்கள் சுயதொழில் செய்யக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இதனூடாக வாழ்வாதாரத்தை அதிகரிக்கக்கூடிய சூழ்நிலையும் உருவாகின்றது.

எனவே, ஆர்வம் உள்ளவர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்களை தங்களது பிரதேசங்களில் உள்ள எமது திணைக் களத்துக்குச் சென்று பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இதில் இணைந்து பயிற்சியைப் பெற்று வெளியேறும் பயனாளிகளுக்கு எமது திணைக்களத்தின் ஊடாக சான்றிதழ்களும் வழங்கப்படும். அந்த சான்றிதழை தமது அடையாள அட்டையாக பாவிப்பதுடன் பசுமாடுகளுக்கு செயற்கைமுறையில் சினைப்படுத்துவதற்கு அங்கீகாரம் உடையவர் என்பதையும் பெறமுடியும்.

இந்தப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது ஜி.சி.ஈ. சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

பயிற்சிகள் அனைத்தும் குழுவாக உருவாக்கப்பட்டு அவர்களுக்கு முழுமையான வழிகாட்டல்கள் மற்றும் பயிற்சி வகுப்புகள் இடம்பெறும். ஒருகுழுவில் குறைந்தது 15பேர் உள்ளடக்கப்படுவர்.

எமது திணைக்களத்தில் பயிற்சியை முடித்து வெளியேறுபவர்களுக்கு நாம் அவர்களுக்கு சுயதொழில் செய்வதற்கான வழிகாட்டல்களையும் வழங்குகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் உள்ள வேலையற்ற இளைஞர்கள் இந்த பயிற்சிக்கு விண்ணப்பித்து பயனடையலாம். இதன் ஊடாக வடக்கில் பசுக்களின் பால் உற்பத்தியை அதிகரிப்பதுடன் சுய வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்கவும் வழிவகுக்கின்றது.

அத்துடன் செயற்கை முறை சினைப்படுத்தல் முறைமையும் பொதுமக்கள் மத்தியில் பரவலாகச் சென்றடையும் நிலை ஏற்படும்.

இதன்மூலம் எதிர்காலத்தில் கட்டாக்காலி மாடுகளின் அதிகரிப்பை சடுதியாகக் கட்டுப்படுத்த வாய்ப்பு ஏற்படும் -என்றார்.

(ய-8)

# நெடுந்தீவு அரச அலுவலகங்களில் அதிகாரிகள் இல்லை

### பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக.17
நெடுந்தீவில் இயங்கும் அரச செயலகங்கள் எவற்றிலும் நிரந்தரமான பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இன்றி உதவியாளர்களே பணிபுரிகின்றனர். கூட்டங்களுக்கு மட்டுமே அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகின்றனர். " என நேற்றைய தினம் இடம்பெற்ற நெடுந்தீவுப் பிரதேசஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில்சுட்டிக்காட்டப்பட்டது.

நெடுந்தீவுப் பிரதேச செயலாளர் பிரிவுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்நேற்று. இணைத் தலைவர்களில்ஒருவரானசி.சிறிதரன் தலைமையில் பிரதேச செயலகமாநாட்டுமண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இங்கு கலந்துகொண்ட பொது அமைப்புக்கள் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது;
நெடுந்தீவில் இயங்கிய பாடசாலைகளில் ஆங்கிலம், சங்கீதம் மற்றும் சித்திரப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை.

இதேபோன்று இங்கு இயங்கும் ஒரே ஒரு வைத்தியசாலையில் இருந்த மருத்துவர்கள் இருவரும் வெளிநாடுகளுக்குச் சென்றவிட்டனர். இதனால்கடந்தவாரத்தில் மட்டும் 3 நாள்கள் வைத்தியசாலை பூட்டப்பட்டிருந்தது. விவசாயத்திணைக்களம், மீன்பிடித் திணைக்களம், நீர்வழங்கல் சபை, இறப்பு விசாரணைஅதிகாரிஎனஎந்தவொரு திணைக்களத்திலும்அதிகாரிகள் இல்லை. உத்தியோகத்தர்களே பதில் கடமை புரிகின்றனர். அவ்வாறானால்எவ்வாறுநெடுந்தீவு அபிவிருத்தியடையும்?

இந்தஅதிகாரிகளிடம்நாம்போய் எதையாவது கூறினால் அவர்கள்போய்தமது அதிகாரிகளிடம் கூறுவார்கள். அதிகாரிகள்எதையாவதுகூறஅதைக்கேட்டுவந்து இங்கு கூறுகின்றனர்.

எனவே பொறுப்பான அதிகாரிகள்இங்கேநியமிக்கப்படவேண்டும் -என்றனர்.

(ய-101)

# என்னதான் சாதித்தோம்?

### வடக்கு மாகாணசபையில் இன்று சிறப்பு அமர்வு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 17
வடக்குமாகாணசபைஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை சாதித்ததுஎன்ன? என்பதுதொடர்பில் விவாதிக்கும் சிறப்பு அமர்வின் இரண்டாம் பகுதி இன்றையதினம்நடைபெறவுள்ளது.

சபையின்செயற்பாடுகள்குறித்து ஆளும்கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கடும் விமர்சனங்களை முன்வைத்துவந்தனர்.

இந்தநிலையில்வடக்குமாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர் சி. தவராசா மற்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் இணைந்து வடக்கு மாகாண சபை இதுவரைகாலம் சாதித்தது தொடர்பில்ஆராயசிறப்புஅமர்வு நடத்தவேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனைத்தொடர்ந்துகடந்தமூன்றரை வருடங்களில் மாகாண சபை என்ன செய்தது? என்ன செய்யவில்லை? என்பன குறித்துப் பட்டியலிட வேண்டும் என்றும், அவை குறித்து விவாதமொன்று நடத்தப்பட வேண்டும் என்றும்சபைஉறுப்பினர்களால் மீளவும் வலியுறுத்தப்பட்டது.

அத்தோடுஇவ்வாறானவிவாதம் அல்லது மீளாய்வுக் கூட்டம் ஒன்றைநடத்துவதன்ஊடாகவே மாகாணசபை மீதான சில விமர்சனங்களையும்பலவதந்திகளையும் நீக்க முடியுமென்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மாகாணசபைசெய்தவிடயங்கள் தொடர்பில்ஆராய கடந்த 21ஆம் திகதி சிறப்பு அமர்வின் முதல் பகுதி இடம்பெற்றது. அதில்எதிர்க்கட்சித் தலைவர் மாகாணசபை மீதுமிகமோசமானகுற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

அவ்வாறுமுன்வைக்கப்பட்டகுற்றச்சாட்டுகள் மற்றும் அங்கு கேட்கப்பட்ட விடயங்க ளுக்கு இன்றைய அமர்வில் முதலமைச்சர் பதில் வழங்கவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(ய-8)



நல்லை ஆதீனம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் 59 வருடங்கள் நிறைவடைந்தன. அதனையொட்டி நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மதிப்பளிக்கப்பட்டார். ஆதீனத்தில் பூசை இடம்பெற்றது. பின்னர் வருடாந்தம் இடம்பெறுவதுபோன்று நல்லூர் ஆலயத்தைச் சுற்றி வலம் வந்தனர். இந்த நிகழ்வுகளில் ஆதீன முதல்வரு டன் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

(4-8)



21ஆம் திருவிழா

எங்கள் மனக்குறைகளை தீர்த்திடு எம் வடிவேலா!

உன் பெயர் சொல்ல
இனிக்குதடா முருகா
வதனமதில் எழில்
சொரிந்து கொட்டுதையா
வேதனைகள் பல இருந்தாலும்
உன் பெயர் சொன்னதும்
மனம் உன்னை நினைத்து
உருகிடுமையா
வா வேலா வந்து எம்மைக்
காத்திடு வேல் மருகா
முன்வினைகள் நாம்
செய்த பாவங்கள்
அனைத்தையும் நீக்கி
எங்கள் மனக்குறைகளை
தீர்த்திடு எம் வடிவேலா!

சுபானுஜன், தெல்லிப்பழை.

நல்லவரம் தருவான் நல்லூரான்

நானிலம் போற்றும்
நல்லூரினிலே நல்லாட்சி
புரிகின்ற நல்லைக்கந்தா
நல்ல நாத ஓசை தரும்
நான்கு கண்டாமணிகளின்
நல்லிசை ஒலித்திடவே
வேண்டுவார் வேண்டும்
வரமளிக்கின்ற வேலவா
நாயகிகள் இருவரும்
அருகினில் வர
தொண்டர் தோளினிலே
ஆனந்தமாய்
அசைந்தாடி வருபவனே
அலங்காரக்கந்தா
இருள் போக்கி ஒளிவீச
இருபத்தைந்து தினங்களும்
உலாவந்து
எம்மை எல்லாம் ஆனந்த
வெள்ளத்தில்
ஆழ்ந்திடும் முருகா
இன்னல்கள் போக்கி
நல்லவரம் தருவான்
நல்லூரான்

தே. இளங்கோவன்

கோடிகண்கள் வேண்டுமய்யா குமரன் எழிலைக்காண

அலைகடல் எனப்பக்தர்கள்
வெள்ளம் திரண்டோடும்
நல்லை வீதியிலே
வள்ளி தெய்வானை சகிதம்
தங்கத்தேரேறி வருவோனே
சித்தர்கள் வாழ்ந்து தடம் பதித்த
நல்லை நகர் வீதியிலே
தன்னை நாடி ஓடி வந்த
பக்தர்களின் குறைதீர்ப்பவனே
வானவர்கள் துயர்களைய
கானமயில் மீதேறி
சேனையோடு முழு அரசுக்குடி
சிதைத்தவனே
தொல்லைகள் நீக்கி துயர்
தீர்ப்பாய் வேலவனே
முல்லைச் சிரிப்பாலே
அன்பர்கள் துயர்தீர்ப்பவனே
நல்லைக் குமரன் எழிலைக்
காண கோடி கண்கள்
வேண்டுமய்யா
நல்லை நகர் நாத
நம்மக்களுக்கொரு தீர்வை
வெகுவிரைவில்தா

க. கனகசபை
சண்டிலிப்பாய்



## இரும்புச் சத்து அகத்துறிஞ்சலை அதிகரிக்கச் செய்திடுவோம்!

★ விற்றமின் சி அதிகமுள்ள புளிப்பான பழங்களை உணவு வேளையின் பின் உண்போம்.

★ சமையலின் பின் எலுமிச்சம் பழச்சாறை கறிகளுக்கு சேர்த்திடுவோம்.

★ கடலை, பயறு போன்றவற்றை 24 மணித்தியாலங்கள் ஊற வைத்து முளையரும்பிய பின்னர் அவித்து உண்பது சிறந்தது.

உணவு உண்பதற்கு முன்பாகவோ பின்பாகவோ தேனீர், கோப்பி, அருந்துவதைத் தவிர்த்திடுவோம்.

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*



# குப்பை சேகரிக்க பொதுமக்களே ஒத்துழையுங்கள்!

## உள்ளூராட்சித்திணைக்களம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக.17

உள்ளூராட்சித்திணைக்களங்களின் கீழ் உள்ள சபைகளில் குப்பைகள் அள்ளுதல் மற்றும் சேகரித்தல் தொடர்பான செயற்பாடுகளுக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று உள்ளூராட்சி திணைக்களம் கேட்டுள்ளது.

இதுபற்றி திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் நன்மைகருதி குப்பைகளை அள்ளுதல் மற்றும் சேகரித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை சபைகள் முன்னெடுத்து வருகின்றன. குப்பைகளை உரியமுறையில் சேகரிப்பதற்கு இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கான குப்பைத் தொட்டிகளும் வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் குப்பை அள்ளுவதற்கான வாகனக்குறைபாடுகள் பற்றி தெரியப்படுத்தும்பட்சத்தில் அவற்றைக்கொள்வனவு செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

குப்பைகளைத் தரம் பிரித்து சேகரிப்பது தொடர்பில் வீடுவீடாகச் சேகரிக்கும்பணிகளும் நடைபெற்றுவருகின்றன. இவ்வாறு அவர்களால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்கு சிலர் இடையூறு ஏற்படுத்துகின்றனர்.




பிரதேசத்தில் வாழும் குடியிருப்பாளர்களின் நன்மை கருதியே குப்பைகள் அகற்றுவதற்கு இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் குப்பைகளை உரிய இடத்தில் போடாமலும், இரவு வேளைகளில் அதனை மூட்டைகளாகக் கட்டிப் போடும் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறான சிலரின் நடவடிக்கைகளால் மக்கள்தான் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே, பிரதேச சபைகள் மற்றும் மாநகர சபையின் இந்தச் செயற்பாடுகளுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

கண்ட இடங்களில் குப்பை போடுபவர்கள் இனங்காணப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சபைகளுக்கு அதிகாரம் உண்டு- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

## வடக்கில் அமைக்கப்பட்ட பொதுக் கட்டடங்களை திறக்குமாறு பணிப்பு

யாழ்ப்பாணம் ஓக.17

வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டு நீண்டகாலமாகத் திறக்கப்படாத நிலையில் இருக்கும் கட்டடங்களை பாவனைக்கு எடுக்குமாறு பிரதேச சபைகளைப் பணித்துள்ளதாக உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் மக்களின் நன்மைகருதி நெல்சிப் திட்டத்தின் ஊடாக பலமில்லியன் ரூபா செலவில் கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

அவற்றில் சில இன்னமும் திறக்கப்பபடாமல் உள்ளன. அவற்றை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

வடக்குமாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்ட கட்டடங்கள் ஏன் இன்னமும் திறக்கப்படாமல் உள்ளன. அதிலே காணப்படும் குறைபாடுகள் என்ன? என்பது தொடர்பில் ஆராய்ந்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று மாவட்ட உதவி ஆணையாளர்களைப் பணித்துள்ளேன்.

இதன் அடிப்படையில் அந்த விவரங்க்ள் எமக்கு கிடைக்கப்பெற்று வருகின்றன.

கட்டடங்கள் அமைக்கப்படும் பொழுது அந்தபிரதேசத்தைச் சேர்ந்த பிரதேசசபைகளின் தலையீடு, அனுமதிபோன்ற விடயங்களின் பின்னரே அவை அமைக்கப்பட்டன.

ஆகவே கட்டடங்களைத் திறப்பதில் அவர்களின் பங்கும் உள்ளது. மக்கள் பயன்படுத்தும் நிலையில் உள்ள கட்டடங்களைத் திறக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதேச சபைகளைப் பணித்துள்ளோம்- என்றார். (ய-ரி)

## சந்நிதியானின் திருவிழா ஓக. 22ஆம் திகதி ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஓக.17

சரித்திரப்பிரசித்திபெற்ற தொண்டமானாறு சிறி செல்வச்சந்நிதி முருகன் கோவில் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் மாலை 5.00 மணிக்கு இரண்டாம் திருவிழா இடம்பெறும்

முக்கிய திருவிழாக்களில் 5ஆம் திருவிழாவான விநாயகரும், வேலவரும் எழுந்து அருளும் சதுர்த்தி திருவிழா 25ஆம்திகதி வெள்ளிக்கிழமையும், 10ஆம் திருவிழாவான பூங்காவனத் திருவிழா 30ஆம்திகதி புதன்கிழமையும்,

11ஆம் திருவிழா கைலாசவாகன திருவிழா 31ஆம் திகதி வியாழக்கி ழமை யும் இடம்பெற உள்ளன.

அடுத்தமாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், 6ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

அன்றையதினம் மாலை 5 மணிக்கு இடம்பெறும் மௌன உற்சவத்துடன் திருவிழா நிறைவு பெறும்.

திருவிழா காலத்தில் தினமும் காலைத்திருவிழா 8 மணிக்கும் மாலைத்திருவிழா மாலை 7 மணிக்கும் ஆரம்பமாகும்.

திருவிழாக் கால முதன்மை குருவாக சிவஸ்ரீ அரியரத்தின ஐயர் லோகேஸ்வர ஐயர் பணியாற்றுவார் என தெரிவிக்கப்பட்டது.

(ய-173)

## வடக்கில் பரவலாகப் பெய்துவரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

### பெரும்போகத்துக்குத் தயார்

யாழ்ப்பாணம், ஓக.17

நீண்ட வறட்சிக்குப் பின்னர் யாழ்ப்பாணக் குடாநாடு, வன்னி மற்றும் முல்லைத்தீவில் தற்போது பரவலாக மழை பெய்துவருகின்றது.

மழையால் மகிழ்வுற்றிருக்கும் விவசாயிகள் பெரும்போக நெற்செய்கைக்குத் தயாராகி வருகின்றனர். குறிப்பாக குடாநாட்டில் பரவலாக மழை பெய்துள்ளது.

கடுமையான வறட்சிக்குப் பின்னர் மழை பெய்துள்ளதால் நிலம் குளிர்ச்சியடைந்து பயிர்கள் செழிப்புடன் காணப்படுகின்றன.

விவசாயிகள் தமது வயல் நிலங்களை உழுது சீர் செய்து பண்படுத்தும் வேலைகளில் உற்சாகத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆண்டு பெரும்போக நெற்செய்கையின் போது குறைந்தது குடாநாட்டில் சுமார் பன்னிரண்டாயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

விவசாயிகள் தமக்குரிய விதை நெல்லைத் தற்போதே பெற்றுக்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் செப்ரெம்பர் மாத இறுதியில் விதைப்பு ஆரம்பிக்கப்படும்.

அந்தச் சமயத்தில் விவசாயிகள் விதைநெல்லுக்கு அலைந்து திரிவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் முல்லை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானியவிலையில் விதைநெல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதை அடுத்து விவசாயிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். (ய-17-500)

## 31 பேருந்துத் தரிப்பிடங்கள் வடக்கில் புதிதாக அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக.17

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சால் அமைக்கப்பட்டு வரும் 31 பேருந்து தரிப்பிடங்களின் அமைப்புப் பணிகள் மூன்றுமாத காலத்துக்குள் நிறைவடைந்துவிடும் என்று வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சுக்கு நடப்பு வருடத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு அமைவாக பொது மக்களின் நன்மைகருதி பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்து வருகின்றது.

மக்கள் அதிகமாகப் பயணம் செய்யும் இடங்களை அறிந்து நாம் இவற்றை அமைத்து வருகின்றோம். வடக்கு மாகாணத்தில் இவ்வாறு 25 பேருந்துத் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பேருந்துத் தரிப்பிடமும் தலா 5 லட்சம் ரூபா செலவில் சாலை அபிவிருத்தித் திணைக்களத்தின் வழிகாட்டலின் கீழ் அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் 8 தரிப்பிடங்களும், கிளி நொச்சியில் 5 தரிப்பிடங்களும், முல்லைத்தீவில் 6 தரிப்பிடங்களும், வவுனியாவில் 5 தரிப்பிடங்களும், மன்னாரில் 7 தரிப்பிடங்களும் அமைக்கப்படுகின்றன.

தரிப்பிடங்கள் அமைக்கும் பணிகள் 3 மாத காலத்துக்குள் நிறைவடைந்துவிடும்- என்றார். (ய-ரி)

# கேட்டது கிடைக்கவில்லை

## ஓய்வை நாடுகிறார் கிரிசாந்த டி சில்வா

கொழும்பு, ஓகஸ்ட் 17

பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, தமது பதவியில் இருந்து ஓய்வு பெற அனுமதிக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

ஜெனரல் கிரிசாந்த டி சில்வாவுக்கு வழங்கப்பட்ட சேவை நீடிப்பு ஓகஸ்ட் 21ஆம்




திகதியுடன் நிறைவடையவுள்ளது. இந்த நிலையிலேயே அவர் தம்மை ஓய்வுபெற அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவத் தளபதியாக இருந்த போது, ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தமக்கு ஒரு ஆண்டு சேவை நீடிப்பு வழங்குமாறும் அல்லது, இராஜதந்திரப் பதவியை வழங்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமிக்கப்பட்டதை அடுத்து அவர் ஓய்வுபெற விருப்பம் வெளியிட்டுள்ளார். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா ஓய்வு பெற்றால், தற்போதைய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (5)



# இளநீர் குடிப்பது ஐ.தே.க கோம்பை தின்பது நாமா?

## பிணைமுறி விவகாரம் தொடர்பில் சு.கவின் கேள்வி இது

கொழும்பு, ஓக. 17

மத்திய வங்கி பிணைமுறி மோசடிக்கான பொறுப்பையோ அதனால் ஏற்பட்ட நட்டத்தையோ சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்காது. ஐக்கிய தேசிய கட்சியே ஏற்க வேண்டும் என்று மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கி பிணைமுறி மோசடியானது நல்லாட்சிக்குப் பெரும் சவாலை விடுத்துள்ளது. இதனுடன் தொடர்புபட்டவர்கள் இன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளனர். அந்தக் குற்றச்சாட்டுக்கு இலக்கான ரவி கருணாநாயக அமைச்சுப் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்மை தெரியாமல் உளறுகின்றனர். அரச தலைவரைப் பேசுகின்றனர். அரசதலைவர்தான் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்று கூறுகின்றனர். மத்திய வங்கி பிணைமுறி மோசடிக்கான பொறுப்பையோ அதனால் ஏற்பட்ட நட்டத்தையோ சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்காது. ஐக்கிய தேசியக் கட்சியே ஏற்க வேண்டும்.

இதில் எமக்குத் தொடர்பு எதுவும் இல்லை. மத்திய வங்கி ஆளுநரை சிபாரிசு செய்தவர் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க. பேர்பச்சுவல் நிறுவன உரிமையாளருக்கும் ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த ரவி கருணாநாயக்கவுக்கும் தான் தொடர்பு இருந்துள்ளது. சுதந்திரக் கட்சியினர் எவருக்குமே இதனுடன் தொடர்பில்லை. அப்படி இருக்கும்போது நாம் ஏன் பொறுப்பை ஏற்க வேண்டும்? - என்றார். (5-3)

# ராஜபக்சாக்களின் பெயரில் காணி இல்லாத இடமேது?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் ஜே.வி.பி தலைவர் அனுரகுமார

கொழும்பு, ஓகஸ்ட் 17

மகிந்த குடும்பம் நாடு முழுவதிலும் 21 இடங்களில் நிலங்களை வாங்கியிருக்கின்றனர். அது தொடர்பிலான முழு விவரம் என்னிடம் இருக்கின்றது. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரோகித, நாமல் மற்றும் சிறந்தி ஆகியோரின் பெயரில் நாடு முழுவதிலும் காணிகள் வாங்கப்பட்டுள்ளன. இதற்கான ஆதாரம் என்னிடம் உண்டு. 21 காணிகளுக்கான உறுதிப் பத்திரங்கள் என்னிடம் உள்ளது. முடிந்தால் அவர்கள் அதை மறுத்துக் காட்டட்டும்.

மகிந்த குடும்பத்தின் ஊழல்கள் விசாரிக்கப்படுவதில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை. அரசுக்கும் மகிந்த குடும்பத்துக்கும் இடையில் இருக்கும் 'டீல்தான்' இதற்குக் காரணம். சிறிலங்கா சுதந்திரக்கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்துவதற்காக மகிந்த அணியை ஐக்கிய தேசிய கட்சி பயன்படுத்துகின்றது. அதன் காரணமாக மகிந்தவின் குடும்பத்தின் ஊழலை ஐக்கிய தேசிய கட்சி தேடுவதில்லை.

அரசோ, நீதிமன்றமோ இவர்களைத் தண்டிக்கத் தவறினாலும் மக்கள் இவர்களை சும்மா விடமாட்டார்கள். அவர்களை அரசியல் அனாதைகளாக்கி தண்டித்துவிடுவர். கடந்த தேர்தல்களில் மக்கள் இவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்தனர்.

இப்படிச் சென்றால் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது. யார் வேண்டுமானாலும் திருடலாம் என்ற நிலை வந்துவிடும். இறுதியில் இந்த நாட்டு மக்கள் பிச்சைக்காரர்களின் நிலைக்குச் சென்றுவிடுவார்கள், இந்த ஆபத்தில் இருந்து நாம் இந்த நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டும் - என்றார். (5-3)


## மரண அறிவித்தல்

பிறப்பு
15
03
1944



இறப்பு
14
08
2017

### செபஸ்ரியாம்பிள்ளை ஆரோக்கியநாதர்

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை ஆரோக்கியநாதர் 14.08.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை - றோசம்மா (தவம் பிரான்ஸ்) தம்பதியரின் பாசமிகு மருமகனும், மரியம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் மாகிறேற்றம்மா, மோணிக்கா, யோசேப்பு, எலிசபேத் புஸ்பா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மரியதாஸ், அருளம்மா, மரியாம்பிள்ளை, தேவநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், றொபேட்வின்சன் (கனடா), அலெஸ்சாண்டர் (ஜேர்மன்), வில்லிபபியானா (கனடா), றெஜினா (பிரான்ஸ்), விமலசேகரன் (பிரான்ஸ்), ஸ்ரீபன், (பிரான்ஸ்), சில்வெஸ்ரர் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், லூர்துநாயகி, நந்தினி, ரவி, மின்சன்ரி, றஜனி, சர்மிளா, சாந்தி ஆகியோரின் பாசமிகு மாமனும், விஜிதா, வினிதா, றொபேட் அலெக்ஸ்சினி, பஸ்ரியன், விஜி, விஜய், லின்டா, செறினா, ஆரணி, றஜன், ஸ்ரெலா, சயான், ஸ்ரெபினி, தூஷாறா, துவாரகன், துஷியந்தா ஆகியோரின் பாசமிகு பேரனும், சோபியா, அஸ்வின், அனனியா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் (19.08.2017) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சில்லாலை புனித, கதிரை அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சில்லாலை கதிரை அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

T.P.: 076 629 3772 / 077 315 1007



## மரண அறிவித்தல்



### திருமதி பரமேஸ்வரி சண்முகலிங்கம்

இரும்பு மதவடி, வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி - சண்முகலிங்கம் 15.08.2017 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருகளும், சண்முகலிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் கடாதசிக் கூட்டுத்தாபனம் - வாழைச்சேனை), அவர்களின் பாசமிகு மனைவியும், ராதாதேவி (கனடா), கணேஸ் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), இந்துமதி (ஆசிரியை - யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயும், உபயலிங்கம் (கணக்காளர் - கனடா) ஜெயந்தினி (டாக்டர் ஆஸ்திரேலியா), ரவிச்சந்திரன் (அதிபர் - யா/ பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், சாயி (கனடா), சரண் (கனடா), பிரித்தி, (ஆஸ்திரேலியா) ஆகியேரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லையா, கனகரட்ணம், அமிர்தலிங்கம் மற்றும் கதிரவேற்பிள்ளை (லண்டன்), தங்கவேலாயும் (பொறியிலாளர் - கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2017) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.11 இரும்புமதவடி,
வதிரி கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

T.P.: 077 451 5964 - 077 227 9647
021 226 4550 - 075 038 7242

# நாடாளுமன்ற, அரச தலைவர் தேர்தல்கள் ஒரே நாளில்

## ஆராய்கிறதாம் கூட்டு அரசு அமைச்சரவைப் பேச்சாளர் சொல்கிறார்

கொழும்பு, ஓக. 17
மாகாணசபைத் தேர்தல்களை ஒத்தி வைக்கும் நோக்கிலேயே 20 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவலை நிராகரித்துள்ள அரசு நாடாளுமன்ற மற்றும் அரச தலைவருக்கான தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவது தொடர்பில் ஆராய்வதாகத் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

அமைச்சரும், அமைச்சரவை இணைப்பேச்சாளருமான தயாசிறி ஜயசேகர அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல்களை ஒத்தி வைக்கும் திட்டத்துடன் 20ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் அமைச்சரவையில் முன்வைக்கப்படவில்லை. தேர்தல்களை ஒரே நாளில் நடத்தவேண்டும் என்பதற்குரிய யோசனையே முன்மொழியப்பட்டது. அதற்கு ஆதரவளிக்கப்பட்டது. தேர்தலை ஒத்திவைப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பச்சைக்கொடி காட்டவில்லை. அதற்கு நாம் எதிர்ப்பு.

மாகாண சபைத் தேர்தல்களை கட்டம் கட்டமாக நடத்துவதால் பெரிய செலவு ஏற்படுகின்றது. ஒரு தேர்தலை நடத்துவதற்கு சுமார் 80 கோடி ரூபாவை செலவிட வேண்டியுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். அரச அதிகாரிகளுக்கும் பிரச்சினை ஏற்படும். ஆகவேதான், மாகாண சபைத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்தும் நிலைப்பாட்டில் இருக்கின்றோம்.

20 ஆவது திருத்தச் சட்டம் குறித்து மாகாண சபைகளின் கருத்துக்கள் கோரப்படும். உத்தேச வரைபு மாகாண சபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் இணங்காத பட்சத்தில் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அதை நிறைவேற்ற வேண்டும்.

நீதிமன்றத்திலும் சட்டத் திருத்தத்தை சவாலுக்குட்படுத்தலாம். நீதிமன்றத் தீர்ப்பு எப்படி வரும் என்று தெரியாது. இப்படி பல வழிமுறைகளைக் கடந்தே அதை நிறைவேற்றுவதாக இருந்தால் செய்யவேண்டும் -என்றார்.

மாகாண சபைத் தேர்தல்களை மட்டுமல்ல, அரச தலைவர் தேர்தலைய்ம், நாடாளுமன்றத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்துவது பற்றியும் அரசு பரிசீலித்து வருகின்றது. என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன இதன் போது கூறினார். (5)


**'O' நெகட்டிவ் சிறுநீரகம் தேவை**

66 வயதுடைய ஆண் ஒருவருக்கு சிறுநீரக சத்திரசிகிச்சை அவசரமாக செய்யவேண்டியிருப்பதால் 'O' நெகட்டிவ் ரக சிறுநீரகம் உடனடியாகத் தேவை.

075 032 2363

**வேலையாள் தேவை**

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்னால் உள்ள போட்டோ கொப்பி கடைக்கு போட்டோ கொப்பி எடுக்க அனுபவமுள்ள பழகவிரும்பும் பெண் தேவை.

077 557 [illegible]69

**கடை வாடகைக்குண்டு**

யாழ். நகரப்பகுதியில் அலுவலகப் பாவனைக்கும் குழுவகுப்புகள் நடத்துவதற்கும் உகந்த இடம் 960 சதுர அடி. தனி மின்சாரம் முற்பணம் எதிர்பார்க்கப்படும்.

077 441 3579

**வீடு வாடகைக்குண்டு**

இராசா மாளிகை, பிரம்படி லேன், கொக்குவிலில் (யாழ். பல்கலைக்கழகத்துக்கு மிக அருகில்) சகல நவீன வசதிகள் கொண்ட இருவீடுகள் வாடகைக்குண்டு. உத்தியோகத்தர்கள் மற்றும் அரச அரசாரபற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது

077 556 4519/ 076 445 8387

**உணவக உபகரணங்கள் தேவை**

- அனைத்து சமையல் பாத்திரங்கள்
- தேங்காய் துருவும் இயந்திரம்
- Fride rice அடுப்பு
- Fride rice தாச்சி மற்றும் கரண்டி
- Exposes fan
- மோட்டர்
- ரொட்டி கல் அடுப்பு

077 465 2860

**வீடு விற்பனைக்கு**

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் முதலாம் கட்டையில் அமைதியான நல்ல சுற்றாடலில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு விற்பனைக்கு.

077 854 6124


# கிழக்கு ஆட்சியைப் பிடிக்க மகிந்தவுடன் கைகோர்ப்பு

## சு.க.வின் திட்டம் இது என்கிறார் ஹிஸ்புல்லாஹ்



கொழும்பு, ஓக. 17
மகிந்த அணியுடன் கைகோர்த்து கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை சிறிலங்கா சுதந்திரக் கட்சி கைப்பற்றும். இவ்வாறு இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் சம்மேளனக் கூட்டம் அதன் தலைவர் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இங்கு இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

பதவிக்காலம் நிறைவடையும் கிழக்கு மாகாண சபை உள்ளிட்ட மூன்று மாகாண சபைகளினதும் ஆயுள் காலத்தை நீடிக்காது அதனைக் கலைத்து விட்டு மாகாண சபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

நாங்கள் மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலுக்கு தயாராக வேண்டும். இந்தத் தேர்தலானது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு மிகுந்த சவால் மிக்கதாக அமையும். சவால்களை முறியடித்து எவ்வாறு வெல்வது என்பது குறித்து நாங்கள் இப்போதே ஆராய வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த அணி - மைத்திரி அணி என்று பிரிந்துள்ளமை இருதரப்பு முஸ்லிம் வேட்பாளர்களுக்கும் பாதிப்பாக அமையும். நாட்டில் தலைதூக்கியுள்ள இனவாத செயற்பாடுகளால் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே சுதந்திரக் கட்சியில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களுக்கு பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பெறுவது என்பது கடினமானதாகும். கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் முதல் இரண்டு மாகாண சபைகளையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே கைப்பற்றியது. துரதிர்ஷ்டவசமாக தற்போது அதிகமான ஆசனங்களை நாங்கள் வைத்திருந்தும் எதிர்க்கட்சியிலேயே அமர்ந்துள்ளோம்.

சவால்கள் நிறைந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஆட்சியொன்றை அமைப்பதற்கு தேவையான வியூகங்களையும் கலந்துரையாடல்களையும் நாங்கள் முடுக்கி விட்டுள்ளோம். கிழக்கு மாகாணத்தில் மகிந்த அணி - மைத்திரி அணி என்று பிளவுபட்டு போட்டியிடப்போவதில்லை. அவ்வாறு போட்டியிட்டால் அது எமக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது அனைவருக்கும் தெரியும். இரு அணிகளையும் இணைத்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வது சம்பந்தமாக ஆராய்ந்து வருகின்றோம் -என்றார். (5)


**அரசாங்க அறிவித்தல்**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்**
**சிற்றுண்டிச்சாலை வழங்குநரை தெரிவு செய்தல்**

யாழ் மாவட்டச் செயலக சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவதற்கு தகுதியான வழங்குநர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவர்கள் விண்ணப்பபடிவங்களை மாவட்டச் செயலகத்தில் உள்ள நலன்புரிசங்க செயலாளரிடம் 17.08.2017 ஆம் திகதி தொடக்கம் 25.08.2017 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும் அல்லது www.jaffna.dist.gov.lk என்ற இணையத்தளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களினை 28.08.2017 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சிற்றுண்டிசாலை வழங்குனரை தெரிவு செய்தல் - 2017 என குறிப்பிட்டு அரசாங்க அதிபர். மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். நேரடியாக கையளிப்பதாயின் மாவட்டச் செயலக திட்டமிடல் கிளையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்பும் வழங்குனர்கள் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 500.00 இனை தலைவர். நலன்புரி சங்கம். யாழ்ப்பாணம் எனும் பெயரில் உள்ள 1090797 இலங்கை வங்கி கணக்கிலக்கத்தில் பணமாக வைப்பில் இடப்பட வேண்டும் என்பதுடன் வைப்பில் இடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**Rent**

The above mentioned building at 639, Navalar Road in the Municipal area of Jaffna is available for rent from October 2017
The building is suitable for office or residence, or both preferably for banks, Human Rights Agencies, Foreign Agencies Embassy and their staff
Parking is there through front and rear gates. Water is good for drinking.
Mr.S.Kuhendran at 639/8 Navalar Road in the Adjoining lane of the building is there to do all needful for inspection
Advertised By: Owner Janakan Sri Rangan
Email: js594@kent.ac.uk Mobile: + 44 751 528 1690

**வேலையாள்கள் தேவை**

கொழும்பில் இயங்கும் பொதிகள் சேவை நிறுவனத்திற்கு காசாளர், Bill கிளாக், உதவியாளர் உடன் தேவை.
ஆண்கள் மட்டும்.
உணவு தங்குமிட வசதி இலவசம்.

077 386 6250

**வேலை வாய்ப்பு (Vacancy)**

1. பனர் வடிவமைப்பாளர் (Banner Designer)
2. வரவேற்பாளர் (Receptionest)
(சிங்களம் ஆங்கிலம் ஓரளவு தெரிந்தவர்கள்)
3. மின் ஒட்டு (Welding)
4. பிறிண்டர் இயக்குனர் (Printer Operator)

நேர்முகத் தேர்வு
19, 20/08/2017

உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்.

**பார்த்தீபன் ஆட்ஸ் டிஜிற்றல் கலர்லாப்**
கிளிநொச்சி.
T.P: 077 740 2847 parththeepanart@gmail.com


## காதலி கொலை; காதலன் தவறான முடிவு

கொழும்பு, ஓக. 17
மாவனெல்லையில் காதலன், தனது காதலியை கத்தியால் குத்திக் கொலை செய்த பின்னர் காதலன் தவறான முடிவுக்கு முயற்சித்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

17 வயதுடைய யுவதி கொலை செய்யப்பட்டுள்ளார். 24 வயதான சந்தேக நபர், மாவனெல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இருவரது குடும்பங்களுகிடையிலான முரண்பாட்டாலேயே காதலன் மேற்படி முடிவை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (5)

## விடுமுறைக்குச் சென்ற சிறுமி மீது துர்நடத்தை

*பாடசாலை மாணவன் கைது*

பாடசாலை விடுமுறையில் வீட்டுக்கு வந்த 10 வயதுச் சிறுமியை பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய 15 வயதான பாடசாலை மாணவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். களுத்துறை மாவட்டத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

சிறுமி மருத்துவப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சந்தேகநபரான மாணவன் களுத்துறை மேலதிக நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு இரண்டு லட்சம் ரூபா பிணையில், நன்னடத்தை அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

(5)


## அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு இரண்டாவது தடவையாக ஆலோசனைக்குழுவை அமைத்தல்

"உள்ளூராட்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய சிரேஷ்ட பிரஜைகள், விடய அறிஞர்கள், வட்டார அங்கத்தவர்கள் மற்றும் பிரதேசத்தில் இருக்கக்கூடிய தகைமையாளர்களை உறுப்பினர்களாக கொண்டதாக ஒருஆலோசனைக்குழு ஒவ்வொரு உள்ளூராட்சி சபையிலும் அமைக்கப்பட வேண்டும். இந்தக் குழு பொதுமக்களுக்கும் உள்ளூராட்சி சபைக்குமிடையில் ஒருபாலமாக விளங்க தொழிற்பாடுகளை செயல்படுத்த வேண்டும்" (உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கை இல 10 பகுதி 3.2)

மேற்குறித்த சுற்றுநிருபத்தின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு இரண்டாவது தடவையாக ஆலோசனைக்குழு உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பதாரர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்/ நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாகவும், யாழ்ப்பாணம் மாநகரசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக அல்லது ஆகக்குறைந்தது 5 வருடங்களாவது நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பதாரி பொதுச்சேவை பற்றிய தெளிவான சிந்தனையுள்ளவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சிசபைப் பணியாளராகவோ அல்லது உள்ளூராட்சிசபை உறுப்பினராகவோ அல்லது அரசியல் கட்சியொன்றின் உறுப்பினராகவோ இருத்தல் கூடாது.
04. விண்ணப்பதாரி குற்றவாளியாக நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது. அவர் குற்றவாளியாகியிருந்தவர் என்று பின்னர் ஆதார பூர்வமாக அறியப்படும் சந்தர்ப்பத்தில் அவரது உறுப்புரிமை உடனடியாக இரத்துச் செய்யப்படும்.
05. இக்குழுவானது யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு ஒருவருடகாலத்திற்கு ஆலோசனை வழங்கும்.
06. விண்ணப்பதாரிகீழ் குறிப்பிட்டவற்றில் ஒன்றில் அல்லது சிலவற்றில் யாழப்பாணம் மாநகரவாழ்வியல் போக்கின் புரிதலுடன் கூடியபரந்த அறிவினை/ பாண்டித்தியத்தினை /நீண்டகால அனுபவத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
    - i. மாநகரசபை எல்லைக்குட்பட்ட அபிவிருத்தியும் உட்கட்டுமானமும்
    - ii. திண்மக்கழிவு முகாமைத்துவமும் சூழல் பாதுகாப்பும்
    - iii. நகரத்திட்டமிடல்
    - iv. பொதுச்சுகாதாரமும், சுகாதார நலமேம்பாடும்
    - v. மாநகரசபையால் வழங்கப்படும் மக்கள்- நட்புசேவைகள் தொடர்பான அறிவு
    - vi. நீர் விநியோகமும் கழிவுநீர் பரிகரித்தலும்
    - vii. குளங்கள்,வாய்க்கால்கள், வடிகால்கள் - செயற்பாடும் பராமரிப்பும்
    - viii. நூலகங்கள், கல்விமற்றும் கலாச்சாரமேம்பாடு
    - ix. பொழுதுபோக்கு அம்சங்களும் ஓய்வு வசதிகளும்
    - x. பொதுச்சேவையின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம்
    - xi. சபையின் வருமானமேம்பாடும் நிதிமுகாமைத்துவமும்
    - xii. ஆளணிஉள்ளிட்டவளங்களின் ஒதுக்கீடு
07. ஆலோசனைக்குழுவில் 11 பேர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர் என்பதோடு, அவர்கள் ஆலோசனை வழிகாட்டல் சட்டகம் ஒன்றின் கீழ் தம் பங்களிப்பை வழங்குவர்.
08. ஆலோசனைக்குழுவில் பெண்களின் பிரதிநிதித்துவம் கணிசமான அளவு எதிர்பார்க்கப்படுகிறது.
09. தெரிவு செய்யப்படுபவர்கள் இலவசமாக பொதுநோக்கோடு கூடிய ஆலோசனைகள் வழங்குபவர்களாக இருத்தல் வேண்டும்.
10. தங்கள் தகைமைகளுடன் கூடிய சுயவிபரங்களை தாங்களே தயாரித்து 2017.09.10 ஆம் திகதிக்கு முன் "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைத்தல் வேண்டும். தபால்உறையின் இடதுபக்கமேல் மூலையில் "ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கான விண்ணப்பம்"எனகுறிப்பிடவும். விண்ணப்பங்கள் ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் பரிசீலிக்கப்பட்டு தகைமையானவர்கள் வெளிப்படைத்தன்மையுடன் தெரிவு செய்யப்படுவர்.

குறிப்பு:முதலாவது தடவையாக ஆலோசனைக் குழுவிற்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் தெரிவானவர்கள் மீளவும் விண்ணப்பிக்கமுடியும்.

பொ.வாகீசன்,
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 04 . 03 . 1941

விண்ணில் 07 . 09 . 2007

**அமரர் பதுஞ்சலி ஆனந்தமகேஸ்வரன்**

திதி : 17.08.2017

அன்பு பொழியும் ஆதரவுப் புன்னகையும்
பண்பின் உயர்வும் பலரிடமும் பூண்ட நட்பும்
இன்னமும் எம் கண்முன்னே நீங்கா இடம் பிடிக்க
ஆண்டு பத்து ஆனபோதும் இன்றும் உங்கள் நினைவுடனே
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மயூர பவனம்,
உடுவில், சுன்னாகம். குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 19.07.2017 புதன்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி அம்மா

**அமரர் நாகரத்தினம் மகேஸ்வரி அம்மா**

(சின்னக்கிளி)

பிறப்பு 26.04.1935

இறப்பு 19.07.2017

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (18.08.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எனுவாய் ஓடை,
மல்லாகம். குடும்பத்தினர்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சிற்றம்பலம் மாணிக்கவாசகர்**

(ஓய்வுபெற்ற அதிபர்)

**தோற்றம்** 15.05.1952

**மறைவு** 17.08.2014

அன்போடு அரவணைத்து
ஆசையாய் அறிவுரைகள் கூறி
எம்மை எல்லாம் ஏற்றமுடன்
வாழவைத்த தெய்வமே...
எந்நாளும் எம்மோடு இருந்த - நீங்கள்
எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்!!!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் இதயங்களில்
என்றும் வாழ்வீர்கள் அப்பா.

நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**
சக்கடத்தார் வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

# மகிந்த அணிக்கு சோதனைக் காலமா ?

கொழும்பு, ஓக. 17

மகிந்த அணியில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது. வெகுவிரைவில் அந்த அணியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 7 முக்கிய உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து கொள்வார்கள். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான சாந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது எதிரணியில் சரியான தலைமைத்துவமோ கொள்கைகளோ இல்லை. அந்த அணி நாளுக்கு நாள் சிதறிக்கொண்டு செல்கின்றது. அந்த அணியிலிருந்து பெரும்பாலானோர் அரசுடன் இணைந்துகொள்வது உறுதி. இந்த அரசைக் கவிழ்க்க வேண்டும் என்ற பொது எதிரணியினரின் கனவு தவிடுபொடியாகிவிடும். மகிந்த அணியில் உள்ள 7 பேர் விரைவில் எம்முடன் கைகோர்பார்கள் - என்றார். (5)

## எனக்கு ஒன்றுமே தெரியாது

# அப்பாவித்தனமாகப் பதிலளித்தாராம் முன்னாள் முதல்பெண்மணி சிராந்தி

கொழும்பு, ஓக. 17

ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை தொடர்பாக, முன்னாள் முதல் பெண்மணி சிரந்தி ராஜபக்சவிடம் எழுப்பப்பட்ட பெரும்பாலான கேள்விகளுக்கு ஒன்றும் தெரியாது என்றே பதிலளித்தார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாஜுதீன் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் சிரந்தி ராஜபக்சவின் கீழ் இருந்த சிரிரிய சவிய அறக்கட்டளைக்குச் சொந்தமான டிபென்டர் வாகனம் தொடர்பான விசாரணைக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவுத் தலைமையகத்துக்கு சிரந்தி ராஜபக்ச அழைக்கப்பட்டிருந்தார். அவருடன் மகிந்த ராஜபக்ச மற்றும் யோசித ராஜபக்ச ஆகியோரும் நேற்று முன்தினம் அங்கு வந்திருந்தனர்.

இந்த விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, குற்றப் புலனாய்வுப் பிரிவுத் தலைமையகத்துக்கு வெளியே மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் திரண்டு நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இரண்டரை மணிநேரம் சிரந்தி ராஜபக்சவிடம் விசாரணைகள் நடத்தப்பட்டன. இதன் போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எழுப்பிய கேள்விகளுக்கு சிரந்தி பெரும்பாலும் வாயை மூடிக் கொண்டிருந்தார். சில கேள்விகளுக்கு மாத்திரம் தனக்கு ஒன்றும் தெரியாது என்று பதிலளித்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கொலை தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இது தொடர்பாக சில உயர் மட்டக் கைதுகள் தவிர்க்க முடியாதது என்றும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (5)



# ராஜிதவுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஓக.17

மாலபே நெவில் பெர்னாண்டோ மருத்துவமனையை அரசுடைமையாக்கியதன் மூலம் அரச பணத்தை வீணாக்குவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மீது ஊழல் முறைப்பாடொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அரச மருத்துவர்கள் சங்கமே, லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் மேற்படி முறைப்பாட்டைச் செய்துள்ளது.

'எந்தவித ஒப்பந்தமும் இன்றி அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. அதற்கு மாதம் 20 கோடி செலவிடப்படுகின்றது. அரச பணம் வீணாகச் செலவு செய்யப்படுகின்றது. அதற்கு அமைச்சர் ராஜித சேனாரத்னவே பொறுப்புக்கூற வேண்டும். பொது உடைமை மற்றும் ஊழல் சட்டங்களுக்குக் கீழ் அமைச்சருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் அமைச்சர் ராஜிதவை உடனடியாக கைது செய்து விசாரணை நடத்த வேண்டும்' என்று அரச மருத்துவச் சங்க செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்தார். (5)



## ஹசனலிக்கு தூது

# முஸ்லிம் கூட்டமைப்பு உருவாவதை முடக்கும் முயற்சியில் ஹக்கீம்

கொழும்பு, ஓக. 17

தூயமுஸ்லிம்காங்கிரஸின் ஏற்பாட்டாளரான எம்.ரி.ஹசனலிக்கு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கி முஸ்லிம் கூட்டமைப்பு உருவாவதைத் தடுப்பதற்கான காய் நகர்த்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஈடுபட்டுள்ளார் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்து தூரமாகி தூய முஸ்லிம் காங்கிரஸ் கட்சியாக மக்கள் மத்தியில் களமிறங்கியுள்ள ஹசனலி மற்றும் பசீர் சேகுதாவூத் தரப்பு எதிர்வரும் தேர்தல்களில் முஸ்லிம் கூட்டமைப்பாகப் போட்டியிடுவதற்கான பேச்சுக்களில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் மீண்டும் ஹசனலி தரப்பை கட்சியோடு ஒன்றிணைப்பதற்கான பேச்சை அமைச்சர் ஹக்கீம் முடுக்கிவிட்டுள்ளார்.

தூயமுஸ்லிம்காங்கிரஸின் ஏற்பாட்டாளரான எம்.ரி.ஹசனலியின் சகோதரரும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருமான எம்.ரி.நிஸாமுடன் அமைச்சர் ஹக்கீம் நீண்ட நேரம் உரையாடியுள்ளார்.

'தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியுடன் அமைச்சுப் பதவியும் ஹசனலிக்கு உடன் வழங்குவதற்கு நான் தயாராகவுள்ளேன்' என்று இதன் போது அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மு.காவின் உயர்பீட உறுப்பினரும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான யு.எம்.வாஹீத்தை அமைச்சர் ஹக்கீம் ஹசனலிக்குத் தூது அனுப்பினார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் யு.எம்.வாஹீத், முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசனலியுடன் நீண்டகால உறவைக் கொண்டுள்ளதுடன் ஹசனலி இராஜாங்க அமைச்சராக இருந்த சந்தர்ப்பத்தில் அவரது இணைப்புச் செயலாளராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

ஹசனலி தரப்பு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோருடன் இணைந்து முஸ்லிம் கூட்டமைப்பாக போட்டியிடுவதற்குப் பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியுள்ள நிலையில் தமது கட்சிக்கு இது பெரும் தோல்வியை ஏற்படுத்தும் என்ற பயப் பீதியின் காரணமாகவே ஹசனலிதரப்பைமீண்டும் தனது பக்கம் இழுப்பதற்கு அமைச்சர் ஹக்கீம் களத்தில் இறங்கியுள்ளார் என்று கூறப்படுகின்றது. (5)

# புத்தரும் அவமானப்பட்டவரே எனக்கு இதுவொன்றும் புதிதல்ல

## மைத்திரிபால புதுக்கதை



கொழும்பு, ஓக. 17

நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பயணத்தில் பழிகூறல் மற்றும் அவமானப்படுத்தல்கள் பிரச்சினையல்ல என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பன்னிப்பிட்டிய சிறி தர்ம விஜயாலோக விகாரைக்கு மியன்மாரிலிருந்து கொண்டுவரப்பட்ட புத்தபிரானின் திருவுருவத்தை திரைநீக்கம் செய்யும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று புத்தபிரான் கூட அவமானப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். வர்த்தகமயமாக்கலுடன் இன்று சீர்குலைந்து போயுள்ள சமூகத்தில் நான் அவமானப்படுத்தப்படுவது புதுமையான விடயமல்ல. இந்திய சுதந்திரத்துக்காக போராடிய மகாத்மா காந்தி, இலங்கையின் முன்னோடி அரசியல் தலைவரான பண்டாரநாயக்கவும் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் தமது வரலாற்றுக் கடமையை ஆற்றிய போது அவர்களும் அவமானப்படுத்தப்பட்டனர். அறிவைப் பெறுவதற்காகவும், சமூக அபிவிருத்திக்காகவும் நவீன தொழில்நுட்பம் இப்போது பயன்படுத்தப்படவில்லை. அவமானப்படுத்தல்களுக்காகவே இது பயன்படுத்தப்படுகின்றது. இந்த மோசமான நிலையிலிருந்து இளம் தலைமுறையினரை மீட்பதற்காக அவர்களிடம் ஆன்மிக அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (5)

## தேர்தலை பிற்போட முடியாது

# அரசின் உயர்பீடத்துக்கு அறிவிப்பு

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்துவதைக் காரணம்காட்டி ஆயுள்காலம் முடிவடையும் மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரு போதும் பிற்போட முடியாது என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய உத்தியோகபூர்வமாக அரசின் உயர்பீடத்துக்கு அறிவித்துள்ளார்.

கால எல்லை முடிவடையும் மாகாண சபைகளின் தேர்தலை ஒருபோதும் பிற்போட முடியாது என்று பல்வேறு தரப்பினரும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையிலேயே, தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவரும் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

சிலகாரணங்களைக்காட்டிகாலஎல்லை முடிவடையும் மாகாண சபைகளின் தேர்தலை ஒருபோதும் பிற்போட முடியாது என்று அரசின் பிரதான இரண்டு பங்காளிக் கட்சிகளுக்கும் உத்தியோகபூர்வமாகத் தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார் என்று அறியமுடிகின்றது. (5)

# விஜயதாச விவகாரம் முடிவு இன்று தெரியும்

## ஐ.தே.க. கூட்டம் பரபரப்பான சூழலில் நடக்கின்றது

கொழும்பு, ஓக. 17

பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் சிறிகொத்தவில் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று நடைபெறவுள்ளது. நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு எதிரான குரல்கள் கட்சிக்குள் வலுப்பெற்றுள்ள நிலையில், அவரின் அமைச்சுப் பதவியைப் பறிப்பதற்கான தீர்மானம் இன்றைய கூட்டத்தில் எடுக்கப்படும் சாத்தியம் காணப்படுகின்றது என்று கட்சியின் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் தொடர்பில் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறியமை, மகிந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள 100க்கும் அதிகமான முறைப்பாட்டு அறிக்கைகளின் விசாரணைகள் மந்த கதியில் இடம்பெறுகின்றமை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டியே விஜயதாஸ ராஜபக்சவின் அமைச்சுப் பதவியை உடன் பறிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இன்று நடைபெறவுள்ள கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் அரசியல் அரங்கில் பெரும் எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டு அரசின் பிரதான பங்காளிக் கட்சிகளில் ஒன்றான சுதந்திரக் கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் குறித்தும் இன்றைய கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சியமைக்க வேண்டும் என்று ஆண்டின் ஆரம்பம் முதல் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமைப்பீடத்துக்கு கடும் அழுத்தம் கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5)

இலங்கை, தமிழ்நாடு

# பயணிகள் கப்பல்சேவை தமிழக அரசு முனைப்பு

கொழும்பு, ஓக. 17

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தமிழகஅரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் இடையில் நடந்து வந்த பயணிகள் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டு ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தப் புதிய முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள ஈழ அகதிகள் தன்னார்வ அடிப்படையில் நாடு திரும்புவதற்கு வசதியாக, இந்தக் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அயலுறவுத் துறை அமைச்சுக்கு, தமிழக அரசு கடிதம் அனுப்பியுள்ளது.

'அயலுறவுத்துறை அமைச்சு அதிகாரிகள், கப்பல்துறை பணியகம் மற்றும் தமிழ்நாடு அரசின் அதிகாரிகளுக்கிடையில் கடந்த பெப்ரவரி மாதம் இது தொடர்பான கூட்டம் நடைபெறவிருந்தது. அரசியல் குழப்பங்களால் கூட்டம் நிறுத்தப்பட்டது. நாடு திரும்பி மீளக் குடியேற விரும்பும் இலங்கை அகதிகளுக்கு உதவும்வகையிலான அறிக் கையுடன் கடிதம் நடுவண் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது' என்று தமிழக அரசின் மூத்த அதிகாரி தெரிவித்தார்.

தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவையையா அல்லது இராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவையையா அகதிகள் விரும்புகிறார்கள் என்று தீர்மானிக்க முன்னர், நடுவண் அரசுடன் கலந்துரையாட வேண்டியுள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டில் நாடு திரும்பிய அகதிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காகியிருக்கிறது. முகாம்களில் உள்ள அகதிகள் இங்கிருந்த செல்லும் போது தமது உடைமைகளையும் கொண்டு செல்லவே விரும்புகின்றனர் என்று அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (5)

நீதி அமைச்சர் விஜயதாச மீதான

## நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 70 ஐ.தே.க. உறுப்பினர்கள் ஆதரவு

கொழும்பு, ஓக. 17

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இதுவரை 70 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு தொடர்பாகச் சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டு, அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பைக் காப்பாற்றத் தவறிவிட்டார். நீதி அமைச்சரின் கட்டுப்பாட்டில் இயங்குகின்ற சட்டமா அதிபர் திணைக்களம் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றது. இது போன்ற குற்றச்சாட்டுக்களை முன் வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களால், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியின் 70 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர். நம்பிக்கையில்லாப் பிரேரணை ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை பதவி நீக்கம் செய்வதற்கு மூன்று பௌத்த பீடங்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. விஜயதாச ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்காக வாக்களிப்போம் என்று மகிந்த ராஜபக்சவும் அவரது தலைமையிலான கூட்டு எதிரணியும் கூறி வருகின்றமையும் குறிப் பிடத்தக்கது. (5)

அழைப்பு கிடைக்கவில்லையாம்

## ஆதங்கப்படுகிறார் மகிந்த அணி எம்.பி. ரஞ்சித்

கொழும்பு, ஓகஸ்ட் 17

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 66ஆவது ஆண்டு நிறைவு வைபவத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பிதழ்கள் மகிந்த அணி உறுப்பினர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார். (5)

## கிழக்கில் மருத்துவமனை மறுசீரமைப்பு 1.5 கோடி ஒதுக்கீடு

வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சின் 1.5 கோடி ரூபா ஒதுக்கீட்டில் கிழக்கு மாகாணத்திலுள்ள இரு மருத்துவமனைகள் மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் மருத்துவமனை 7.7 மில்லியன் ரூபா செலவிலும், அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் ஆதார மருத்துவமனை 7.3 மில்லியன் ரூபா செலவிலும் மறுசீரமைக்கப்படவுள்ளன. நான்கு மாத காலத்தில் மறுசீரமைத்து இவை மக்கள் பாவனைக்கு ஒப்படைக்கப்படவுள்ளன. (5)

## வீதி அபிவிருத்தி 142 மில்லியன் ஒதுக்கீடு

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இரண்டு வீதிகளை அபிவிருத்தி செய்ய 142 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

சர்தாபுர கன்னியா கோயில் வீதியை மறுசீரமைக்க 78.71 மில்லியன் ரூபாவும், கன்னியா இலுப்பைக்குளம் உள் வீதியில் வவுனியா பாதையிலிருந்து நிலாவெளி வரையான வீதியை கொங்கிறீட் போட்டு மறுசீரமைக்க 64.09 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. (5)

நெருக்கம்



70ஆவது இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலாசார நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் தலைமை அதிதியாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார். அவருடன் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையார் மற்றும் இந்தியத் தூதுவர் உள்ளிட்ட அதிதிகள் கலந்துகொண்டனர். (5)

# இலங்கையின் பாதுகாப்பில் இந்தியா கடும் அக்கறை

### அந்த நாட்டுத் தூதுவர் தரன்ஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17

இலங்கையின் பாதுகாப்பின் மீது இந்தியா அக்கறை கொண்டிருப்பதாக இலங்கைக்கான இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 70ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் பாதுகாப்பின் மீது இந்தியா அக்கறை கொண்டிருக்கிறது. இலங்கையின் ஒற்றுமை, இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க இந்தியா கடமைப்பட்டுள்ளது. பல மொழி, பல்லின, பல சமூகங்கள் வாழும் இலங்கையில், அனைத்து மக்களும், சமத்துவம், பாதுகாப்பு, நல்லிணக்கத்துடன், வாழ்வதற்கான முயற்சிகளுக்கு இந்தியா எப்போதும் ஆதரவளித்து வந்துள்ளது.

இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் இந்தியா ஈடுபடும். உட்கட்டமைப்பு, உற்பத்தி, சுகாதாரம், கல்வி, விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற துறைகளின் முதலீடுகளுக்கும் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும். இந்தியாவின் பெறுமதிமிக்க பங்காளர்களில் இலங்கையும் ஒன்று. கடல்வழிப்பாதையின் பாதுகாப்பு உள்ளிட்ட பொதுவான பாதுகாப்புக் கரிசனைகள் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் வலுவான ஒத்துழைப்பு பேணப்பட்டு வருகிறது - என்றார். (5)

# அமைச்சரவையிலும் எதிரொலித்தது 'மகிந்த அன்கோ' விசாரணை விவகாரம்

கொழும்பு, ஓக. 17

மகிந்த ராஜபக்ச குடும்பத்தினர் மற்றும் முன்னைய அரசின் அமைச்சர்களுக்கு எதிரான விசாரணையில், தேவையற்ற இழுத்தடிப்புகள் மேற்கொள்ளப்படுவதாக, நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் காரசாரமான கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், பல அமைச்சர்களும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா, உயர்மட்ட ஊழல்கள் மற்றும் குற்றங்களை விசாரிக்க, சிறப்பு நீதிமன்றத்தை உருவாக்க அரசமைப்பில் இடமில்லை என்றால், தற்போதுள்ள நீதிமன்றங்களின் ஊடாக இதனைக் கையாள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

திலக் மாரப்பன, சம்பிக்க ரணவக்க, சாகல ரத்நாயக்க, உள்ளிட்ட பெரும்பாலானோர் இந்தக் கருத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் இந்த வழக்குகளை சரியான முறையில் கையாளவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது.

அப்போது நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச, தம்மால் நீதித்துறையில் தலையீடு செய்ய முடியாது என்று பதிலளித்துள்ளார்.

மகிந்த குடும்பத்தின் மீதான விசாரணை துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி மையக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# ஆள்கள் போதாது

### சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17

சட்டமா அதிபர் திணைக்களத்துக்குக் கிடைக்கும் கடிதங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு போதியளவு அலுவலர்கள் தம்மிடம் இல்லை என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் என்.ஆர்.அபேசிங்க தெரிவித்தார்.

சிறுவர் துர்நடத்தை தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் வடமேல் மாகாண பொலிஸ் அலுவலர்களை தெளிவுபடுத்தும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

சிறுவர்கள் மீதான துர்நடத்தை தொடர்பாகவே அதிக அளவிலான கடிதங்கள் கிடைக்கப் பெறுகின்றன. அவை எமது திணைக்களத்தில் நிறைந்து காணப் படுகின்றன என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (5)

# விஜயதாசவுக்கு எதிரான பிரேரணை பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு

### சிங்கள ராவயவின் கண்டுபிடிப்பு இது

கொழும்பு, ஓக. 17

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதன் பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பே இருக்கின்றது என்று சிங்கள ராவய அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அந்த அமைப்பின் பொதுச் செயலர் மாகல் கந்தே சுதத்த தேரர் கலந்து கொண்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நீதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுவதன் பின்னணி தொடர்பில் நாம் ஆராய்ந்து பார்த்தோம். ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடையவர்கள் இலங்கையில் இருப்பதாகவும், நாட்டில் சில முஸ்லிம் அடிப்படைவாதக் குழுக்கள் இருப்பதாகவும் நீதியமைச்சர் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார்.

அவ்வாறு கருத்துத் தெரிவித்ததன் பலனாகவே அவருக்கு எதிராக அடிப்படைவாதக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிலர், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வர முற்படுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியானது தேசிய சிந்தனை கொண்டவர்களுக்கு இடமளிக்கும் கட்சியல்ல. அவ்வாறான கொள்கையை உடையவர்களுக்கு எதிராகவே ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுகிறது. இதனாலேயே விஜயதாசவுக்கு எதிராக அந்தக் கட்சியே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருகின்றது - என்றார். (5)

# பொருளாதாரத் தடை விதித்தால் ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்கோம்

## அமெரிக்காவை எச்சரிக்கிறது ஈரான்




தெக்ரோன், ஓக. 17

ஈரான் மீது அமெரிக்கா மேலும் பல பொருளாதாரத் தடைகளைவிதித்தால், அணுவாயுதப் பரவல் ஒப்பந்தத்தில் இருந்து நீங்குவோம் என்று எச்சரித்துள்ளார் ஈரான் அதிபர் ரவுகானி.

அரேபிய வளைகுடா பகுதியில் உள்ள நாடுகளில் ஒன்றான ஈரான் சில தினங்களுக்கு முன்பு ஓர் ஏவுகணைச் சோதனையை நடத்தியது. இந்தச்சோதனை செயற்கைக் கோள்களை சுமந்து செல்லும் வகையிலான ஏவுகணை என்று ஈரான் தெரிவித்தது. எனினும், இது கண்டம் விட்டு கண்டம் பாயும் சோதனை முயற்சி என்று அமெரிக்கா தெரிவித்தது. தெரிவித்தது டன் நின்றுவிடாத அமெரிக்கா, ஈரான் மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்தது. இதற்குப் பதிலடியாக அணுவாயுதத் திட்டத்துக்கு கூடுதல் நிதியை ஒதுக்கி உத்தரவிட்டது ஈரான் நாடாளுமன்றம்.

இந்த விவகாரத்தில் தற்போது சில கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார் ஈரான் அதிபர் ரவுகானி. "அமெரிக்காவின் செயல் ஏற்புடையதல்ல, எங்களது ஏவுகணை திட்டங்களை மிக வீரியமாக நாங்கள் செயல்படுத்துவோம். எமது ஆயுதச் சோதனைகள் எமது பாதுகாப்புக்கே" என ரவுகானி மேலும் தெரிவித்தார்.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய வல்லரசு நாடுகளுடன் ஈரான் கடந்த 2015ஆம் ஆண்டு அணு சக்தி ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, ஈரான் அணு ஆயுதங்கள் எதையும் தயாரிக்கக்கூடாது. அதற்கு பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட பன்னாட்டுப் பொருளாதார தடைகள் விலக்கிக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



# பன்னாட்டு உதவியை கோரியுள்ளது சியாரா

- உயிரிழப்பு 350ஆக உயர்வு
- 600 பேரைக் காணவில்லை

ப்ரீடவுன், ஓக. 17

மேற்கு ஆபிரிக்க நாடானா சியரா லியோனில் கனமழை மற்றும்நிலச்சரிவில்சிக்கிஉயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 350 ஆக அதிகரித்துள்ளது. காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 600ஆக அதிகரித்துள்ளது. இந்த இடரைச் சமாளிப்பதற்காக பன்னாட்டு உதவியைக் கோரியுள்ளது சியாரா லியோன். அந்த நாட்டு அதிபர் பட்டமாரா கமாடா நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார்.

சியரா லியோனின் தலைநகர் ப்ரீடவுனில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகிறது. மலைப் பகுதி சார்ந்த குடியிருப்புக்களும், நகர்ப்புறக் கட்டடத் தொகுதிகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளன. வெள்ள இடரிலும், நிலச்சரிவிலும் சிக்கி சுமார் 300 பேர்வரை உயிரிழந்துள்ளனர் என்று முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த எண்ணிக்கை தற்போது 350ஆக அதிகரித்துள்ளது. காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 100 இல் இருந்து 600ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

> “ உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது

சியாரா லியோனின் தலைநகர் ப்ரீடவுன் கடும் நெருக்கடியைச் சந்தித்துள்ளது என்று பன்னாட்டு செஞ்சிலுவைக் குழு ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், பன்னாட்டு உதவியைக் கோரினார் பட்டமாரா. (ம)

## கருணாநிதிக்... தொடர் சிகிச்...



தி.மு. கழகத்தின் தலை... கருணாநிதி, நேற்றுக் க... சென்னை காவேரி மரு... மனையில் சேர்க்கப்பட்... ஓரிரு மணித்தியால சிகி... சைக்குப் பின்னர் அவர்... மீண்டும் வீடு திரும்பின... கோபாலபுரத்தில் உள்ள... தனது வீட்டில் கருணாந... தொடர்ந்து ஓய்வில் இரு... வருகிறார்.

அவருக்கு மருத்துவர்க... தொடர் கண்காணிப்பில்... சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. அவர் உடல் நலத்துடன் உள்ளார் என்... காவேரி மருத்துவமனை... அறிவித்துள்ளது. (...



# நேபாளத்தில் நிலச்சரிவு; சாவு 116ஆக அதிகரிப்பு

காத்தண்டு, ஓக. 17

நேபாளத்தில் தொடர் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 116ஆக அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

நேபாளத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மழையினால் 21 மாவட்டங்கள் வெள்ளக்காடாக காணப்படுகின்றன. ரப்தி மற்றும் புதிரப்தி ஆறுகளில் வெள்ள நீர் கரை புரண்டு ஓடுகிறது. கரை கடந்து வெளியேறிய வெள்ளம் அரித்துச் சென்றதால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால், தாழ்வான பகுதிகளில் வசித்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள ஜாப்பா, மோராங், சன்சாரி, சப்ட்டாரி, சிராஹா, ரவுட்டாஹட், பன்க்கே, பர்டியா, டாங் ஆகிய மாவட்டங்களை வெள்ளம் அதிகமாகச் சூழ்ந்துள்ளது. மோராங் மாவட்டத்தில் உள்ள பிராட்நகர் வானூர்தி நிலையத்தை வெள்ளம் சூழ்ந்துள்ளதால் அது தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. சுமார் ஆயிரம் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதுவரை 116 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிட்டுள்ளது. (ம)



சியாரா லியோனின் தலைநகர் ப்ரீடவுனில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய விஷ விலங்... மக்களின் தற்காலிகக் குடியிருப்புக்குள் நுழைகின்றன. இதனால் மக்கள் மேலும்மேலும் துன்பங்களை எதிர்கொள்ளுகின்றனர். அவர்கள் அச்சத்... இருக்க வேண்டிய நிலை தோற்றம் பெற்றுள்ளது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

நிதிக்கு
கிச்சை

தலைவர்
ற்றுக் காலை
வரி மருத்துவ
க்கப்பட்டார்.
பால சிகிச்
அவர்
ரும்பினார்.
உள்ள
ருணாநிதி
இல் இருந்து

துவர்களின்
ணிப்பில்
ப்பட்டு
உடல்
ார் என்று
வமனை
(ம)

விலங்குகள்
அச்சத்துடன்
(ம)

இன்றே இணையுங்கள்

1000த்தில் ஒருவராகுங்கள்

தொழிலில் இணைய தயாராகவே வாருங்கள்




இலங்கையில் சிறந்த தொழில் வாய்ப்புகள் 1000த்தில் இணைந்திட
உங்கள் வாழ்நாளில் மீண்டும் கிட்டாத பெறுமதியான வாய்ப்பு

| வாடிக்கையாளர் சேவை | பேக்கரி உற்பத்தி பிரிவு | காசாளர் |
|---|---|---|
| (ரூ. 30,000திற்கு அதிகமான சம்பளம்) | (ரூ. 30,000திற்கு அதிகமான சம்பளம்) | (ரூ. 35,000திற்கு அதிகமான சம்பளம்) |

ஆகஸ்ட்
17,18,19
மு.ப. 9.00 முதல்
பி.ப. 4.00 வரை

எம்மிடமிருந்து உங்களுக்கு...

- உங்கள் சேவைக்கு பொருத்தமான ஊதியம்
- தங்குமிடம், உணவு மற்றும் சீருடை
- பாதுகாப்பான, உற்சாகமான தொழில் சூழலில் பணியாற்றும் வாய்ப்பு
- நிலையான எதிர்காலத்திற்கான அத்திவாரம்

உங்களின் சுயவிபரக் கோவையுடன் கீழுள்ள முகவரிக்கு
அல்லது வேண்டியதொரு கீல்ஸ் சுப்பர் கிளைக்கு வாருங்கள்.

குருணாகலை : YMBA கட்டடம், ரஜபிஹில்ல மாவத்தை
ஹட்டன் : ஹட்டன்-டிக்கோயா நகரசபை மண்டபம்
மஹியங்கனை : கலாச்சார மத்திய நிலையம்
இரத்தினபுரி : பிரதேச மற்றும் மத்திய நூலக நாடக மண்டபம்
கண்டி : கண்டி சிட்டி சென்டர் முதல் மாடி
பொலன்னறுவை : தமன்கடுவ பிரதேச சபை பொது நூலக கேட்போர்கூடம்
யாழ்ப்பாணம் : வீரசிங்கம் மண்டபம், காங்கேசன்துறை வீதி (இல.12)

காலி : நகரசபை மண்டபம்
மாத்தறை : மாத்தறை நூபெ சனச மண்டபம்
மாத்தளை : மாத்தளை நகரமண்டபம்
மத்துகம : பிரதேச சபை கேட்போர்கூடம்
பாணந்துறை : பிரதேச செயலகம்
பண்டாரவளை : நகரசபை மண்டபம்
கதிர்காமம் : பிரதேச சபை கேட்போர்கூடம்

இன்றே அழையுங்கள்: 0766 240 240

careers_jms@keells.com

John Keells Group

KEELLS SUPER

ஜோன் கீல்ஸ் குழுமம் சமவாய்ப்பளிக்கும் தொழில் வழங்குனர் ஆகும் என்பதுடன், நாம் தகைமை கொண்ட சகல தனிநபர்களையும் எமது அணியுடன் இணைய விண்ணப்பிக்க அழைக்கின்றோம்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உலகின் தலையீடு நடக்கக்கூடியதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கடைசி ஆயுதத்தைக் கையில் எடுத்துள்ளது. சிங்கள அரசுகள் தாமாகத் தீர்வைத் தரப்போவதில்லை என்பதால் உலக நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் போன்ற உலக அமைப்புகள் தலையிட்டு தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் நடுநிலை வகிக்கவேண்டும் என்பதே அந்த ஆயுதம்.

2015ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒரு கூட்டு இணக்கத்தை ஏற்படுத்தினார். அரச தலைவருக்கான தேர்தலில் மைத்திரிபாலசிறிசேனவை ஆதரிப்பது என்பது அந்த இணக்கம். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைப் பதவியிலிருந்து அகற்றி ரணிலின் ஆதரவுடன் மைத்திரிபாலவை அரியணை ஏற்றுவதற்குப் பதிலீடாக தமிழர்களுக்கு என்ன கிடைக்கப்போகிறது என்கிற கேள்வி அப்போதே எழுப்பப்பட்டது.

தமிழர்களுக்குக் கிடைக்கப்போகும் நன்மையை உறுதிப்படுத்தும் விதத்தில் மைத்திரி மற்றும் ரணிலுடன் எழுத்து மூல உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. கூட்டமைப்புக்கு உள்ளேயும் வெளியேயும் இது தொடர்பில் சம்பந்தருக்கு அதிக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

ஆனால் அவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு எழுத்து மூல உடன்படிக்கை ஒன்று இல்லாமலேயே சம்பந்தர் ஆதரவு வழங்கினார். தமிழ் மக்களின் ஆதரவையும் திரட்டிக்கொடுத்தார். இது இதயங்கள் இடையிலான ஒப்பந்தம் என்று அதனை அவர் வரைவிலக்கணப்படுத்தினார்.

எழுத்து மூல ஒப்பந்தத்தையே மதிக்காத வரலாற்றைக் கொண்ட சிங்களத் தலைமைகள், இதயங்களின் இணைப்பையா மதிக்கப் போகின்றன என்கிற விமர்சனங்கள் அப்போதே எழுந்திருந்தன. என்றாலும் மைத்திரிக்குப் பலவீனமாகவும், மகிந்தவுக்குப் பலமாகவும் மாறிவிடக்கூடியதான ஓர் எழுத்து மூல ஒப்பந்தத்தை சம்பந்தர் ஒருபோதும் வலியுறுத்தவில்லை.

அதற்கான காரணம், இலங்கையில் ஆட்சி மாற்றம் உலகின் சக்தி மிக்க நாடுகளினதும் தேவையாக இருந்ததால், அதனோடு ஒத்தோடுவதன் மூலம் உலக நாடுகளை தனக்குப் பக்கத்துணையாக, பக்க பலமாக மாற்றிக்கொள்வதுதான்.

போருக்குப் பின்னரான காலத்தில் உலக நாடுகள் தமிழர்களோடு நிற்கின்றன என்பதை உறுதியாக நம்பிய கூட்டமைப்புத் தலைவர்கள், சிங்களத் தலைவர்களை நம்பாவிட்டாலும் பலம்மிக்க உலக நாடுகளை நம்பித்தான் இதயங்களின் ஒப்பந்தத்திற்குள் கால் வைத்தனர்.

இப்போது இதயங்களின் ஒப்பந்தம் பலவீனமாகி நொந்து நூலாகிவிடும் நிலையை எட்டிவிட்டது தெளிவாகின்றது. கடந்த இரண்டு வருடங்களில் நல்லிணக்க நோக்கில் தமிழர்கள் தொடர்பான நடவடிக்கைகளில் கொஞ்சமாவது முன்னேறிவந்த கூட்டு அரசும் அதன் தலைவர்களும் தற்போது அதனை அனேகமாகக் கைவிட்டுவிட்டார்கள். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுவிப்பு, காணாமற்போனோரின் விவகாரம் என்று எந்த முனையிலும் முன்னேற்றம் ஏதுமில்லாத நிலையே ஏற்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் எரியும் பிரச்சினையாக இருக்கக் கூடிய இந்த விவகாரங்களுக்கே தீர்வு காணப்படாத நிலையில், அதுவும் அரசோடு இதயங்களின் இணைப்பாகப் பயணித்தும் பயனற்ற நிலையில் இந்த விவகாரத்தில் தான் மலையளவு நம்பியிருந்த உலக நாடுகளின் தலையீட்டை கோரியிருக்கிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

கேப்பாப்பிலவு விவகாரத்தில் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஆகியோருக்கும் உலக நாடுகளின் தூதுவர்களுக்கும் அவர் கடிதம் எழுதியிருக்கிறார். நல்லிணக்கத்தை நோக்கிய பாதையில் அரசு தேங்கிக் கிடப்பதை ஆதாரபூர்வமாக அதில் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான பிணக்கில் உலகம் தலையிடவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அவர் நம்பியிருந்ததைப்போலவே உலக நாடுகள் இந்த விடயத்தில் கொழும்புக்கு அழுத்தம் கொடுத்து நிலைமையைத் தமிழர்களுக்குச் சாதகமாகத் திருப்ப முடியுமா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் இராஜதந்திரத்தில் உலக நாடுகளை வளைத்துப்போடுவதில் தமிழர்களைவிட சிங்களத் தலைவர்கள் திறமைசாலிகள் என்பதை வரலாற்றில் பல தடவைகள் அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

கொழும்பின் தற்போதைய ஆட்சியைத் தக்கவைப்பதற்கான தேவை உலகத்திற்கும் இருக்கும் நிலையில், ஓரளவுக்கு மேல் உலக நாடுகள் கொழும்புக்கு அழுத்தங்களைக் கொடுக்கும் என்று எதிர்பார்ப்பது யதார்த்தத்துக்கு அப்பாற்பட்டது.

அத்தகைய நிலையில், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான்கீமூனிடம் சம்பந்தர் யாழ்ப்பாணத்தில் வைத்து, அரசு இந்தத் தடவையும் ஏமாற்றினால் தமிழர்களை ஆள்வதற்கு கொழும்பை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று சொன்னதற்கு ஏற்ப, அடுத்தகட்டப் போராட்டத்தை முன்னெடுத்தாகவேண்டும். அதற்கு இப்போதே தமிழ் மக்களைத் தயார்ப்படுத்தும் பணிகளை அது ஆரம்பிக்கவேண்டும். அதிலேயே தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

# நாடொன்றின் மத்தியதர வகுப்பினர்களுக்கு அரசியல் அறிவு அவசியம்

பழைய அரசமைப்புக்கள் மூன்றிலும் உள்ள முக்கிய தவறு சிறுபான்மை இனத்தவர்களுக்கு உரிய இடம் வழங்கப்படாமையே...



கொழும்பு ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் பி. அத்து கோரால 'மவ்பிம' சிங்கள நாளிதழுக்கு வழங்கிய செவ்வி

**கேள்வி:** இலங்கைக்குப் புதிய அரசமைப்பொன்று அவசியமானது தானா?

**பதில்:** அரசியல் இயந்திரத்துக்குச் சக்தி வாய்ந்த வழிகாட்டலொன்று அவசியம். ஒரு நாடு என்ற ரீதியில் ஒரு இனம் என்ற ரீதியில் முன்னோக்கிப் பயணிக்க வேண்டுமானால், அத்தகைய வழிகாட்டல் அத்தியாவசியமே. அதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குவது நாட்டின் அடிப்படைச் சட்டங்களே. அந்த வகையில் அரசமைப்பு என்பது நாட்டின் ஒட்டு மொத்த மக்களையும் ஒன்றிணைத்து அபிவிருத்திப் பயணமொன்றை மேற்கொள்ள அந்த மக்களது ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகளுக்கான வழிகாட்டலாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் இற்றைவரை நாடு மூன்று அரசமைப்புக்களைக் கொண்டிருந்தது. அவற்றின் மூலம் இந்த நாடு பல்வேறு அனுபவங்களைப் பெற்றுக் கொண்டது. 1947 ஆம் ஆண்டின் சோல்பரி அரசமைப்பு குறித்த முக்கிய விமர்சனமாக அமைந்தது, பொது மக்களது சுயாதீனத்துவ உரிமை அந்த அரசமைப்பில் மீறப்படுகிறது என்பதாகும். அதே போன்று அந்த அரசமைப்பில் மகாதேசாதிபதிக்குரிய அதிகாரங்கள் சிக்கல்மிக்கவையாக அமைந்தன. அதில் அடிப்படை மனித உரிமைகள் குறித்து எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாகவே 1972 ஆம் ஆண்டில் குடியரசு அரசமைப்பொன்றை உருவாக்க நேர்ந்தது.

குடியரசு அரசமைப்பு மூலம் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எந்தவொரு சட்டம் குறித்தும் சவால் விடுக்க இயலாத விதத்தில் நாடாளுமன்றத்தின் அதிகாரம் பலப்படுத்தப்பட்டது. குறித்த அந்தக் குடியரசு அரசமைப்பு முன்வைக்கப்பட்டபோது, அந்த வேளையில் சிறுபான்மைத் தரப்பான தமிழ் அரசுக் கட்சி புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டுமென ஆறு அம்சக்கோரிக்கையொன்றை முன்வைத்தது. ஆனால் அரசமைப்பு உருவாக்கல் சபை அந்த ஆறு அம்சக் கோரிக்கை குறித்து எதுவித அக்கறையும் காட்டவில்லை. தமிழ்த் தேசியக்கூட்டணியை உருவாக்கித் தனியான அரசொன்றை நிறுவும்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை இத்தகைய புறக்கணிப்பின் காரணித்தினாலேயே ஆகும். பல்லினங்கள் வாழும் நாடு என்ற வகையில் சகல இனத்தவர்களையும் ஒன்றிணைத்துச் செயற்பட முடியுமாயின், குறித்த அந்த அரசமைப்பு பெறுமதி மிக்கதாக அமைய முடியும். ஒரு நாடு என்ற வகையில் அத்தகைய நிலைப்பாட்டை உருவாக்க இயலாது போனதாலேயே, இழப்புக்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தக் காரணமான போரொன்று உருவாக அத்திபாரம் இடப்பட்டது.

அதேவேளை 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு 1972 ஆம் ஆண்டின் அரசமைப்புக்கு மேலதிகமாக நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமொன்றாக அமைந்தது. நாடாளுமன்ற கட்டமைப்பை மீறி நிறைவேற்று அதிகாரம் என்ற அதியுச்ச அதிகாரம் 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு மூலம் நிலை நிறுத்தப்பட்டது. பலம் வாய்ந்த பொருளாதார சுபீட்சத்தை ஏற்படுத்த வேண்டுமானால், அரசியல் உறுதித்தன்மை அவசியம் என அந்த அரசமைப்பைச் சமர்ப்பித்த வேளை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தெரிவித்திருந்தார். அதற்காக நிறைவேற்று அதிகாரம் வலுமிக்கதாக ஆக்கப்படவேண்டுமெனவும் ஜே.ஆர் அவ்வேளையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

### மூன்று அரசமைப்புக்களும் சிறுபான்மை இனங்களுக்கு நன்மை செய்யவில்லை

**கே:** குறித்த மூன்று அரசமைப்புக்களும் தேசியம் என்ற வகையில் நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்காகப் பங்களிப்பு வழங்கவில்லை என்று கூறுகிறீர்களா?

**ப:** ஆம். இனங்கள் மத்தியிலான இணைப்பு நாட்டுக்கு அவசியமானதொன்று. அது 1972 ஆம் ஆண்டில் காணப்படவில்லை. அரசமைப்புக்கான 13ஆவது திருத்

தத்தின் மூலம் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. 1987 ஆம் ஆண்டின் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அதனை முறைப்படி நடைமுறைப்படுத்த இயலாது போயிற்று. அந்த வகையில் குறிப்பிட்ட மூன்று அரசமைப்புக்கள்மூலமும்அரசியல் ரீதியில்நாட்டின் தமிழ் முஸ்லிம்சிறுபான்மைச் சமூகங்கள் ஒன்றிணைவில் இருந்து விலகிச் சென்றன.

**கே**: நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களைக் கணக்கில் எடுக்காது செயற்பட இயலாதெனத்தாங்கள் கருதுகிறீர்களா?

**ப**: சிறுபான்மை இனத்தவர்களும் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். அவர்களது அபிலாசைகளை நிறைவேற்றும் விதத்தில் அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தோடு அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல்கள்தொடர்பானசட்டவிதிகள் காரணமாகபாரதூரமானசிக்கல்கள் தற்போது உருவாகியுள்ளன. 1972 ஆம் ஆண்டில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டன. அது தொடர்பாக 1978ஆம்ஆண்டில்கூட கவனத்தில் கொள்ளப்படவில்லை. தற்போதைய புதிய அரசமைப்பில் அடிப்படை மனித உரிமைகள்தொடர்பானதனியானஅத்தியாயமொன்றுசேர்க்கப்படவேண்டும். இத்தகைய சகலவிடயங்கள் குறித்து நோக்குகையில், இலங்கைக்குப் புதியதொரு அரசமைப்பு அத்தியாவசியமாகிறது. அது முன்னைய மூன்று அரசமைப்புக்களில்இருந்தகுறைபாடுகளைநீக்கும் விதத்தில் அமைதல் வேண்டும்.

### புதிய அரசமைப்புக் குறித்து தவறான பரப்புரை

**கே**: புதிய அரசமைப்பில் ஒருங்கிணைந்தஅரசுஎன்றநிலைப்பாடு நீக்கப்படுமெனவும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை நிலைப்பாடு நீக்கப்படவுள்ளதாகவும்சிலஅரசியல் வாதிகள்குற்றச்சாட்டுகிறார்களே. அது குறித்த தங்களது கருத்தென்ன?

**ப**: இன்று புதிய அரசமைப்பு உருவாக்கத்தை எதிர்க்கும் தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுத் தான்இது. இருப்பினும்இன்று ஒருங்கிணைந்த அரசு என்ற வடிவத்தின் கீழ்அதிகாரங்களைப்பகிர்ந்துகொள்ள தமிழ்த்தேசியக்கூட்டமைப்புபோன்ற அரசியல் தரப்புக்கள் கூட முன் வந்துள்ளன. அது ஒருஆரோக்கியமான அறிகுறி. இதற்குமுன்னர்ஒருபோதும் இத்தகைய நிலை நிலவவில்லை.
ஒன்றிணைந்த அரசு என்ற கோட்பாடுதொடர்பில்நோக்கினால்,அதனை அதிகாரப் பகிர்வு எனக் கொள்ள இயலாது. அப்படிக் கொள்வோமானால் அதுகூட்டரசு அரசமைப்பாகக்கருதப்படக் கூடும். அத்தகைய விமர்சனம் காரணமாகவே அரசமைப்பில் ஒருங்கிணைந்தஎன்றவடிவத்தைப் பேண ஆர்வம் காட்டப்படுகிறதுஎன எனக்குப் படுகிறது.
ஒருங்கிணைந்த மற்றும் கூட்டரசு எனக்கூறப்படுவதுஅரசியல்விஞ்ஞானத்தில் இரு நிலைப்பாடுகள் மட்டுமே. அப்படியானால் அமெரிக்காவில் கூட்டாட்சி அரசமைப்பே நடைமுறையில் உள்ளது. அப்படியிருந்தும் அந்த நாட்டில் பிரிவினை ஏற்பட்டுள்ளதா? இல்லையே. உண்மையில் அதுவோர் தவறான கருத்து மட்டுமே.
நாங்கள் பல ஆண்டுகள் காலமாகப் போரால் பாதிக்கப்பட்டோம். நாம் இலங்கையில் ஒன்றிணைந்த நிர்வாகத்தைக் கொண்டிருந்தால் நாட்டில் போர் எவ்வாறு ஏற்பட்டது? ஒன்றிணைந்தநாட்டில்எதற்காகப்போர் ஏற்பட்டது?

> என்னைப் பொறுத்தவரை மதங்கள் என்பவை மனதிலுள்ளஉணர்வே. அரசமைப்பில்மதங்கள் தொடர்பாகக் குறிப்பிடப்படுவதன் மூலமோ, அவ்வாறு குறிப்பிடுவதைத் தவிர்ப்பதன் மூலமோ மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை.

> சிறுபான்மை இனத்தவர்களும் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். அவர்களது அபிலாசைகளை நிறைவேற்றும் விதத்தில் அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

> தர்க்கரீதியாகநோக்குமிடத்துபௌத்த மதத்துக்கு முன்னுரிமைவழங்குவதன் மூலம் மதப்பாதுகாப்பு ஏற்படுமாஎனக்கூறுவதுசிக்கலானதொன்றே. அது மதங்களைப் பின்பற்றும் மக்கள் மத்தியிலுள்ள நம்பிக்கையாகும்.

இதில்ஒன்றிணைந்துமுன்னோக்கிச் செல்வது எவ்வாறு என்ற விடயம் தான் பெறுமதிமிக்கது. இதற்கு நாட்டின் சகல இனத்தவர்களதும் ஒத்துழைப்பு அவசியம். நாமும் இந்த அரசியல் நீரோட்டத்தின் பங்குதாரிகள் என்ற மனப்பாங்கை சிறுபான்மை இனத்தவர் மத்தியில்நாம் ஏற்படுத்தியாக வேண்டும். புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது அதுவே மிகப்பெறுமதி மிக்கதாக அமையும். ஒன்றிணைந்தஎன்றசொல்லைநீக்கியதும் நாட்டில் பிரிவினை ஏற்படுத்தப்படுமெனச் சிலர் வாதிடக்கூடும். ஆனால் அந்த விதம் முடிவெடுப்பது தவறு உலகின் ஏனைய நாடுகளின் அரசியலை அவதானித்தால், அந்த வித அச்சத்துக்கு அர்த்தமே இல்லை என்பது புலப்படும். நாட்டைப் பிரிப்பதென்பதுஅத்தனைதூரம்இலேசான காரிமொன்றல்ல. கடந்த காலத்தில் நாட்டில்போர்தொடர்ந்தது. அதனால் நாடு பிளவுபட்டு விடவில்லையே. இன்றைய பன்னாட்டுச் சூழலை நோக்கினால் ஒருபோதுமே எமது நாட்டைப்பிளவுபடுத்தஇடம்ஏற்படப் போவதில்லை. இலங்கையைப்பிரிக்கக்கூடாதுஎன்றநிலைப்பாட்டிலேயே இந்திய அரசு செயற்படுகிறது. இந்தியாவில் பெருமளவில் தமிழர்கள் வாழ்கின்றனர். தமிழர்களுக்கென தனிஅரசொன்றுஉலகின்வேறொரு பகுதியில்அமைவதை இந்தியத்தமிழர்கள் விரும்பு வார்களா? தமிழீழத்துக்கான போராட்டத்துக்கு இந்திய மத்தி அரசு ஒருபோதும் ஆதரவளிக்கவில்லை. எனவேஒவ்வொருவரும் இனவாதக் கருத்துக்களைப் பரப்புவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். நாடு சுதந்திரமடைந்த பின்னர் இற்றைவரை நீண்டகாலம் ஓடி மறைந்துள்ளது. ஆனால்எம்மால்இதுவரை எதையும் பெரிதாகச் சாதிக்க முடிந்ததில்லை. சகல இனக் குழுமங்களுடனும் இணைந்து ஒரே பயணத்தை மேற்கொள்ளத் தவறியுள்ளோம் இதற்குப் புரிந்துணர்வு அவசியம் அதற்காக அரசமைப்பின் 19ஆவது திருத்தத்திற்குக் கூடிய பலம்வாய்ந்த வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டும்.

### பௌத்த மதத்துக்கான இடம் தொடர்ந்து பேணல்

**கே**: மதங்கள் குறித்த தங்களது கருத்தென்ன?

**ப**: என்னைப் பொறுத்தவரை மதங்கள்என்பவைமனதிலுள்ள உணர்வே. அரசமைப்பில்மதங்கள் தொடர்பாகக் குறிப்பிடப்படுவதன் மூலமோஅவ்வாறுகுறிப்பிடுவதைத் தவிர்ப்பதன் மூலமோ மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை. இது முற்றுமுழுதானபொய்யாகும். சகல மதங்களும்பொறிவைத்துமக்களது உணர்வுகளை மாற்றியமைக்க முயல்கின்றன.
1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளின் அரசமைப்புக்களில் பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. பௌத்த மதத்துக்கான இடம் தொடர்ந்து நிலைத்து வருகின்றது. அது தொடர்ந்து நிலைக்கும் வரை அரசமைப்பில் அதற்கு முக்கியத்துவம்உண்டாஇல்லையாஎன்ற சிக்கல் ஏற்படட்டே ஆகும். மக்கள் அத்தகைய பார்வையிலிருந்து விலகிக் கொள்ளும் வேளையே இத்தகைய சிக்கல் தலை தூக்கும்.
தர்க்க ரீதியாக நோக்குமிடத்து பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதன்மூலம்மதப்பாதுகாப்பு ஏற்படுமா எனக் கூறுவது சிக்கலானதொன்றே. அதுமதங்களைப்பின்பற்றும்மக்கள்மத்தியிலுள்ளநம்பிக்கையாகும்.
இலங்கை இதுவரையில் அரசியல் ரீதியில்முன்னேற்றமடையாதநாடாகும். ஜனநாயகவாதம்நிலவுவதாகக் கூறப்பட்டாலும் மக்கள் தற்போதும் தாம்பாதுகாப்பற்றநிலையில்உள்ளதாகவே கருதுகின்றனர். அரசியல் தொடர்பாகதர்க்கரீதியாகச்செயற்பட எமது மக்கள் பண்பட வேண்டும். கடந்தகாலங்களில்இடம்பெற்றதேர்தல்கள் குறித்து நோக்கினால் நாட்டு மக்களுக்கு அரசியல் வாதிகள் பல்வேறு தரப்பட்ட வாக்குறுதிகளை வழங்குகின்றனர். ஆனால் எவரும் சரி அவற்றை நிறைவேற்ற இயலுமா? இயலாதா? என்பது குறித்துச் சிந்திப்பதில்லை. மக்களில்பெரும்பாலோருக்குப்பகுத்தாய்ந்தறியும்திறன் குறைவு. ஆதலால்அரசியல்வாதிகள் தெரிவிக்கும் சகலவற்றையும் அவர்கள் நம்புகின்றனர். அரசியல் முன்னேற்றம் கண்ட நாடானால் இந்த விதம் அரசியல் வாதிகளுக்கு மக்களைஏமாற்றவாய்ப்புக்கிட்டாது. பலமிக்க அரசியல் நீரோட்டத்தை உருவாக்க வேண்டுமானால் மத்திய தர வகுப்பு அரசியல் பலப்படுத்தப்பட வேண்டும் என அறிஞர் அரிட்டோட்டஸ் கூட கூறியுள்ளார்.
முன்னேற்றமடைந்தநாடுகளில்மத்திய தர வகுப்பாரது அரசியல் அறிவு உயர்மட்டத்தில் காணப்படுகிறது. ஆதலால் அந்த மக்களை ஏமாற்ற அரசியல் வாதிகளால் இயலாது. இலங்கையர்களானநாம்இதுவரை அத்தகைய மட்டத்தை அடையாதிருப்பதால் அரசமைப்புக்குறித்து அரசியல்வாதிகளும், ஊடகங்களும் வெளியிடும் கருத்துக்களை அலசி ஆராய்ந்து பாராமல் ஏற்றுக் கொள்ளப்பழகிக் கொண்டுள்ளோம்.



## ஆசிரியருக்கான கடிதம்

### சுன்னாகம் சந்தையில் குறைபாடுகள்

சுன்னாகம் சந்தை வளாகத்திலுள்ள பழக்கடையின் கிழக்குத் திசையின் ஊடாக பாவனையாளர்கள் சந்தைக்குள் உட்செல்லவும் வெளியேறவும் அதிகசிரமங்களைஎதிர்கொண்டுவருகின்றனர்.
அந்தப் பகுதியில் நிலத்தின் மேற்பரப்பில் பதிக்கப்பட்ட கற்கள் சிதைவடைந்து காணப்படுவதுடன் கிடங்குகளும் காணப்படுகின்றன. அத்துடன் பழுதடைந்த பழங்களை வியாபாரிகள் இந்தஇடத்திலேயேவீசிவிடுவதையும் காண முடிகின்றது. இவற்றால் சுகாதாரச் சீர்கேடுகளும் தோன்றியுள்ளன.
மழை காலங்களில் வெற்றிலைக் கடைகளுக்குச் செல்வதிலும் சிர மங்கள் தோன்றியுள்ளன. அதன் கிழக்குப் புறத்தின் நுழைவாசலில் நீர் தேங்கிக் காணப்படுகின்றமையே இதற்கான காரணமாகும்.
இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டியது சம்பந்தப்பட்ட பிரதேசத்துக்கப் பொறுப்பான வலி.தெற்குப் பிரதேச சபையினரின் தலையாய கடமையாகும்.

த.பாக்கியராசா, ஏழாலை.

### யாழ்.நகரின் இதயப் பகுதியில் நிறைந்து கிடக்கும் கழிவுகள்

கஸ்தூரியார் வீதியுடன் ஜும்மா பள்ளிவாசல் வீதி சந்திக்கும் இடம் கழிவுகளால் நிறைந்து காணப்படுகின்றது. முன்னர் இவ்வாறானதொரு நிலை இங்கு காணப்படவில்லை. அண்மையில் கழிவுகளைச் சேரிக்கின்ற தொட்டிகள் இந்த இடத்தில் வைக்கப்பட்ட பின்னரே கழிவுகள் வீதியில் வீசப் பட்டுள்ளதைக் காண முடிகின்றது.
யாழ்.நகரின் இதயப் பகுதியான இந்த இடத்தில் தினமும் ஏராளமானவர்கள் நடமாடித் திரிகின்றனர். இவர்களில் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களையும் அதிகளவில் காண முடிகின்றது. இந்த நிலையில் கழிவுகள் இங்கு சிதறிக்காணப்படுகின்றமை யாழ்.நகரின் பெயருக்கே பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக உள்ளது.
ஒரு நகருக்கு அதன் சுத்தம் சிறந்த முறையில் பேணப்படுவதே பெருமை தருகின்ற விடயமாகவுள்ளது. இதை மாநகர சபை நிர்வாகம் உணர்ந்ததாகத் தெரியவில்லை.
ஆகவேயாழ்.மாநகரசபைகழிவுகளை அகற்றுவதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கிச் செயற்பட வேண்டும்.

பா.வளர்மதி, நாவாந்துறை.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 4 | | 5 | |
| | | | | 2 | | 4 | | 3 |
| | | 6 | | | 7 | 9 | | |
| 7 | 6 | | | | | | 1 | |
| | | | | 3 | | | | |
| | 2 | | | | | | 9 | 4 |
| | | 7 | 9 | | | 5 | | |
| 3 | | 2 | | 8 | | | | |
| | 1 | | 2 | | | | | 9 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 2 | 4 | 1 | 5 | 6 | 9 | 8 |
| 4 | 5 | 6 | 3 | 9 | 8 | 2 | 7 | 1 |
| 1 | 8 | 9 | 2 | 7 | 6 | 4 | 5 | 3 |
| 9 | 1 | 7 | 8 | 4 | 2 | 5 | 3 | 6 |
| 8 | 2 | 3 | 6 | 5 | 9 | 7 | 1 | 4 |
| 6 | 4 | 5 | 7 | 3 | 1 | 8 | 2 | 9 |
| 5 | 6 | 1 | 9 | 2 | 4 | 3 | 8 | 7 |
| 7 | 9 | 8 | 5 | 6 | 3 | 1 | 4 | 2 |
| 2 | 3 | 4 | 1 | 8 | 7 | 9 | 6 | 5 |

நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும்.

இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).


இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும்.

அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும்.

சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.




சிவா இயக்கத்தில் அஜித், காஜல் அகர்வால் இணைந்து நடித்திருக்கும் 'விவேகம்' படத்தின் முன்னோட்டக் காணொலி இன்று திரைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமூக வலைத்தளங்களிலும் இது தொடர்பி லான கருத்துப் பகிர்வுகள் இடம்பெற்று வருகின்றன. இந்திய ஊடகங்களும் இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளன. படம் திரைக்கு வரும் திகதி மிகநெருங்கி வரும் நிலையில், படம் தொடர் பிலான கருத்துக்கள் ஒவ்வொருநாளும் திரைக்கு வந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் படத்தின் 'எடிட்டர்' அன்ரனி ரூபன் நேற்றுமுன்தினம் தனது கீச்சகப் பதிவில், ''படத்தின் முன்னோட்டக் காணொலி 100 வீதம் தயாராகி விட்டது விரைவில் வெளியிடுவோம்'' என்று குறிப்பிட்டிருந்தார். இதையடுத்தே முன்னோட்டக் காணொலி இன்று வரலாம் என்று கருதப்படுகிறது.






**மேடம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவது அவசியம். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர்.

**இடபம்:** எவரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். நண்பரின் வழிகாட்டுதல் நன்மை அளிக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மிதுனம்:** திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். தாராள பணச்செலவில் குடும்பத் தேவை நிறைவேறும்.

**கடகம்:** அக்கம்பக்கத்தினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பெற்றோரின் தேவை யறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** உங்கள் பேச்சு, செயலில் முரண்பாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** அறிமுகம் இல்லாதவரிடம் பொது விஷயம் பேச வேண்டாம். தொழிலில் உரு வாகிற சிரமங்களைச் சரி செய்வது அவசியம் முக்கிய பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம்.

**துலாம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு உருவாகும். கடந்த கால உழைப்புக்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் அபரிமிதமான அளவில் வளர்ச்சி பெறும்.

**விருச்சிகம்:** மற்றவர்களைக் குறை சொல்ல வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக பயணம் செல்வர்.

**தனுசு:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழிலில் அதிக உழைப்பினால் இலாபம் அதிகரிக்கும். பெண்களுக்கு குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**மகரம்:** குடும்பத்தினரிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். சுய இலாபத்துக்காக சிலர் உதவ முன்வரலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**கும்பம்:** தாமதமாகிய பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த மறைமுகப் போட்டி குறையும். பிள்ளைகளின் செயல் மனதை மகிழ்விக்கும்.

**மீனம்:** வாழ்க்கைத் தரம் வியத்தகு அளவில் உயரும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு நண்பர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்ததை விட ஆதாயம் கூடும். சேமிப்பு உயரும்.

சவப்பெட்டிகளைத் தயார் செய்து விற்கும் அன்பர் ஒருவர், தான் செய்து முடித்த சவப்பெட்டி ஒன்றைத் தன்னுடைய கார் ஒன்றில் எடுத்துக் கொண்டு, அதைக் கேட்ட மனிதருக்கு வழங்குவதற்காகப் போய்க் கொண்டிருந்தார். போகும் வழியில் கார் பழுதடைந்து இடை வழியில் நின்று விட்டது.

அதை ஓரமாக நிறுத்திய அவர், தாமதம் ஆகக் கூடாது என்பதற்காக பெட்டியை மட்டும் தலைச் சுமையாக எடுத்துக் கொண்டு நடந்து செல்ல ஆரம்பித்தார். அது நடு நிசி நேரம். நன்றாகக் கவனிக்கவும் நடுநிசி நேரம்.
எதிரே தன்னுடைய மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர், அவரை மடக்கிப் பிடித்து, பணம் பறிக்கும் நோக்கத்துடன், விசாரணை செய்யத் துவங்கினார். "யோவ் சவப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு, இந்த வேளையில் எங்கே போகிறாய்?"
எம் ஆசாமி பதில் சொன்னார்.
"என்னைப் புதைத்திருந்த இடம் எனக்குப் பிடிக்கவில்லை. வேறு நல்ல இடத்தைத் தேடிப் பெட்டியுடன் போய்க் கொண்டிருக்கிறேன்"
அவ்வளவுதான் பொலிஸ்காரர்



டேய்! ஏன்டா இப்படியெல்லாம் கண்டு பிடிக்கிறீங்க... ஏற்கனவே கையில காசு மிஞ்சுதில்ல...



அன்று அவளைப் பார்க்க கிளாஸைக் கட் அடித்தேன்....



இன்று அவளை மறக்க கிளாசில் கட்டிங் அடிக்கிறேன்.

# பேமிலி மன்

கல்யாணத்திற்கு முன்பு 'தான் உண்டு தன் வேலை உண்டு' என இருந்த 'மன்' திருமணத்திற்கு பின்பாக பொண்டாட்டியை சமாளிக்க முடியாமல் ""பேய்" முழி" முழிக்கும் போது அவனை,
"பேய் முழி மன்"
"பேய் முழி மன்" என்கிறோம்
இதுவே காலப்போக்கில் மருவி 'பேமிலி மன்' (FAMILY MAN) ஆனது....





# புகையில் கருகும் உடல்கள்

பரமநாயகம் கேசவதாசன்

மனிதனுடைய தீய பழக்க வழக்கங்களால், அவனுடைய உடல் உள ஆரோக்கியம் மட்டுமன்றிச் சமூகத்தின் ஆரோக்கியமும் பாதிக்கப்படுகிறது. இதில், உடலுக்குப் பகையாகும் புகைத்தல் பழக்கம் மற்றும் போதைப் பொருள் பாவனை என்பன முக்கியம் பெறுகின்றன.

**நாளொன்றுக்கு 60 பேர் சாவடைகின்றனர்**
இலங்கையில் சிகரெட் மற்றும் மதுப் பாவனையால் நாளொன்றுக்கு சராசரியாக 60 பேர் இறக்கின்றனர். வருடமொன்றுக்கு இந்த எண்ணிக்கை சராசரியாக 20 ஆயிரம் ஆகும். பன்னாட்டு ரீதியில் வருடாந்தம் சுமார் 60 இலட்சம் பேர் புகைப்பிடிப்பதால் உயிரிழக்கின்றனர். புகைப்பிடிப்பவர்களைச் சூழவுள்ள இரண்டாம் நிலை புகைத்தல் காரணமாக வருடமொன்றுக்கு 6 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். புகைப்பிடிப்ப வர்கள் தாமும் கெட்டு, தமது உடல்நலத்தையும் கெடுப்பதோடு மட்டுமன்றிச் சுற்றுப்புறச் சூழல், குடும்பத்தினர், அண்டை அயலாரின் நலனையும் கெடுத்துவிடுகின்றனர்.

**புகையிலையில் அதிக நச்சுப்பொருள்கள்**
புகையிலையிலிருந்து 300க்கும் அதிகமான நச்சுப்பொருட்கள் வெளியாகின்றன. அவற்றில் அதிகம் கேடு விளைவிப்பவை நிக்கொட்டின், கார்பன்டை ஒக்ஸைட், கார்பன் மோனாக்ஸைட், கார்பன்டெட்ரா குளோரைட் ஆகியவையாகும். இவை அனைத்தும் கரியமில வாயுவுடன் தொடர்புடையவை. புகைப்பிடிப்பதால் உதடுகள், நாக்கு, வாயின் உட்பகுதி, கன்னம், மூக்கின் இருபகுதியிலும் உள்ள சைனஸ், தொண்டை, உணவுக்குழாய், சுவாசக்குழாய், நுரையீரலுக்குள் செல்லும் சிறு காற்றுக் குழாய்கள், நுரையீரல், நுரையீரலைச் சுற்றியுள்ள உறை, இரைப்பை, கல்லீரல், சிறுகுடல், பெருங்குடல், கணையம், சிறுநீரகம், ஆண் பெண் பிறப்பு உறுப்புக்கள், இதயம், மூளை, கண்கள் ஆகிய உடல் உறுப்புக்கள்பாதிக்கப்படுகின்றன. கிட்டத்தட்ட உடலின் எல்லா உறுப்புக்களும் பாதிக்கப்படுகின்றன என்று சொல்லலாம்.

பெரிய, சிறிய, நடுத்தர குருதிக் குழாய்களைச் சுற்றியுள்ள சிறிய தசைகளை நிக்கொட்டினும், பிற நச்சுப்பொருள்களும் சுருங்கச் செய்து குருதிக் குழாய்களில் அடைப்பை ஏற்படுத்தி, குருதி ஓட்டத்தைக் குறைக்கின்றன. இதனால் உடல் உறுப்புக்கள் படிப்படியாகச் செயலிழக்கின்றன. மூளைக்கு குருதி கொண்டு செல்லும் கரோடிட் குருதிக் குழாய்களும், அதன் கிளைகளும் சுருங்கி மூளையின் செல்களுக்குக் குறைவான குருதி செலுத்தப்படுவதால் பக்கவாதம் ஏற்படுகின்றது. கண்களுக்கு குருதியை அளிக்கும் முக்கிய குழாய்களில் சுருக்கம் ஏற்பட்டு விழித்திரை பழுதடைந்து, திடீர்ப் பார்வையிழப்பு ஏற்படுகின்றது. காதுக்குச் செல்லும் குருதிக் குழாய்களில் சுருக்கம் ஏற்படுவதால் ஒட்சிசன் விநியோகமின்றிக் கேட்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

ஒரு வீட்டில் கணவரோ அல்லது தந்தையோ, சகோதரனோ புகைப்பிடிப் பவராக இருப்பாரானால் அவர்கள் நோயின் தூதுவர்கள் ஆவர். இவர்களது மூச்சிலிருந்து வெளிப்படும் நச்சுப்பொருள்களை வீட்டிலுள்ள பெண்கள் அல்லது மற்ற ஆண்கள் சுவாசிப்பதால், அவர்கள் அனைவரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். தாயிடம் பால் அருந்தும் குழந்தைகளும் இந்த நச்சுக்காற்றைச் சுவாசிப்பதிலிருந்து தப்பிப்பதில்லை.

**மலட்டுத்தன்மை, மாரடைப்பு ஏற்படும்**
புகைப்பிடிக்கும் ஆண்களுக்கு ஆண் தன்மை குறைந்து மலட்டுத் தன்மை ஏற்படுகிறது. பெண்களின் கருச்சிதைவுக்கு முக்கிய காரணமே கணவன்மாரின் புகைப்பழக்கம் தான். கர்ப்பப்பை, கருப்பைக் கட்டிகளுக்கும் மூலகாரணம் கணவன் புகைப்பிடிப்பது தான். ஆண்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கு முதல்காரணிபுகைதான். புகைப்பழக்கத்தால் குருதிக்குழாய்கள் அனைத்தும் சுருங்கி அவற்றில் அடைப்பு ஏற்படுகின்றன. இதயத்துக்குச் சுத்தமான குருதியை விநியோகிக்கும் மூன்று முக்கிய பெரிய குருதிக் குழாய்களும் அவற்றின் கிளைகளும் சுருங்கி விடுகின்றன. இதனால் இதயத்தின் தசைக்குப் போதுமான தூய குருதி கிடைக்காமல் இதயத் தசை கெட்டு, மாரடைப்பு ஏற்படுகின்றது.

ஒருவர் தொடர்ந்து புகைப்பிடித்தால் கணுக்கால், நடுக்கால், நடுத்தொடை, இடுப்பு என காலை வெட்டி எடுக்கும் நிலை ஏற்படலாம். தொடர்ந்து புகை பிடிக்கும் ஓர் ஆண் மகனுக்கு ஆண் தன்மை குறைவதுடன் விந்திலுள்ள உயிரணுக்கள் உற்பத்தியின்றி இரண்டு விதைகளும் சுருங்கி விடுகின்றன. அவனுக்குப் பாலியல் சார்ந்த பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்புள்ளது.'

**புற்றுநோய்க்கு வழிவகுக்கும்...**
புகைப்பிடிப்பதால் நுரையீரலில் ஏற்படும் அஸ்மா, ஒவ்வாமை, நிமோனியா, காசநோய் ஆகியவை விரைவில் தொற்றிக் கொள்கின்றன. நாக்கு, தொண்டை, உணவுக்குழாய், இரைப்பை ஆகியவற்றில் ஏற்படும் புற்றுநோய்க்குப் புகையே மூலகாரணமாகும். இரண்டு கால்களுக்கும் செல்லும் பெரிய குருதிக்குழாய் மற்றும் கிளைக் குழாய்களின் சுருக்கத்தால் "துராம்போ ஒன்ஜைடிஸ் ஒப்லிட்டிரான்ஸ்" என்ற அடைப்பு நோய் ஏற்பட்டு கால்களிலும், கால்விரல்களிலும் அடைப்பு உண்டாகிறது. இதனால் தாங்க முடியாத வலி ஏற்படுவதுடன், நாளடைவில் குருதி செல்வது முற்றிலும் தடைப்பட்டு ஒவ்வொரு விரலாகக் கருகிவிடும்.

**தொற்றா நோய்களின் உற்பத்தியாக்கி...**
ஆசிய நாடுகளில் தொற்றாத நோய்கள் அதிகரித்து வருகின்றமை சுகாதாரத்துக்குப் பெரும் சவாலாகும். இந்தத் தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு நான்கு முக்கிய காரணிகள் இனங்காணப்பட்டுள்ளன. இதில், சிகரெட் பாவனை முதல் காரணியாக அமைந்திருப்பது துயரளிக்கிறது. புற்றுநோய், மாரடைப்பு, பாரிசவாதம், சுவாச நோய்கள், குருதி அழுத்தம் முதலான தொற்றாத நோய்கள் எல்லாம் 'சிகரெட்' தரும் அரிய பரிசுகள்.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அதிகமானோர் தாம் கஷ்டப்பட்டு உழைக்கும் சம்பளத்தின் பெரும் பகுதியை சிகரெட் பாவனைக்குச் செலவழிக்கின்றனர். இதனால் தனிமனித பொருளாதாரத்தில் பிரச்சினை ஏற்படுவது மட்டுமன்றி நாட்டின் பொருளாதாரமும் பாதிப்படைகின்றது. அதேநேரம், புகைப்பவர்கள் தாம் புகைப் பிடிப்ப தற்குப் பல்வேறு காரணங்கள் கூறுகின்றனர். அவர்கள் கூறும் காரணங்களுக்கும் புகைத்தலுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை.

அன்பானவர்களே! கருகிச் சாவதற்கும், கடுமையான பொருளாதாரச் சீர்குலைவுக்கும் உடலின்உறுப்புக்களை இழப்பதற்கும் எதிர்பாராத நேரத்தில் மாரடைப்பு ஏற்படுவதற்கும் முழுமுதற் காரணமான புகைப்பழக்கம் தேவைதானா என்று சிந்தித்துப் பாருங்கள்!



# ஒகஸ்ட் மாத பலன்

## கும்பம்

ஆதரவற்றவர்களை ஆதரிக்கும் குணமுடைய கும்ப ராசிக்காரர்களே, இந்த கால கட்டத்தில் பொன், பொருள் சேரும். வாகன யோகம் உண்டாகும். விருந்து, கேளிக் கைகளில் பங்கேற்கும் வாய்ப்புக்கள் கிடைக்கும். புதிய தொடர்புகள் ஏற்படும். மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடக்கும். பயணங்கள் உண்டு.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

குடும்பத்தினருக்காக பொருட்களை வாங்குவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். வாழ்க்கையில் புதிய முன்னேற்றம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் மற்றும், முன்னேற்றம் காணப்படும்.

புதிய இடங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தங்கள் மகிழ்ச்சி அளிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைச்சுமை குறையும். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். கடினமாக காரியங்களையும், திறமையாகச் செய்து முடிப்பீர்கள். சக பணியாளர்களிடம் இணக்கமாக இருந்து காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். அரசியல்துறையினர் வீட்டைவிட்டு வெளியில் தங்கி மக்களுக்கு பணியாற்ற வேண்டிய சூழல் உருவாகும்.

பணிச்சுமை அதிகரிக்கும். உடன் இருப்பவர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள்.

கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். நீண்ட நாட்களாக வாய்ப்புக்கு காத்திருந்தவர்களுக்கு மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரும்.

உங்கள் திறமைகளை நிரூபிக்க நல்ல சந்தர்ப்பங்கள் வரும். எந்த சலனத்துக்கும் ஆட்படாமல் அதை முறையாகப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். பெண்களுக்கு புதிய தொடர்புகள் மூலம் இலாபம் உண்டாகும்.

மனம் மகிழும்படியான நிகழ்ச்சிகள் நடக்கும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பதும், பணி இடங்களில் அனுசரித்துச் செல்வதும் நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். பாடங்கள் படிப்பது பற்றிய கவலை நீங்கும். புதிய நட்பால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**பரிகாரம்:**
பிரதோஷ காலத்தில் நந்தி தேவரையும், சிவனையும் வணங்கி சனி பகவானுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடுவது துன்பங்களை போக்கும். மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
புதன், வெள்ளி, சனி.

# வரலாற்றில் இன்றைய தினம் 17.08.2017

1560 - ஸ்கொட்லாந்தில் உரோமன் கத்தோலிக்கம் தூக்கிவீசப்பட்டு தேசிய சமயமாக புரட்டஸ்தாந்து அறிவிக்கப்பட்டது.

1668 - ஒட்டோமானில் ஏற்பட்ட 8.0 அளவிலான நிலநடுக்கத்தில் 8 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

1947 - இந்தியா- பாகிஸ்தான் இடையு றட்கிளிப் எல்லை வரையறுக்கப்பட்டது.

1977 - வடதுருவத்தை அடைந்த முதலாவது கப்பலானது ரஷ்யாவின் பனிப் பாறைகளைத் தகர்க்கும் கப்பலான ஆக்ரிகா.

1999 - துருக்கிவடமேற்குஇஸ்மிற்றில் 7.6 ரிச்டர் அளவிலான நில நடுக்கத்தில் 17 ஆயிரம் பேர்வரை உயிரிழந்ததுடன் சுமார் 50 ஆயிரம் பேர் காயமடைந்தனர்.

2006 - முல்லைத்தீவுப் படுகொலைக்கு தமிழக சட்டப் பேரவை கண்டனம். உயிரிழந்தோருக்கு 2 நிமிட அஞ்சலி.

2009 - ரஷ்யா சயானோ சஷன்ஸ்காயா அணையில் ஏற்பட்ட விபத்தொன்றினால் 75 பேர் உயிரிழந்ததுடன் நீர்மின் நிலையம் செயலிழந்து உள்ளூர் பிரதேசத்தில் மின் வழங்கல் தடைப்பட்டது.

2015 - பாங்கொக் எறவன் மதஸ்தலத்துக்கருகில் குண்டு வெடித்ததில் 19 பேர்வரை உயிரிழந்ததுடன் 123 பேர் காயமடைந்தனர்.

2016 - இராணுவ வெற்றிச் சின்னங்களை அகற்றுங்கள். நல்லிணக்கச் செயலணியின் முன் கிளிநொச்சி இளைஞர் கருத்து.

2016 - வடக்கு கிழக்கு இணைப்பே நல்லிணக்கத்துக்கு ஒரே வழியென மக்கள் கருத்தறியும் செயலணியிடம் வவுனியா மக்கள் கருத்து.


## நாளை

**18.08.2017**
வெள்ளிக்கிழமை

**ஆவணி - 02**

திதி: ஏகாதசி மு.ப. 09.02 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ. 09.01 வரை
சுபநேரம்: 06.05–07.35 வரை
ராகுகாலம்: 10.35–12.05 வரை

ஏகாதசி விரதம்




2004 - ஒரு ஒலிம்பிக் தொடரில் எட்டுத் தங்கப் பதக்கங்களை வென்ற முதலாமவர் ஆனார் அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ்.

## பத்தி எழுத்து

# கிளியின் கூடு பற்றி குரங்குக்கு நன்றாக தெரிந்துள்ளது

“கிளியின் கூடுபற்றி குரங்குக்கு என்ன தெரியும்?” இந்தவார்த்தையை இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவைப் பார்த்து இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளரான மலிங்க வீசியிருந்தார். ‘‘இலங்கை அணியின் வீரர்கள் உடற்தகுதி இழந்து காணப்படுகின்றனர். அவர்களிடம் பணத்துக்காக விளையாடும் நோக்கம்தான் உள்ளது. நாட்டுக்காக விளையாடும் எண்ணமில்லை’’ என்று தயாசிறி தெரிவித்த விமர்சனத்துக்கு செய்தியாளர் சந்திப்பொன்றில் பதில் வழங்குகையிலேயே ‘‘கிளியின் கூடுபற்றி குரங்குக்கு என்ன தெரியும்?’’ என்று மலிங்க தெரிவித்திருந்தார். இதன் அர்த்தம் இலங்கை அணியின் கிரிக்கெட் வீரர்களின் உடல்தகுதி தொடர்பில் தயாசிறி ஒன்றும் அறியாதவர் என்பதே. இது தொடர்பில் விசாரணை நடத்திய இலங்கை கிரிக்கெட் சபை மலிங்கவுக்கு ஒத்திவைத்த ஓராண்டு காலத் தடை விதித்தது.

தற்போது நடைபெற்றிருக்கும் சம்பவங்களைப் பார்த்தால் கிளியின் கூடுபற்றி குரங்குக்கு நன்றாகத் தெரிகிறது, ஆனால் கிளிக்குத்தான் ஒன்றும் தெரியவில்லை என்று எண்ணத்தோன்றுகிறது. அதாவது இலங்கை வீரர்களின் உடற் தகுதி தொடர்பில் தயாசிறிக்குத் தெரியும் விடயங்கள்கூட இலங்கை வீரர்களுக்குத் தெரியவில்லை.

இலங்கை அணியின் கடந்த கால மிகமிகக் கேவலமான தோல்விகளுக்கு வீரர்களிடத்தில் உடல்தகுதி இல்லாதமையே முக்கிய காரணம். இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது. மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் முடிவடைந்துள்ளது. இலங்கைக்குச் சிறு வாய்ப்பையேனும் வழங்காமல் இந்தியா கிண்ணம் வென்றது. இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் சந்திமல் உடற்தகுதி இல்லாததால் விளையாடவில்லை. முதலாவது ஆட்டத்தின்போது அசல குணரட்ன காயமடைந்ததால் அவர் அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் விளையாடவில்லை. கேரத் காயமடைந்தார். இதனால் அவர் முதலாவது ஆட்டத்தின் கடைசி இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட வரவில்லை. மூன்றாவது ஆட்டத்தில் கேரத்துக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. கேரத்துக்கு வழங்கப்பட்ட ஓய்வு இலங்கை அணியின் அடுத்தடுத்த தொடர்களைக் கருத்தில் கொண்டு வழங்கப்பட்ட ஓய்வு என்று தெரிவிக்கப்பட்டது. கேரத் டெஸ்ட் ஆட்டங்களுக்கான பிரத்தியேக வீரர். இந்திய அணிக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி20 தொடர்களின் போதும் அவர் ஓய்விலேயே இருக்கப்போகிறார். இவை அனைத்தும் இந்தியாவுக்கு எதிரான தொடரில் நடந்தவை.

முன்னதாக சுமார் ஒரு வருட காலமளவில் காயம் காரணமாக மலிங்க விலகியிருந்தார். அப்போது அணித்தலைவராக இருந்த மத்தியூஸும் அடிக்கடி காயமடைந்ததால் பொறுப்புத் தலைவராக தரங்க செயற்பட்டார். மத்தியூஸ் இன்றுவரை ஒரு முழுமையான சகலதுறை வீரராகச் செயற்படவில்லை. எந்த நேரத்திலும் காயம் ஏற்படலாம் என்ற அச்சத்தில் அல்லது காயம் பெரிதாகலாம் என்ற யூகத்தால் அவர் பந்துவீச அழைக்கப்படுவதில்லை. இவரைவிட குசல் பெரேரா, நுவான் பிரதீப் உள்ளிட்ட பல வீரர்கள் உபாதைகளுக்கு உள்ளாகினர். அவ்வாறாயின் கிளியின் கூடு பற்றி கிளிக்குத்தான் தெரியவில்லை. குரங்கு நன்றாகவே தெரிந்து வைத்துள்ளது.

# உற்பத்தி விலைச் சுட்டெண்களின் செயலாற்றுகை

முதன்மைப் பொருளாதாரச் செயலாற்றுகைகள் சார்ந்து கடந்த 2016ஆம் ஆண்டு மே மாதம் மற்றும் நடப்பாண்டின் மே மாத காலப் பகுதி அதே போன்று ஆண்டு ரீதியான விகித மாற்றம் என உற்பத்தி விலைச் சுட்டெண்களின் அசைவுகள் கீழ் வருமாறு அமைந்துள்ளன.


| முதன்மைப் பொருளாதாரச் செயற்பாடுகள் | உற்பத்தி விலைச் சுட்டெண் | | ஆண்டு ரீதியான மாற்ற விகிதம் (மே 2017/ மே 2016) |
|---|---|---|---|
| | 2016 மே | 2017 மே | |
| அனைத்துப் பொருளாதார நடவடிக்கை | 104.8 | 126.1 | 20.3 |
| விவசாயம் | 112.3 | 164.5 | 46.5 |
| உற்பத்திதுறை | 103.5 | 109.6 | 5.9 |
| மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் | 86.6 | 86.3 | - 0.3 |

நடப்பாண்டின் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான உற்பத்தி விலைச் சுட்டெண் 126.1 ஆகக் காணப்படுகிறது. மூன்று முதன்மைப் பொருளாதார நடவடிக்கை குறிகாட்டிகளான 'விவசாயம்', 'உற்பத்தி' மற்றும் 'மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்' என்பனவற்றின் விலைச் சுட்டெண்கள் முறையே 164.5, 109.6 மற்றும் 86.3 ஆக பதிவாகியுள்ளன.

அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான குறியீட்டின் வளர்ச்சி விகிதத்தை நோக்குகையில் நடப்பாண்டின் ஜீன் மாத காலப்பகுதியில் 20.3 சதவீதமாக அமைந்திருக்கும் அதேவேளை "விவசாயம்", "உற்பத்தி" மற்றும் "மின்சாரம் மற்றும் நீர் வழங்கல்" குறிகாட்டிகள் முறையே 46.5, 5.9விகித வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளன. அத்துடன் மின்சாரம் மற்றும் நீர் விநியோக குறிகாட்டி 0.3 விகிதமாக குறைவடைந்துள்ளது. (ஓ)

## அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்கத் தீர்மானம்

### வாழ்க்கைச் செலவுக் குழு தெரிவிப்பு



அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குவது குறித்த தீர்மானத்தை வாழ்க்கைச் செலவு குழு மேற்கொண்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையுடன் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நெல் அறுவடை இடம்பெறுவதால் எதிர்வரும் காலங்களில் சந்தைக்கு அதிகளவான அரிசி விநியோகிக்கப்படும் காரணங்களைக் கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இறக்கமதி செய்யப்படும் அரிசி உள்ளீடுகள் காரணமாக உள்நாட்டு அரிசியின் விலை குறைவடையும் எனவும் வாழ்க்கைச் செலவு குழு தெரியப்படுத்தியுள்ளது.

மேலும் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சீனிக்கான விசேட வர்த்தக வரி எட்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. பன்னாட்டுச் சந்தையில் சீனியின்விலைகுறைவடைந்தமையே இந்த வரிவிதிப்பனவின் அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளமை குறித்து நோக்கத்தக்கது. (ஓ)

## மக்களையும் சொத்துக்களையும் பாதுகாக்கும் காப்புறுதி முறைமை

### அரசின் நடவடிக்கைகளுக்கு உலக உணவுத் திட்டம் பாராட்டு

நாட்டில் உள்ள அனைத்து மக்களையும் ,சொத்துக்களையும் பாதுகாக்கும் காப்புறுதி முறைமை ஒன்றினை அறிமுகப்படுத்தும் விதமாக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு உலக உணவுத் திட்டம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும்நிதி அமைச்சகத்தினிடையே அண்மையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இலங்கை அரசு முன்னெடுத்துள்ள மேற்படி காப்புறுதி முறைமை தொடர்பிலான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தவிர, வெள்ளம், மண்சரிவு மற்றும் வறட்சி போன்ற இயற்கை அழிவுச் சீற்றங்கள் ஏற்படும் போது அதற்குரிய தொழில்நுட்ப உதவி வழங்கல்களை முன் மொழிவதற்கு நாம் தயாராக உள்ளோம் என உலக உணவு திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எல்தரின் கசிம் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்றவகையில் இலங்கையில் இதுபோன்றதான காப்புறுதி முறைமை அறிமுகப்படுத்துவது ஓர் சிறப்புத் தேர்ச்சிக்குரிய நடவடிக்கையாக கருதப்படுகிறது.

மேலும் இவ்வாறான காப்புறுதி முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதன் ஊடாக இலங்கை அரசு தனது கொள்கையில் அடுத்த கட்டத்திற்கு சென்றுள்ளது எனஉலக உணவு திட்டம் சுட்டிக் காட்டியுள்ளது. (ஓ)



## தமிழரிடையே வழங்கிவரும் வடசொற்களும் அவற்றுக்கான தமிழ்ச் சொற்களும்

தமிழில் வட மொழிச் சொற்கள் கலந்திருந்தாலும் இயன்றவரை தமிழ்ச் சொற்களையே நாம் பேச்சிலும் எழுத்திலும் வழக்குதல் வேண்டும். அதனால் தமிழ் ஆக்கம் பெறுதலோடு தமிழ்ச் சொற்களும் மறையாமல் வழங்கி வரும். பிறமொழிச் சொற்களும் தமிழை உருக்குலைக்க மாட்டா. தமிழ் மரபும் செழிக்கும்.

| வட சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|
| அவயவம் | உறுப்பு |
| அப்பியாசம் | பயிற்சி |
| அவசரம் | விரைவு |
| அன்னியம் | அயல் |
| அன்னம் | ஓண் |
| அற்புதம் | புதுமை |
| ஆகாயம் | வான்/விண் |
| ஆச்சரியம் | வியப்பு |
| ஆசீர்வாதம் | வாழ்த்து |
| ஆபரணம் | அணிகலன் |
| ஆரம்பம் | தொடக்கம் |
| இஷ்டம் | விருப்பம் |
| இராசா | வேந்தன் |
| உஷ்ணம் | வெப்பம் |
| உபகாரம் | உதவி |
| கல்யாணம் | திருமணம் |
| சந்திரன் | திங்கள் |
| சந்தோஷம் | மகிழ்ச்சி |
| சரஸ்வதி | கலைமகள் |
| சிநேகம் | நட்பு |
| சுதந்திரம் | உரிமை |
| சுவாசம் | மூச்சு |
| சூரியன் | ஞாயிறு |
| சோதி | ஒளி |
| தருமம் | அறம் |
| தேசம் | நாடு |
| நகரம் | பட்டினம் |
| நமஸ்காரம் | வணக்கம் |
| நித்திரை | உறக்கம் |
| பரீட்சை | தேர்வு |
| பாஷை | மொழி |
| பிரகாசம் | ஒளி |
| பிராணன் | உயிர் |
| பூசை | வழிபாடு |
| மாசம் | திங்கள் |
| மேகம் | முகில் |
| வசனம் | உரை |
| வருடம் | ஆண்டு |
| வாகனம் | ஊர்தி |
| விசனம் | கவலை |
| ஸ்ரீமதி | திருவாட்டி |
| ஸ்ரீமான் | திருவாளர் |

# மாத்தி யோசி



கண் தெரியாத சிறுவன் ஒருவன் ஒரு கோயில் அருகில் இருந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். அவன் எதிரில் "எனக்கு இரண்டு கண்களும் தெரியாது. தயவு செய்து தருமம் செய்யுங்கள்" என்று ஒரு பலகையில் எழுதி வைக்கப்பட்டிருந்தது. அந்த வழியில் போவோர் வருவோர் எல்லாம் அதைப் பார்த்துக் கொண்டேசென்றார்கள். ஆனால் எவரும் தருமம் பண்ணுவதாகத் தெரியவில்லை. அந்த வழியால் வந்த மற்றொரு நபர் தன்னுடைய கைப்பையில் இருந்து கொஞ்சம் சில்லறை நாணயங்களை எடுத்து அவன் தட்டில் போட்டார். பின்னர் அங்கு குறிப்பு எழுதி வைத்திருந்த பலகையின் பின் பகுதியில் ஒரு வாசகத்தை எழுதி வைத்து விட்டுச் சென்றார்.

சிறிது நேரத்தில் அவனது தட்டில் பலர் சில்லறைகளைப் போட ஆரம்பித்தனர். மாலையானது அந்தப் பலகையில் வாசகத்தை எழுதி வைத்தவர் அந்த இடத்துக்கு வந்தார். அப்போது அந்தச் சிறுவன். "ஐயா எனக்கு முன்னால் இருக்கும் பலகையில், காலையில் என்ன எழுதி வைத்துச் சென்றீர்கள்? என்று கேட்டான். அதில் முன்னர் என்ன எழுதப்பட்டிருந்ததோ! அதையே நான் வேறு விதத்தில் பலகையின் மறு பக்கத்தில் எழுதி வைத்தேன்" அது சரி! ஏன் எதற்காகக் கேட்கிறாய்" என்றார் எழுதியவர். "நீங்கள் போன பின்னர் என் தட்டில் பல பேர், சில்லறைகளை அடுத்தடுத்து போட்டுச் சென்றனர். அதுதான் கேட்டேன்" என்றான். "இன்றைய பொழுது நன்றாக விடிந்துள்ளது. ஆனால் என்னால் தான் அந்த அற்புதத்தைப் பார்க்க முடியவில்லை" என்று தான் அந்தப் பலகையில் எழுதி வைத்தேன். இந்த வாசகத்தைப் படித்த அனைவரும் உனக்கு கண்தெரியாது என்பதை விட நல்ல வேளை நமக்கு கண் இருக்கிறது. நம்மால் எல்லாவற்றையும் கண்டு ரசிக்க முடிகின்றது என்று எண்ணிக் கொண்டே உனக்கு தருமம் செய்து விட்டுப் போகிறார்கள்" என்றார் வாசகம் எழுதியவர்.

**உலகில் அற்புதமானது எதுவென்றால் ஒருவன் மனம் விட்டுச் சிரிப்பது. அவனது சிரிப்புக்கு காரணம் நாம் என்றால் அது அதை விட அற்புதமானது.**

# புற அழகினும் உள்ளழகே சிறப்பு

ஆளைப் பார்த்தால் மிக ஆடம்பரமாக இருப்பார்
மேனியில் மின்னும் உடை, எடு பிடி ஆட்கள்.
வாகனங்கள் எல்லாம் உண்டு. அவரும் ஆணழர்
ஆனால் படிப்புத்தான் சுட்டுப் போட்டாலும் வராது.
வீட்டுக்கு வருகின்ற கடிதத்தை இன்னொருவர் படித்துக் காட்ட வேண்டும்.
இத்தகைய மனிதர்களை வள்ளுவர் இப்படி இடித்துரைக்கிறார்.

*நுண் மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம்*
*மண்மாண் புனை பாவை அற்று - குறள் 407*

அதாவது நுண்ணிய கல்வி அறிவற்றவர்களின் அழகு, வெறும் கொலு பொம்மைகளின் அழகு போன்றது தான் என்கிறார். உடல் அழகு, உடை அழகு, முடியழகு, மஞ்சள் முகத்தழகு இவையெல்லாம் அழகல்ல. கல்வி அழகே உண்மையான அழகென்பதை நாலாடியார் இவ்வாறு கூறுகிறது.

*குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்*
*மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து*
*நல்லம் யாம் எனும் நடுவு நிலைமையால்*
*கல்வி அழகுே அழகு*

புற அழகை விட உள்ளழகிற்கு மிகுந்த சிறப்புத் தருபவர்கள் தமிழர்கள். ஆகவே ஆளைப்பார்த்து ஆளின் தோற்றத்தைப் பார்த்து எடை போடுவது தவறு. பெரும்பாலும் நல்ல அறிவாளிகள் வெளித்தோற்றத்தில் பகட்டாய் இருக்கமாட்டார்கள். எளியையான உடை, எளிமையான தோற்றத்துடனேயே காணப்படுவார்கள். கவர்ச்சியாக இல்லாத இவர்களிடம் ஆற்றல் இல்லை என்றுஇவர்களைநாம்புறக்கணித்தால்நாமேஆற்றல்இழந்தவர்களாவோம். செவியைக் கவர்கின்ற நல்ல அறிவுடைய ஆற்றல் இவர்களிடம் உண்டு. தமது பேச்சு மூலம் இவர்கள் உள்ளத்தைத் தொட்டு விடுவர்.



## வானத்துப் பூக்கள்

மின்னும் மின்னும் மீன்களாய்
மேகம் எங்குத் தெரியுமே
கண்ணைக் கவருங்காட்சியாய்க்
காட்டிக் காட்டி ஒளிருதே!

வெள்ளி வெள்ளிப் பூக்களாய்
விரவி எங்குங் கிடக்குதே!
அள்ளி அவற்றைப் போட்டவன்
அகிலம் போற்றும் இறைவனே!


கண்ணைக் கண்ணைச் சிமிட்டியே
வண்ண ஜாலம் புரியுதே!
விண்ணில் அவைகள் சூழவே
விரும்பி நிலவும் விளங்குதே

திக்குத் தெரியாக் கடலிலே
திணறும் மீனவன் தெளியவே
திக்குத் திசையைக் காட்டுமே
சேர்ந்து கலங்கள் செல்லவே!

# குழந்தைப் பருவத்து விஞ்ஞான ஆசை

தோமஸ் அல்வா எடிசன் ஒரு விஞ்ஞான மாமேதை. இவரது குழந்தைப் பருவத்து வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி. இவர் சிறுவனாக இருந்த போது வீட்டில் சின்னஞ் சிறு சோதனைச் சாலை ஒன்றை ஏற்படுத்தி வைத்தி ருந்தார். அந்தச் சோதனைச்சாலையில் காட்சி தரும் பல விதமான கருவிகளையும் பாத்திரங்களையும் கண்டு எடிசனுடைய பெற்றோருக்கு ஆச்சரியமாக இருந்தது.


ஒரு தடவை சிறுவன் எடிசன், தன் ஆராய்ச்சியின் மூலமாக ஒரு விடயத்தைத் தெரிந்து கொண்டான். எஸ்ட்ரிஜ் என்னும் உப்பை இரசாயன முறையில் கரைத்து அதன் மூலம் எழும் ஆவியை மெல்லிய ஒரு பொருளில் கசியாமல் அடைத்தால் அந்தப் பொருள் வானத்தை நோக்கி மேலெழும்பிச் செல்லும் என்பதுதான் எடிசன் தெரிந்து கொண்ட உண்மை. இந்தச் சோதனையை ஒரு மனிதனிடத்தில் பயன்படுத்தினால் சிலவேளை அந்த மனிதன் ஆகாயத்தில் எழும்பி காற்றில் மிதந்து செல்லக் கூடும் என்று சிறுவன் எடிசன் நினைத்தான். இந்த விடயத்தைச் சோதனை செய்து பார்ப்பதற்கு தன்னுடைய விட்டு



வேலைக்காரனைப் பயன் படுத்தினான் எஸட்லிஜ் என்ற உப்பைக் கரைத்து வேலைக்காரனிடம் கொடுத்து அவனை வயிறு முட்ட குடிக்கச் சொன்னாள்.

அதன் விளைவாக வேலைக்காரன் ஆகாயத்தில் பறக்கவில்லை. பூவுலகம் விட்டு பரலோகம் செல்லும் நிலையையே அடைந்தான். பின்னால் அவனைப் பிழைக்க வைக்க அவனது பெற்றோர் பெரும்பாடுபட வேண்டியிருந்தது.

## புள்ளிகளை இணைத்து உருவத்தைப் பூர்த்தி செய்வோம்



## சிறப்பு...

களை ஏற்படுத்தியாவது விசாரணையை முன்னெடுக்கவேண்டும் என்கிறார் அமைச்சர் ராஜித சேனாரத்ன. ஆனால் அவ்வாறு சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசமைப்பில் இடமில்லை என்று அந்த யோசனையை அடியோடு நிராகரிக்கிறார் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச.

நீதி அமைச்சரின் இந்தக் கருத்துக்குப் பதிலளிக்கும் விதத்தில், "அரசமைப்பைத் தூக்கிப் பிடித்து விமர்சித்துக்கொண்டிருப்பது அழகல்ல. அரசமைப்பு என்பது நிர்வாணத்தை மூடுவதற்கான ஆடையோ அல்லது நடக்க இருப்பவற்றைத் தடுப்பதற்கான கருவியோ அல்ல" என்றார் அமைச்சர் ராஜித.

இதேவேளை, மகிந்த மற்றும் அவரது குடும்பத்தினர், சகாக்கள் மீதான ஊழல் மோசடிக் குற்றச் சாட்டுக்களை தீர்ப்பாய (ட்ரயல் அட் பார்) முறையில் விசாரிப்பதற்கு அமைச்சரவையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ராஜித தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறப்புநீதிமன்றத்தை அமைப்பதென்பதும், தற்போதுள்ள நீதிமன்றக் கட்டமைப்பைப் பலப்படுத்துவதென்பதும் இரண்டு வெவ்வேறான விடயங்களாகும். சிறப்புநீதிமன்றத்தை அமைப்பதாக இருந்தால்தான் அரசமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். இது எனக்கும் தெரியும்.

நாட்டிலுள்ள மேல் நீதிமன்றங்களில் ஒன்றையோ அல்லது இரண்டையோ மறுசீரமைப்புக்குட்படுத்தி ஊழல், மோசடிகள் தொடர்பில் தீர்ப்பாய முறையில் நாளாந்தம் விசாரணை நடத்தலாம். இலங்கையில் அப்படி நடந்தும் உள்ளது. பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்டபோதும் தீர்ப்பாய முறையிலேயே விசாரணை முன்னெடுக்கப்பட்டது.

உயர் நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டுநீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதாக இருந்தால்தான் அரசமைப்பைத் திருத்தவேண்டும். மேல் நீதி மன்றத்தின் செயற்பாடுகளை மறுசீரமைப்பதற்கு பலப்படுத்துவதற்கு அவ்வாறு செய்ய வேண்டியதில்லை. இது பற்றி நிபுணர்களும் கூறியுள்ளனர். அமைச்சரவையில் இது பற்றிக் கூறினேன். இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தலைமை நீதியரசரும், சட்டமா அதிபரும் இணக்கம் தெரிவித்தால் இந்த விசாரணையை முறைமையை ஏற்படுத்தலாம்.

தீர்ப்பாய விளக்க முறையில் இரண்டு வாரங்களில் தீர்ப்பு வந்துவிடும். ஆட்சேபனைகள் இருந்தால் அது குறித்து மேன்முறையீடும் செய்யமுடியும்.

தீர்ப்பாய முறையில் விசாரணை நடத்த முடியாவிட்டால் மேல் நீதிமன்றங்களின் எண்ணிக்கையை 10ஆக அதிகரித்து அதன் ஊடாகச்செய்யலாம். முடியாதென்று இல்லை. செய்யக்கூடிய அமைச்சர் இருந்தால் இதை நிச்சயம் செய்யலாம்.

ஊழல், மோசடிகள் தொடர்பில் தீர்ப்பாய விளக்க முறையில் காலை, மாலையென இரண்டுவேளைகளும் விசாரணை நடத்தி அதை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். இதற்கான ஏற்பாடுகள் விரைவில் நடக்கும்- என்றார்.

இதேவேளை இந்த விசாரணைக்காகச் சிறப்பு நீதிமன்றம் அமைக்க முடியாது; அதற்கு சட்டத்தில் இடமில்லை, ஆனால் தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) மூலம் விசாரிக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த காலத்து ஊழல், மோசடிகள் மீதான விசாரணைகளை இந்த அரசே தாமதப்படுத்தியது. அரசியல் தலையீடே தாமதத்துக்கு முக்கிய காரணம். நீண்ட தாமதத்தின் பின் திடுதிப்பென சிறப்புநீதிமன்றத்தை அமைத்து இந்தக் குற்றச்சாட்டுகள் துரிதமாக விசாரிக்கப்படவேண்டுமென அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. அத்தகைய நீதிமன்றமொன்றை அமைக்கவேண்டுமென்றால் தற்போதுள்ள அரசமைப்பில் மாற்றம் செய்யப்படவேண்டும்.

அல்லது தலைமை நீதியரசரும் சட்டமா அதிபரும் இணக்கம் தெரிவித்தால் தீர்ப்பாயம் (ட்ரயல் அட்பார்) முன்னிலையில் இந்தக் குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படலாம்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவும், பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகாவும் சிறப்பு நீதிமன்றமொன்று அமைக்கப்படவேண்டுமென விடாப்பிடியாக இருக்கின்றார்கள்.

அமைச்சர் திலக் மாரப்பனவிடம் சிறப்பு நீதிமன்றம் பற்றி அரச தலைவர் ஆலோசனை கேட்டபோது அவ்வாறான நீதிமன்றமொன்றுக்கு அரசமைப்பில் இடமில்லை எனவும், தேவையானால் விசாரணைகளைத் துரிதப்படுத்த தற்போதுள்ள சட்டங்களின்படி நடவடிக்கைகளை எடுக்கலாம் எனவும் அவர் பதிலளித்திருக்கின்றார். எந்தக் கோணத்தில் பார்த்தாலும் சிறப்பு நீதிமன்றமொன்றை அமைப்பதற்கான சாத்தியங்கள் அறவே இல்லை -என்றார்.

மகிந்த மற்றும் அவரது சகாக்கள் மீதான விசாரணைகள் தாமதமாவதற்கும் விஜயதாசவே காரணம் என்று ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் குற்றஞ் சுமத்தி வருகின்றனர். இதனால் அவர் மீது நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதற்கும் அவர்கள் முயற்சி செய்து வருகின்றனர். விஜயதாசவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அதை எதிர்ப்பேன் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் தெரிவித்திருந்தார். (உ-5)

## 17 வருடங்களின்...

1987 முதல் 1989 வரையான காலத்தில் அமைதி காப்புப் படையாக வந்தது இந்திய இராணுவம். பின்னர் ஆக்கிரமிப்புப் படையாக மாறியது. சொல்லொணாக் கொடுமைகளை இழைத்தது. பெண்கள் வன்புணரப்பட்டனர்; அப்பாவிகள் பலர் கொல்லப்பட்டனர். இந்தக்காலப்பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய இராணு வத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

அவ்வாறு கொல்லப்பட்ட இந்திய இராணுவத்தினர் சிலருக்கு கல் வியங்காடு இராச பாதையில் பிடாரித் தோட்டம் பகுதியில் சிறிய நினை வுத் தூபி ஒன்று கட்டப்பட்டுள்ளது. தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றிலேயே அனுமதி இன்றி அந்தத் தூபி அமைக்கப்பட்டுள்ளது.

இப்போது அந்தத் தூபியைத் தேடிக் கண்டறிந்துள்ள இந்திய இரா ணுவத்தினர் அதில் அஞ்சலி செலுத்தவுள்ளனர். இதற்காக அந்த இடத்தைத் துப்புரவு செய்யும் ஏற்பாடுகள் இலங்கை இராணுவத் தினரால் முன்னெடுக்கப்பட்டது.

17 ஆண்டுகளின் பின்னர் அந்தத் தூபியைச் சுற்றிய பகுதி துப்புரவு செய்யப்படுகிறது. பலாலி இராணுவ முகாமிலி ருந்து கல்லறை அமைந்துள்ள இடத்துக்கு நேற்று வந்த இராணுவத்தினர் 4 பேர், காணி உரிமையாளருடன் கலந்துரையாடினர். இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் வரவுள்ளனர், எனவே இந்த இடத்தைத் துப்புரவு செய்யவுள்ளோம் என்று கூறியுள்ளனர்.

இந்திய இராணுவத்தின் அயதிகாரிகள் குழு இரு நாள் பயணமாக இலங்கைக்கு வருகை தரவுள்ளது. நாளை மறுதினம் சனிக் கிழமை கொழும்புக்கு வரும் இந்தக் குழு ஞாயிற்றுக்கிழமை மாலையே இலங்கையிலிருந்து புறப்படவுள்ளது. இந்திய இராணுவத்தினர் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்திருந்த காலப் பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் பலர், இந்திய இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். கொல்லப்பட்ட பொதுமக்கள் நினைவாக பகிரங்கமாக எந்தவொரு அஞ்சலி நிகழ்வுகளையும் எந்தத் தரப்புக்களும் ஏற்பாடு செய்வதில்லை என்று பொதுமக்கள் மத்தியில் கடும் விசனம் தெரிவிக்கப்படுகிறது. இந்திய இராணுவத்தினரால் மிலேச்சத னமாக கொல்லப்பட்ட யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஊழியர்களுக்கு மாத்திரமே, மருத்துவமனை நிர்வாகம் அஞ்சலி செலுத்தி வருகிறது.

(உ-5)

## டெனீஸ்வரனின்...

மறுத்திருப்பதும் கட்சிதனக்கு முக்கியமல்ல என்று தெரிவித்திருப்பதும் வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது என்று ரெலோ அமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண அமைச்சரவைக் குழப்பங்களைத் தொடர்ந்து அமைச்சர் டெனீஸ்வரனை பதவியில் இருந்து விலகுமாறு கட்சி கேட்டுக்கொண்டது. ஆனால், அவர் மறுத்துவிட்டார். அதனை அடுத்து அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் கட்சியின் உயர் மட்டக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப் பட்டார். அப்போதும் பதவி விலகுமாறு வற்புறுத்தப்பட்டார். ஆனால் அமைச்சர் அதற்கும் மறுத்துவிட்டார். இது குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கவலை தெரிவித்தார். எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில் இதுபற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். இந்தச் சர்ச்சைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-5)

**இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்**
**அரசாங்க தொழில் முயற்சி**
**அபிவிருத்தி அமைச்சு**

**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கொண்டச்சி தோட்டத்தில் மரமுந்திரிகை செய்யப்பட்ட நிலத்தில் 2017 பெரும்போக 2018 சிறுபோக காலத்தில் ஊடு பயிர் செய்வதற்காக வெளியாரிடமிருந்து விண்ணப்பம் கோரல்**

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மன்னார் மாவட்ட முசலி பிரதேசத்திற்குட்பட்ட கொண்டச்சி தோட்டத்தில் 2014, 2015, 2016 ஆண்டுகளில் பயிரிடப்பட்ட 450 ஏக்கர் நிலத்தில் மரமுந்திரிகையுடன் ஊடுபயிர்களாக எள்ளு, உழுந்து, கௌபி, பயறு, பூசணி, வெள்ளரிக்காய், தர்ப்பூசணி ஆகியன பயிரிடுவதற்காக ஏக்கருக்கு ரூபா 10,000/- என்ற அடிப்படையில் வெளியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

மேற்படி திட்ட வரைபை சமர்ப்பிப்பதற்கு முன்பதாக மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தில் நிபந்தனைகளைப் பெற்று அதற்கமைய திட்டவரைபு 2017.08.31 இற்கு முன்னதாக கீழ்வரும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமாகவோ நேரிலோ சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.


அனுப்பப்படும் **தபால் உறையின் இடது மேல் மூலையில் "ஊடு பயிர்ச் செய்கை - கொண்டச்சி தோட்டம்"** என தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

மேலதிக விவரங்களைப் பெறுவதற்கு உதவி பொது முகாமையாளர் - பெருந்தோட்டம் (தொலைபேசி - 011 288 4903) அல்லது கிளிநொச்சி / மன்னார் உதவி பிரதேச முகாமையாளர் (தொலைபேசி - 021 228 3830) அல்லது பிரதான காரியாலயத்திற்கு நேரடியாக விஜயம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்:**
**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்**
**இல.1334, பழைய கோட்டே வீதி, ராஜகிரிய.**

## மரண அறிவித்தல்

## கந்தையா வைரவநாதன்



முத்துலிங்கம் என அன்பாக அழைக்கப்படும் க.வைரவநாதன் 16.08.2017 புதன்கிழமை தனது பூதவுடலை விட்டு நீங்கினார்

அன்னார் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் நா. வ. கந்தையா அன்சன்ஸ் உரிமையாளரும் (தற்காலிக தொழில் முகவரி 959, பருத்தித்துறை வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூர் யாழ்.) ஆவார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் அன்னபூரணம், அன்னலட்சுமி, நாகம்மா, செல்வரத்தினம், அமிர்தலிங்கம், நாகரத்தினம், தியாகலிங்கம், ஜம்புலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**இல.19, சந்திரசேகர பிள்ளையார் கோயில் வீதி, நல்லூர் வடக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**

Galaxy Star
வெற்றி வாரம் 186 திகதி 16.08.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
02 01 09 25 52
10 11 16 20
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3, 277, 616/-
2017.08.20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
மஞ்சள் நிற டிக்கட்டுகளாகும்.
வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு
செல்லுபடியாகும்.

## துயர் பகிர்கின்றோம்



புங்குடுதீவு மடத்துவெளி
ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி
(வயலூர் முருகன்) ஆலய
பரிபாலன சபைத்தலைவர்
அருணாசலம்
சண்முகநாதன் அவர்களின்
அன்புத்தாயார்
திருமதி

### பத்தினிப்பிள்ளை அருணாசலம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**ஆலய பரிபாலன சபையினர்**
**புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலயம், புங்குடுதீவு - 07.**

## மரண அறிவித்தல்கள்

### ஸ்ரீமதி தாக்ஷாயணி அம்மா சிவஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள்



சுன்னாகம், மயிலணி கந்தசாமி கோவிலடியைப் பிறப்பிடமாக கொண்டவரும் காலஞ்சென்ற சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள் தம்பதியரின் மகளும் கோப்பாய், வெள்ளெருவைப் பிள்ளையார் தேவஸ்தானம், வல்வெட்டித்துறை வைத்தீஸ்வர தேவஸ்தான பிரதம குருவும் வல்வெட்டித்துறையை வசிப்பிடமாக கொண்ட நீலகண்டக்குருக்கள் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவஸ்ரீ பரமேஸ்வரக்குருக்களின் மனைவியும் ஆகிய ஸ்ரீமதி தாக்ஷாயணி அம்மா நேற்று (16.08.2017) புதன்கிழமை பி.ப.4.30 மணியளவில் காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான மலர்மங்கை, மங்கையர்க்கரசி மற்றும் சிவஸ்ரீ மனோகரக்குருக்கள் (வல்வை வைத்தீஸ்வரர் தேவஸ்தான பிரதம குரு) மலரகிதசர்மா (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ தி.கணேஸ்வரசர்மா மற்றும் பிரம்மஸ்ரீ ச.உமாகாந்தசர்மா, திருமதி கௌரிபாலா காலஞ்சென்ற ஸ்ரீமதி காயத்ரி (ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற பதிவாளர்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2017) வியாழக்கிழமை காலை வல்வெட்டித்துறையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.9.00 மணியளவில் ஊரணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு : 077 250 3386, 071802 3786**

தகவல்:
**சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரகுருக்கள்**
**ப.மலரகிதசர்மா (மகன்மார்)**

## நடராசா தியாகராசா



காரைநகர், நாரணிகேணியடி, பலகாட்டைப் பிறப்பிடமாகவும் இல.48, ஜின்னா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தியாகராசா நேற்று (16.08.2017) புதன்கிழமைகாலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இந்திராவதியின் அன்புக் கணவரும் ஜெயந்தி, ஜெயராஜா, ஜெயரஞ்சன், ஜெயப்பிரகாஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் தவசாந்தன், அருள்பாலினி, சுகந்தினி, தர்சினி ஆகியோரின் அன்பு மாமனும் வைஸ்ணவியின் பாசமிகு பேரனும் சந்திரசேகரம்பிள்ளை, சரோஜா, காலஞ்சென்ற வினோபாவே மற்றும் விஜயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ஜெயவீரசிங்கம் மற்றும் புஸ்பதேவி, வசந்தாதேவி, மகேந்திரராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2017) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.48, ஜின்னா வீதி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**



# குப்பைகளை நாடி செல்கின்றன யானைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகள் நடமாடும் வனப்பகுதியில் குப்பைகளும் கழிவுகளும் கொட்டப்படுவதால் அந்த இடத்துக்கு யானைகள் உணவு தேடி வருவதை தினமும் காண முடிகிறது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேச உள்ளூராட்சி சபைகளால் சேகரிக்கப்படும் குப்பைகளும், கழிவுகளும் கொட்டப்படும் திறந்த வனப்பகுதியில் இந்த யானைகள் வருகின்றன.

தினமும் பகல் நேரங்களில் 5 தொடக்கம் 7 காட்டு யானைகள் கூட்டமாக அந்த இடத்துக்கு வருவதாகவும், இரவு வேளையில் காட்டுக்கு திரும்பும்போது பயிர்களையும், உடைமைகளையும் சேதமாக்குவதாகவும் அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

"கழிவுகளையும், குப்பைகளையும் யானைகள் உணவாக உட்கொள்வது அவற்றின் உயிருக்கே ஆபத்து. இது போன்ற சந்தர்ப்பங்களில் வேறு இடங்களில் நிகழ்ந்துள்ள யானைகளின் உயிரிழப்புகள் ஏற்கனவே பதிவாகியுள்ளன" என வன உயிரினத்துறை அமைச்சுத் தகவல்கள் மூலம் தெரிய வருகிறது.

மட்டக்களப்பு பொலநறுவ நெடுஞ்சாலையோரமாக காணப்படும் ஆலங்குளத்துக்கு அருகிலுள்ள வனப் பகுதியில் சுமார் 5 வருடங்களாக குறிப்பிட்ட உள்ளூராட்சி சபைகளால் குப்பைகளும், கழிவுகளும் கொட்டப்படுவதாக கூறப்படுகின்றது.

இதனால் வன உயிரினங்கள் மட்டுமல்ல, அந்தப் பகுதி சுற்றுச்சூழலுக்கும் சுகாதாரத்துக்கும் அச்சுறுத்தல் காணப்படுவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஓட்டமாவடி பிரதேசத்தில் குப்பைகளை தரம் பிரிக்கும் மையமொன்று ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் கடந்த வருடம் திறக்கப்பட்ட போதிலும், தொடர்ந்தும் அந்த இடத்திலே குப்பைகளும் கழிவுகளும் கொட்டப்படுவதை பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கையில் வன உயிரின வலயங்களில் 54 இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதாகவும், அந்த இடங்களில் சுமார் 300 யானைகள் வரை நடமாடுவதாகவும் வன உயிரின அமைச்சுக் கூறுகின்றது.

இந்த இடங்களில் யானைகளின் நடமாட்டத்தைதடுக்கும் வகையில் மின்சார வேலிகளை அமைப்பதற்கு அந்த அமைச்சுக்கு ஜூன் மாதம் அமைச்சரவையின் அனுமதியும் கிடைத்துள்ளது. இருந்தபோதிலும், வன உயிரினங்கள் திணைக்களத்தால் இது போன்ற இடங்கள் அடையாளங்களும் காணப்பட்டிருந்தால் இந்த எண்ணிக்கை சற்று அதிகமாகவே இருக்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. (வ)

DLB CAR PLUS
சீட்டிழுப்பு இலக்கம் 19
சீட்டிழுப்பு திகதி 16.08.2017
வெற்றி இலக்கங்கள்
08 26 44 R திங்க
11 34 48
- 18
4,671,280/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2917 திகதி 16.08.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
59 61 63 73 K
போனஸ் இல.
14
சனிக்கிழமை ஜக்பொட்
37, 062, 415/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
03 41 44 66
பச்சை நிற டிக்கட்டுக்கள்
2017.08.19 ஆம் திகதி சனிக்கிழமை
சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு
செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## அருள்மிகு மயிலங்கூடல் ஞானவைரவ ஆலய பாலஸ்தாபனம் பற்றிய அறிவுறுத்தல்


அடியார்களே!

எமது ஆலய வைரவப் பெருமானுக்கு பாலஸ்தாபனம் செய்யத் தீர்மானித்திருப்பதால் பாலஸ்தாபன பூர்வாங்க வேலைகள் பற்றி ஆராய எதிர்வரும் 19.08.2017 சனிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அடியவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்.**

## மரண அறிவித்தல்

### விஜயானந்தன் விஜயரூபன்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கைதடி கிழக்கு, கைதடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயானந்தன் விஜயரூபன் நேற்று (16.08.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் விஜயானந்தன் சறோசாதேவி தம்பதியரின் அன்பு மகனும் விஜயரூபன் கார்த்திகாதேவியின் அன்புக் கணவரும் பிரிந்தா, பிரசன்னா, பிரவீனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2017) வியாழக்கிழமை பி.ப.2.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி கிழக்கு, ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி கிழக்கு, கைதடி.**
**077 046 8994**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கிநின்று வேலைசெய்ய பணிப்பெண் தேவை.

**தொடர்பு- 077 328 2051**

## கார் விற்பனைக்கு

TATA Indiga KC Number உடைய கார் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு- 076 980 3935**

## அரசியல்...

லையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 3 தமிழ் அரசியல் கைதிகள் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

ஏற்கனவே இதுபற்றி அவர்கள் வவுனியா மேல் நீதிமன்றில் கூறியதற்கு அமைவாக இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வுள்ளனர் என்று கைதிகள் சிறைச்சாலை அத்தியட்சகருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர் என்றும் உறவினர்கள் கூறினர்.

கரணவாய் வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த மதியரசன் சுலக்சன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராசதுரை திருவருள், நாவலப்பிட்டியவைச் னசேர்ந்த கணேசன் தர்சன் ஆகியோரே போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் மீது வவுனியா மேல் நீதிமன்றத்தில் 2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணை நடைபெற்றுவருகின்றது. வவுனியா மேல் நீதிமன்றத்தில் கடந்த தவணை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இந்த வழக்கை வேறு நீதிமன்றுக்கு மாற்றுவது தொடர்பில் ஆராயப்பட்டுவருவதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினர் மன்றுக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனை எதிர்த்து உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தப் போவதாக, மன்றில் வைத்தே அரசியல் கைதிகள் மூவரும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## தமிழ்...

யாழ்ப்பாணம், ஓக. 17

வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து தான் விலகப்போவதில்லை என்று அமைச்சர் பா. டெனீஸ்வரன் அறிவித்ததைத் தொடர்ந்து அவரைப் பதவியைவிட்டுத் தூக்குவதற்காக தமிழ் அரசுக் கட்சியிடம் ரெலோ கையேந்தப் போகிறதா? என்பதைக் காண தமிழ் அரசுக் கட்சியின் தொண்டர்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள்.

அமைச்சர் டெனீஸ்வரன் தானாகவே பதவி விலக மறுத்ததைத் தொடர்ந்து அவரை நீக்குவதற்கு இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று முதலமைச்சரே அவரைப் பதவி நீக்குவது. அல்லது அவரது கட்சி அவரை உறுப்புரிமையில் இருந்து நீக்குவதன் மூலம் மாகாண சபை உறுப்பினர் பதவியையும் அமைச்சுப்பதவியையும்பறிப்பதுஇரண்டாவது. டெனீஸ்வரன் முதலமைச்சர் பதவி நீக்குவதானால் அதற்குப் பொருத்தமான காரணத்தை அவர் முன்வைக்கவேண்டும். டெனீஸ் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்த குழு அவர் குற்றமற்றவர் என்று தெரிவித்துவிட்டது. எனவே ஊழல், மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் அவர் மீது முதலமைச்சரால் நடவடிக்கை எடுக்க முடியாது. அப்படியே முதலமைச்சர் அவரைப் பதவிநீக்கிவிட்டாலும் அதை எதிர்த்து அமைச்சர் நீதிமன்றத்தை நாடுவார். வழக்கு பல மாதங்களுக்கு இழுபடும். அதற்கிடையில் மாகாண சபையின் பதவிக் காலம் முடிந்தாலும் முடிந்துவிடும்.

ஆகவே சாத்தியமான ஒரே வழி கட்சியின் உறுப்புரிமையில் இருந்து டெனீஸ்வரனை நீக்குவதன் மூலம் அவரது பதவியைப் பறிப்பது. ஆனால் அதிலும் சட்டச் சிக்கல் இருக்கிறது. டெனீஸ்வரன் ரெலோ சார்பில் தேர்தலில் போட்டியிட்டாலும் உத்தியோகபூர்வமாக அவர் தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் அந்தக் கட்சி உறுப்பினராகவே போட்டியிட்டுள்ளார். எனவே அவரைப் பதவி நீக்குவதானால் தமிழ் அரசுக் கட்சியிடமே ரெலோ உதவி கேட்கவேண்டும்.

முதலமைச்சருக்கு எதிரான விடயத்தில் தமிழ் அரசுக் கட்சிக்கு நேர் எதிர்மாறான முடிவை எடுத்தது ரெலோ. கட்சியின் அந்த முடிவுக்கு எதிராக தமிழ் அரசுக் கட்சியின் முடிவுக்கு ஆதரவளித்தார் என்கிற காரணத்தாலேயே டெனீஸ்வரன் மீது ரெலோ ஒழுக்காற்று நடவடிக்கையையும் எடுத்தது.

அப்படியிருக்கும்போது டெனீஸ்வரனைப் பதவி நீக்குவதானால் தமிழ் அரசுக் கட்சியிடமே கையேந்தவேண்டிய நிலமை ரெலோவுக்கு ஏற்பட்டுள்ளது. தமது கட்சிக்கு எதிராகச் செயற்பட்டு கட்சியின் நகர்வைத் தோற்கடித்த ரெலோ இப்போது தனக்குத் தேவை ஏற்பட்டதும் தமிழ் அரசுக் கட்சியிடம் கையேந்திக் கொண்டு வருமா என்பதைப் பார்க்க ஆவலாக இருக்கின்றோம் என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர் தமிழ் அரசுக் கட்சியின் தொண்டர்கள் பலர். (உ)

## கட்சியிலிருந்து...

மன் றத்தை நாடுவேன். இருப்பினும் இன்னும் கட்சியில் ஜனநாயக விழுமியங்கள் இருப்பதாக நம்புகின்றேன் என்று அமைச்சர் பா.டெனீஸ்வ ரன் தெரிவித்தார்.

அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதற்கு மறுத்துள்ளமையினால், பா.டெனீஸ்வரனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நாளைமறுதினம் சனிக்கிழமை ரெலோ வின் உயர்மட்டக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சியிலிருந்து உங்களை நீக்கினால் என்ன செய்யப் போகின்றீர்கள் என்று அமைச்சர் பா.டெனீஸ்வரனி டம் கேட்டதற்கு, "எனது பக்க நியாயங்களை, நான் கட்சிக் கட்டுப்பாட்டை மீறவில்லை என்பதை கடந்த 12ஆம் திகதி நடந்த கூட்டத்தில் தெளிவாகவே சொல்லி விட்டேன். சட்டத்துக்கு மாறாகக் கட்சியிலிருந்து என்னை நீக்கினால் நான் நீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை" என்றார். (உ5)

## நல்லூர்...

வில் நிலைகொண்டுள்ளனர். திருவிழா நிறைவடையட்டும் என்றுதான் காத்துக்கொண்டிருக்கிறேன்.

இவ்வாறு உதயன் பத்திரிகையிடம் தீர்க்கமாகக் கூறினார் வட க்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிட ர்றொசான் பெர்னா ன்டோ. இது தொடர்பில் அ வர் மேலும் தெரிவித்ததாவது:

1983 ஆம் ஆண்டு சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்பட்டபோது அந்த முதலாவது படையணியில் இருந்தவன் நான். போர்க் காலத்தில் வடக்கில் சிறப்பு அதிரடிப்படையில் இருந்தவன். அவ்வாறு இருந்த எனக்கு, ஆவா குழு போன்ற வாள்வெட்டுக் குழுக்களின் பிரச்சினை ஒன்றும் பெரியவிடயமல்ல. ஆவா குழுவைச் சேர்ந்த 15 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரியில் சிலர் பிடிபட ஒரு சிலர் தப்பினர். அவ்வாறு தப்பியவர்களில் ஒருவரே விக்டர் நிசா என்று அழைக்கப்படுபவரான நிசாந்தன். அவர் மேலும் சிலரைச் சேர்த்துக்கொண்டு ஒரு குழுவாக இயங்கிவந்தார்.

இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் எவரையும் நாம் துன்புறுத்தவில்லை. மாணவர்கள் 2 பேர் பரீட்சை எழுதுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

முன்னர் ஆவா குழுவில் இருந்தவர்களும் கைது செய்யப்படுவர்.

பாடசாலை முடிந்ததும் இளைஞர்களுக்கு வேலைகிடைப்பதில்லை. அதனால் அவர்கள் ஆங்காங்கே குழுக்களாகச் சேர்கிறார்கள். பின்னர் மதுப் பாவனைக்கு ஆளாகிறார்கள். பின்னர் போதைக்கு அடிமையாகின்றனர். வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் பணத்தில் மோட்டார் சைக்கிள்களை வாங்குகின்றனர். பின்னர் அவர்கள் குழுக்களாகச் சேர்ந்த சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். தற்போது நல்லூர் திருவிழா பாதுகாப்புக் கடமையில் 600 பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். பொலிஸாரின் நடமாடும் சேவையும் இடம்பெறுகிறது.

நல்லூர் திருவிழா நிறைவடையட்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறேன். என்ன செய்வேன் என்று இப்போது கூறமாட்டேன் -என்றார் அவர். (உ-4-26)

## முதலில்...

காரிகளையும் இராணுவ உயர் அதிகாரிகள் சிலரையும் காங்கேசன்துறையில் உள்ள வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் சந்தித்துப் பேசினர். முற்பகல் 9.30 தொடக்கம் ஒரு மணித்தியாலம் சந்திப்பு இடம்பெற்றது. அது தொடர்பில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொசான் பெர்னான்டோ உதயன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:

துன்னாலையில் பொலிஸாரால் பலர் கைது செய்யப்பட்டனர். இன்னும் பலர் தேடப்படுகின்றனர். தமது கிராமத்தவர்கள் மீதான நடவடிக்கையை பொலிஸார் கைவிடவேண்டும் என்று துன்னாலையில் இருந்து வந்திருந்தவர்கள் கோரினர். அது தொடர்பில் அவர்களுக்கு நான் விளக்கமளித்தேன்.

மணல் கடத்தல், மாடு வெட்டுதல் உள்ளிட்ட பல குற்றங்களில் துன்னாலையைச் சேர்ந்தவர்கள் தொடர்புபட்டுள்ளனர். அதனைத் தடுக்கப் பொலிஸார் சுற்றுக்காவலில் ஈடுபடுகின்றனர். அப்படி மணல் கடத்தினார்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களைத் துரத்திச் சென்றபோதே எதிர்பாராமல் அந்தச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. பொலிஸார் அவரை வேண்டும் என்றே சுட்டுக்கொல்லவில்லை. எனினும் சுட்ட 2 பொலிஸ் உத்தியோகத்தர்களும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது கொலைக்குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதெல்லாம் நடந்த பின்னர்தான் பொலிஸ் ஜீப், சிறப்பு அதிரடிப்படையினரின் வாகனம் ஆகியன மீது கல்வீசினார்கள். பொலிஸ் சாவடி அடித்து நொறுக்கப்பட்டது. சாலையில் ரயர் போட்டுக் கொளுத்தப்பட்டது. பொலிஸ் மற்றும் கடற்படை உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்டனர். பொலிஸ் உத்தியோகத்தரின் வீடு சேதமாக்கப்பட்டது.

இந்தக் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சிலர் கைது செய்யப்பட்டனர். இன்னும் பலர் தலைமறைவாகியுள்ளனர்.

பொலிஸாரின் நடவடிக்கைகளை நிறுத்துவதாக இருந்தால் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்று நாம் சந்தேகிக்கும் சுமார் 20 பேரையும் சரணடையச் சொல்லுங்கள். சரணடைந்தால், நீதிமன்றின் நடவடிக்கைகள் ஊடாக இணக்கத்தை எட்டலாம். அவர்கள் சரணடையாது விடுவார்களேயானால், பொலிஸாரின் நடவடிக்கை தொடரும் என்று கூறினேன்.

இப்படித் தெரிவித்தார் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர்.

சந்தேகநபர்களைச் சரணடையச் செய்வது தொடர்பில் கிராமத் தலைவர்கள் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இராணுவ உயர் அதிகாரிகள் சிலர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், வடமராட்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-4-26)

## நானே...

வித்துள்ளார் அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

வடமாகாண அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள குழப்பத்தைத் தொடர்ந்து டெனீஸ்வரன் கடிதம் மூலம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து போக்குவரத்து, மீன்பிடி அமைச்சராகச் செயற்படுகின்றேன் என்றும், தற்போதும் அந்த அமைச்சுப் பதவியில் தொடர்ந்து கொண்டிருக்கின்றேன் எனவும், அந்தக் கடிதத்தில் அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாகாண அமைச்சரவையை மாற்றி அமைக்கப்போகிறேன் என்கிற பெயரில் அமைச்சர்களான ப. சத்தியலிங்கத்தையும் பா. டெனீஸ்வரனையும் பதவியிலிருந்து விலக்க முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் முயற்சித்தார். இதற்காக அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து மீண்டும் ஒரு விசாரணை நடக்கும் என்று அறிவித்தார். அது பெரிய சர்ச்சையாக வெடித்ததைத் தொடர்ந்து அமைச்சர்கள் தாமாகவே பதவி விலகிவிடவேண்டும் என்று கட்சித் தலைவர்களுடன் ஓர் இணக்கத்துக்கு வந்தார் முதலமைச்சர்.

இந்த ஏற்பாடு மற்றும் தமிழ் அரசுக் கட்சியை ஓரங்கட்டும் முதலமைச்சரின் செயற்பாடு என்பவற்றால் ஆத்திரமுற்ற தமிழ் அரசுக் கட்சி முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் அமைச்சரவையில் இடம்பெறுவதில்லை என்ற தீர்மானத்தை எடுத்தது. இதையடுத்து அமைச்சர் ப. சத்தியலிங்கம் பதவி விலகினார். எஞ்சியிருந்தவர் அமைச்சர் பா. டெனீஸ்வரன் மட்டுமே. அவரையும் பதவி விலகுமாறு அவரது கட்சி வலியுறுத்தியது. ஆனால் தவறே செய்யாத நான் ஏன் பதவி விலகவேண்டும் என்றும் கேட்டு அவர் அதற்கு மறுத்துவிட்டார். அவரைப் பதவி நீக்கிவிட்டு கட்சியின் சார்பில் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தை அமைச்சராக்குமாறு ரெலோ முதலமைச்சருக்கு கடிதம் கொடுத்திருந்தது. அதை அடிப்படையாகக் கொண்டு முதலமைச்சர் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கக்கூடும் என்ற முன்னெச்சரிக்கை காரணமாகவே அமைச்சர் பா. டெனீஸ்வரன் தானே பதவியில் தொடர்கிறார் என்பதை ஆளுநருக்கு அறிவித்துள்ளார். (உ-5)

## கட்சித்...

தெரிவிக்கப்படவில்லை. எதிர்வரும் திங்கட்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெறும் என்று அரச தலைவர் செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் புதிய கலப்பு முறையின் கீழ் தேர்தலை நடத்தும் விதத்தில் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் கொண்டுவரப்பட இருந்தது. ஆனால் அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிறுபான்மையினரின் கட்சிகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

இந்தத் திருத்தத்தின் மூலம் மாகாண சபைத் தேர்தல் 2019ஆம் ஆண்டு வரைக்கும் பிற்போடப்படக்கூடிய நிலை ஏற்பட்டது. அத்தோடு இந்தக் காலப் பகுதிக்குள் ஏதாவது ஒரு மாகாண சபையில் ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்றால் அதன் பின்னர் அந்த மாகாண சபை நாடாளுமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும் வகையில் சட்டத் திருத்தம் முன்வைக்கப்பட்டிருந்தது. இதனால் அதற்கு எதிர்ப்பு வலுத்தது.

இதையடுத்தே அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் இது குறித்துப் பேசுவதற்கான கூட்டத்தை அரச தலைவர் ஏற்பாடு செய்திருந்தார்.

இதற்கிடையே, இந்தச் சந்திப்பின் பின்னர் அரச தலைவருடன் பேச தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கொண்டிருந்த திட்டமும் கூட்டம் நிறுத்தப்பட்டதால் செயலிழந்தது.

புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் தேக்கநிலை உருவாகியுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி, வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் அறிக்கையைச் சமர்ப்பிப்பதாகக் கூறியிருந்தது. ஆனாலும் இதுவரை அந்த அறிக்கையைச் சமர்ப்பிக்காமல் இழுத்தடித்து வருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலையீட்டைக் கோருவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீர்மானித்தது. சந்திப்புக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால் அதற்கான நேரம் ஒதுக்கப்படவில்லை. அதனால் நேற்றைய சந்திப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் திட்டமிட்டிருந்தது. நேற்றைய கூட்டம் திடீரென நிறுத்தப்பட்டதால் அதுவும் சாத்தியமில்லாமல் போனது.

எதிர்வரும் திங்கட்கிழமை அரச தலைவரைச் சந்தித்துப் பேச நேரம் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். (உ-5)

## பொலிஸ் மா...

அண் மையில் இணையத் தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியாகிப் பரபரப்பாகியது. அத்தோடு பொலிஸ் தலைமையகத்தில் பணியாற்றிய பெண் பொலிஸார் ஒருவரை பாலியல் வார்த்தைகளைப் பயன்படுத்தி வதைத்தார் என்றும் பொலிஸ் மா அதிபரின் மீது குற்றஞ் சுமத்தப்பட்டது.

இந்தக் காணொலி மற்றும் குற்றச்சாட்டுத் தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் நேற்றுக் கேட்கப்பட்டது.

"பொலிஸ்மா அதிபரின் இத்தகைய செயற்பாடு இலங்கையில் மனித உரிமை மீறல் இடம்பெறுகின்றது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் அல்லவா உள்ளது?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, "ஆம். அப்படித்தான்" என்றார் ராஜித சேனாரத்ன.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகரவோ, அந்தக் காணொலி அவதூறு ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டது என்று குறிப்பிட்டதுடன் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்ததாவது:

பொலிஸ் தலைமையகத்தில் தினந்தோறும் தேசிய கீதமும், பொலிஸ் கீதமும் இசைக்கப்படும். 15 நிமிடங்கள் தியானம் செய்யவேண்டும். இது பற்றி சகல பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நடவடிக்கை இடம்பெறுகின்றதா என்று கண்காணிக்கப்படும். சில சமயங்களில் பொலிஸ் மா அதிபரே நேரடியாகக் கண்காணிப்புச் செய்வார். அவர் கண்காணிப்பில் ஈடுபடும்போது கடந்த ஏப்ரல் மாதம் குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்றது.

பொலிஸ் தலைமையகத்திலுள்ள மின்னுயர்த்தியை இயக்கும் ஊழியரை பொலிஸ் மா அதிபர் தாக்கினார் என்றும், பெண் ஊழியர் ஒருவரைத் தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும் கூறி காணொலி இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பெண் ஊழியரை தகாதை வார்த்தை கூறி மிரட்டினார் எனக் கூறப்படுவது முற்றிலும் தவறான தகவலாகும். அதேபோல் மின்னுயர்த்தியை இயக்கும் ஊழியரையும் அவர் தாக்கவில்லை. திட்டுவது போன்ற காட்சியே அதில் இருக்கின்றது. சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இது பற்றி பொலிஸ் ஆணைக் குழுவிலோ வேறு எங்கும் முறைப்பாடு செய்யவில்லை - என்றார். (உ-5)

# உபதலைமைப்பதவி மிக உயர்ந்த மதிப்பு

## ரோகித் உருக்கம்

"இந்திய அணியின் உபதலைவர் பதவி எனக்குக் கொடுக்கப்பட்டமையானது மிகவும் உயரிய மதிப்பு" என்று தெரிவித்தார் இந்திய அணியின் வீரர் ரேகித் சர்மா.



இலங்கைக்கு எதிராக ஆரம்பமாகவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான இந்திய அணியின் உபதலைவராக ரோகித் பெயரிடப்பட்டார். இதையடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு, இந்திய அணிக்காக விளையாடினால் போதும் என்ற நிலைப்பாட்டில் இருந்தேன். இந்திய அணியின் உபதலைவர் பதவி கிடைக்கும் என்று ஒருபோதும் எண்ணியதில்லை. இதை உயர்ந்த மதிப்பாகக் கருதுகிறேன். இந்திய அணி தற்போது மிகையான பலத்துடன் உள்ளது. டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியதைப்போல ஒருநாள் தொடரையும் கைப்பற்ற முடியும் என்று கருதுகிறேன்" என ரோகித் மேலும் தெரிவித்தார். (ம)



உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் வகையில் கால்பந்தாட்டத் தொடரொன்று விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது இந்தத் தொடருக்கான கிண்ண அறிமுகவிழா அண்மையில் நடைபெற்றது. (ம-23)



# சென். மேரிஸ் அணி இறுதிக்குள் நுழைவு

யாழ்ப்பாணம், ஓக. 17

பாரதியின் கால்பந்தாட்டத் தொடரில் கட்டைக்காடு சென். மேரிஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

பாரதியின் மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகமும் கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும்சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம்பாதியின் 38ஆவது நிமிடத்தில் சென். மேரிஸின் ராஜ் ஓர் கோலைப் பதிவுசெய்ய முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேற்றம் கண்டது சென். மேரிஸ். (ம-108-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 17

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்புவாலிபர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# இலங்கை கால்பந்தாட்ட அணியில் தமிழ் வீரர்கள் இருவருக்கு இடம்

யாழ்ப்பாணம், ஓக. 17



நேபாளத்தின் காத்மண்டு நகரில் நாளை 18ஆம் திகதி முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ள தெற்காசிய கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் 15 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கான தொடரில் இலங்கையில் இருந்து பங்குபற்றும் அணியில் இரண்டு தமிழ் வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

இலங்கை கால்பந்து சம்மேளனம் நேற்றுமுன்தினம் இந்த அணியை அறிவித்தது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவன் ரவிகுமார் தனுஜன் மற்றும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் டினியாஸ் ஆகியோரே தெரிவாகியுள்ளனர். (ம-23)

# உலக மட்ட விளையாட்டுப்போட்டியில் யாழ். பல்கலையில் இருந்து இருவர்

தைப்பேயில் நாளைமறுதினம் சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 30ஆம் திகதி வரைநடைபெறவுள்ள உலகப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருந்து இருவர் தகுதி பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக் கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த பளுதூக்கல் வீரர் யு. வினோத்குமார், அதேபீடத்தைச்சேர்ந்த மேசைப்பந்தாட்ட வீராங்கனை ஆர்.ஏ.பிரசாதி ஆகிய இருவருமே அவ்வாறு தகுதி பெற்றவர்களாவர். (ம-23)



# காந்தி அணி சம்பியனானது


யாழ்ப்பாணம், ஓக. 17

சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொன் விழாவையும், திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு நடத்தப்பட்ட தாச்சித் தொடரில் புங்குடுதீவு காந்தி அணி கிண்ணம் வென்றது.

திருவள்ளுவர் சனசமூக நிலைய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் புங்குடுதீவு காந்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருவள்ளுவர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் புங்குடுதீவு காந்தி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)



தென்மராட்சி அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி அணி சம்பியனாகியது. இந்த அணிக்குரிய கிண்ணம் சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தென்மராட்சி விழாவில் வைத்து வழங்கப்பட்டது. (ம-9)



# யங்ஸ்ரார் வி.கழக பூப்பந்தாட்ட முடிவு

வவுனியா, ஓக. 17

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வடக்கு, கிழக்கு ரீதியாக பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய பூப்பந்தாட்டத் தொடர், யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாக ஆடுகளத்திலும், நகரசபை ஆடுகளத்திலும் அண்மையில் இடம் பெற்றது. இந்தத் தொடரின் முடிவுகள்.

**14 வயதுப் பிரிவு**

14 வயதுப் பிரிவு ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ். கனிஸ்ரன் முதலாமிடத்தையம், அதே பாடசாலையைச் சேர்ந்த பி.பிரியங்கன் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். இரட்டையர் ஆட்டத்தில் மன்னார் பற்றிமா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எல்.ஹென்றி, பி.சுரேசன் இணை முதலிடத்தையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.பிரவீன், கே.சுபீசன் இணை இரண்டாமிடத்தையும் பெற்றன.

14 வயது பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.ஆர்.ஏ. நடா முதலாம் இடத்தையும், எம்.ஆர்.எம். நவல் இரண்டாமிடத்தையும், இரட்டையர் ஆட்டத்தில் மன்னாரைச் சேர்ந்த நடா, நவல் இணை முதலாமிடத்தையும் ரம்பைக்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜே.சுலக்சனா ரி.அக்சியா இணை இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

**16 வயதுப் பிரிவு**

16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தனிநபர் ஆட்டத்தில் மன்னார் பற்றிமா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.சில்வியன் முதலாமிடத்தையும், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செ.செசன் இரண்டாமிடத்தையும் பெற்றனர். இரட்டையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செ.செசன், டி.ஆகாஸ் இணை முதலாமிடத்தையும், மன்னார் பற்றிமா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரி.சில்வியன், சி.சுகீர் இணை இரண்டாமிடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் ரம்பைக்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.கிசானி முதலாமிடத்தையும், அதே பாடசாலையைச் சேர்ந்த உ.சஞ்சிகா இரண்டாமிடத்தையும் பெற்றனர். இரட்டையர் ஆட்டத்தில் ரம்பைக்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.கிசானி, உ.சஞ்சிகா இணை முதலாமிடத்தையும் அதே பாடசாலையைச் சேர்ந்த ஜே.சியாமளா, ஏ.ஜனுசா இணை இரண்டாமிடத்தையும் பெற்றன.

**20 வயதுப் பிரிவு**

20 வயதுப் பிரிவு ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர். சுலக்சன் முதலாம் இடத்தையும், கே.துசான் இரண்டாம் இடத்தையும் பெற்றனர். இரட்டையர் ஆட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கே.துசான், ஆர்.ஜோன்சன் இணை முதலாமிடத்தையும் அதே பாடசாலையைச் சேர்ந்த ஆர்.சுலக்சன் வி.ருக்சன் இணை இரண்டாமிடத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவு ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த என்.ஹம்சாயினி முதலாமிடத்தையும், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த கே.விதுர்சா இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

(ம-108)

# அண்ணா அணி வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 17

சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொன் விழாவையும், திருவள்ளுவர் விளையாட்டுக் கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் அண்ணா அணி சம்பியனானது. சின்னமடு ஆலய மைதானத்தில் அண்மையில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஊர்காவற்துறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊர்காவற்துறை அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் அண்ணா அணி வெற்றிபெற்றது.

(ம-23)

# பழைய வேகம் ஸ்ரெய்னிடம் இருக்காது

*பிளாசிஸ் கவலை*

"காயத்தில் இருந்து ஸ்ரெய்ன் மீண்டு வந்தாலும், அவர் முன்னர் வீசியமாதிரி மணிக்கு 145 கிலோமீற்றர் வேகத்தில் பந்துவீசுவது சந்தேகமே" என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணித்தலைவர் பிளாசிஸ்.

காயம் காரணமாக சுமார் 6 மாதங்களுக்கு மேலாக ஸ்ரெய்ன் ஓய்வில் இருந்துவருகிறார். தற்போது குணமடைந்துள்ள அவர் விரைவில் களமிறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தநிலையில் ஸ்ரெய்னின் வருகை தொடர்பில் தென்னாபிரிக்க ஊடகம் ஒன்றுக்குகருத்துத் தெரிவிக்கையிலேயே பிளாசிஸ் இவ்வாறு குறிப்பிட்டார்.

"ஸ்ரெய்ன் காயத்தில் இருந்து குணமடைந்து டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடும்போது, 145 முதல் 150 கிலோமீற்றர் வேகத்தில் மீண்டும் பந்து வீசுவது கடினம். ஆனால், அவர் மீண்டும் களத்துக்குத் திரும்ப. வேண்டியது அவசியமானது" என பிளாசிஸ் மேலும் தெரிவித்தார். (ம)



## ஒருநாள் தொடருக்கான அணியில்

# திசர பெரேராவுக்கு மீண்டும் வாய்ப்பு



இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது. டெஸ்ட் ஆட்டங்களின் தலைவரான சந்திமல், ஒருநாள் ஆட்டங்களுக்கான அணியில் இடம்பெறவில்லை. அதே நேரம் திசர பெரேரா அணியில் இடம்பிடித்துள்ளார்.

இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. முதலாவதாக டெஸ்ட் தொடர் முடிவடைந்தது. அடுத்ததாக ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. ஐந்து ஆட்டங்களும் முறையே ஓகஸ்ட் 20, ஓகஸ்ட் 24, ஓகஸ்ட் 27, ஓகஸ்ட் 31, செப்ரெம்பர் 3 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. இந்தத் தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை அணி விவரம் - உப்புல் தரங்க (தலைவர்), மத்தியூஸ், டிக்வெல்ல, குணதிலக, குசல் மெண்டிஸ், கப்புக்கெதர, சிறிவர்தன, புஷ்பகுமார, தனஞ்சய, சண்டகன், திசர பெரேரா, ஹசரங்க, லசித் மலிங்க, துஷ்மிந்தா சமீர, விஷ்வ பெர்னாண்டோ.

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான முழு நேரத் தலைவராக தரங்க பெயரிடப்பட்டதன் பின்னர், அவர் எதிர்கொள்ளும் முதலாவது தொடர் இதுவாகும். முன்னதாக நடைபெற்ற டெஸ்ட் தொடரை 3:0 என்று கைப்பற்றி இமாலயப் பலத்துடன் உள்ளது இந்தியா. இதனால் தரங்கவுக்கு இந்தத் தொடர் சவால்கள் நிறைந்ததாக அமையும்.

திசர பெரேரா அணியில் இணைந்தமை சாதகமாகதாகப் பார்க்கப்படுகிறது. எனினும், அவர் திறனுடன் உள்ளாரா என்பது சந்தேகமே. அவ்வாறு அவர் திறனுடன் இருப்பாரானால் இலங்கை அணிக்கு அது கூடுதல் வாய்ப்பாக அமையும்.

(ம)

# பவுன்சரால் தாக்கப்பட்டார் டேவிட் வோர்ணர்



ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான டேவிட் வோர்ணர், பவுன்சர் பந்தால் தாக்கப்பட்டு நிலைகுலைந்து கீழே விழுந்தார். பயிற்சி ஆட்டத்தின்போது இந்தச் சம்பவம் நடைபெற்றது.

ஆஸ்திரேலிய அணி விரைவில் பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. இரண்டு ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் எதிர்வரும் 27ஆம் திகதியும், இறுதி ஆட்டம் செப்ரெம்பர் 4ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இந்தத் தொடருக்கான பயிற்சி ஆட்டங்கள் தற்போது ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வருகின்றன.

வேகப்பந்து வீச்சாளர் ஹசில்வூட் வீசிய பவுன்சர் பந்துவீச்சை எதிர்கொண்ட வோர்ணர், பந்தை சரியாகக் கணிக்காததை அடுத்து அவரின் கழுத்துப் பகுதியைப் பந்து தாக்கியது. மேம்படுத்தப்பட்ட ரகத்தை உடைய தலைக் கவசத்தை வோர்ணர் அணிந்திருந்ததால் தலையில் காயம் எதுவும் ஏற்படவில்லை. எனினும் அவர் பாதியில் விலகினார்.

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி நாளைமறுதினம் அங்கு பயணிக்கவுள்ளது. இந்தத் தொடரில் வோர்ணர் இடம்பெறுவாரா என்பது தொடர்பில் இன்னும் உத்தியோகபூர்வமாக எந்தக் கருத்துக்களும் வெளியாகவில்லை.

(ம)

# முதலிடம் பிடிக்க நடாலுக்கு வாய்ப்பு

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடம் பிடிக்க ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடாலுக்கு பிரகாசமான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ரென்னிஸ் சம்மேளனத்தின் தரப்படுத்தலில் ஒலிம்பிக் சம்பியனான முர்ரே முதலிடத்தில் இருந்து வருகிறார். அவர் அடுத்து நடைபெறவுள்ள சின்சினாட்டித் தொடரில் காயம் காரணமாகக் கலந்துகொள்ளவில்லை. இதனால் முதலிடத்தைப் பிடிப்பதில் இரண்டாம் இடத்தில் உள்ள நடாலுக்கும், மூன்றாம் இடத்தில் உள்ள பெடரருக்கும் பெரும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பெடரரும் காயம் காரணமாக தற்போது விலகியுள்ளார். இதனால் தனிக்காட்டு ராஜா என்ற கணக்கில் ஆதிக்கம் செலுத்தவுள்ளார் நடால். அவர் பன்னாட்டுத் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடம் பிடிக்க வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது.

இது தொடர்பாக நடால், "பன்னாட்டுத் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடம் பிடிப்பது மகிழ்ச்சி. அதேநேரம் பெடரர் காயமடைந்திருப்பது கவலைக்குரிய விடயம்" என்று தெரிவித்தார். (ம)



உடனடி வேலைவாய்ப்பு

எமது சர்வதேச நிறுவனத்தின் அரச அங்கீகாரம் பெற்ற இலங்கை கிளைகளில் 2017 ஆம் ஆண்டு உயர்தரம் கற்ற மாணவர்களுக்கான சிறந்த வேலைவாய்ப்பு.
பயிற்சியுடன்கூடிய நிரந்தர வேலைவாய்ப்பு, எதிர்காலத்திற்கான திட்டமிடல், சிறந்த சம்பளத்துடன்கூடிய பதவியுயர்வு, வடக்கு கிழக்கு விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை, தகைமை ஆகக்குறைவு O/L. திறமையானவர்களுக்கு எமது வெளிநாட்டு கிளைகளில் வேலை வாய்ப்பு.
தொடர்பு - 077 230 2795, 076 664 4442

A/L - பரீட்சைக்குப் பின்னரான உடனடி வேலை வாய்ப்பு

- நாடளாவிய ரீதியில் வணிகத் துறையில் முன்னணி வகிக்கும் எமது Everest Pvt (Ltd) நிறுவமானது தனது புதிய கிளைகளை வடக்கு மற்றும் கிழக்கில் ஸ்தாபிக்க உள்ளது. அதற்காக துடிப்பான இளைஞர், யுவதிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்க உள்ளது.
- வணிகத்துறைக்கு தேவையான அனைத்து பயிற்சிகளும் சம்பளத்துடன் வழங்கப்படும். இணைக்கப்பட இருக்கும் பதவிகள் பின்வருமாறு
  - Administration - நிர்வாக உத்தியோகத்தர்
  - Supervisor - மேற்பார்வையாளர்
  - Assistant Manager - உதவி முகாமையாளர்
  - Branch Manager - கிளை முகாமையாளர்

வேலையின் போது EPF, ETF வசதி வழங்கப்படும்.
வெளிநாடு செல்லும் வசதி உண்டு.
தொடர்பு: 077 077 1377/ 077 985 6671

EASYWAY யின்
புதிய முறையிலான ஆங்கிலப்பயிற்சி
EASY WAY யின் ஆங்கில பாடப்புத்தகங்களைக்கற்று அதிலுள்ள பயிற்சிகளை செய்தவர்கள் சரளமாக ஆங்கிலத்திலும் பேசுவதை ஏற்கனவே எமது நேரடி வகுப்புகளில் நாம் நிரூபித்துள்ளோம்.
வகுப்புகளுக்கு வர நேரமற்ற தொழில்புரிவோர், பாடசாலை மாணவர்கள், வீட்டுப்பெண்கள், ஆசிரியர்கள்,பல்கலை கழக மாணவர்கள் ஆங்கிலம்பேசவிரும்புவோர் இணையமுடியும்
பாடநெறிக்கட்டணம் : ரூபா 15000 மட்டுமே.
(.08.2017 இற்குமுன் இணைவோருக்கு மட்டுமே! பின்னர் ரூ 3000.00)
90 பாடங்களையும், 90 வீடியோ பாடங்களையும் கற்று அதிலுள்ள பயிற்சிகளுக்கு பதில்களை எழுதி ஆகக் கூடியது 90 - 120 நாட்களுக்குள் ஒப்படைத்தல்வேண்டும.
இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இறுதிப்பரீட்சை நவம்பர் 12, 2017 அன்று இடம்பெறும்.
கட்டணத்தை வங்கி மற்றும் தபாலகங்கள் மூலம் செலுத்தமுடியும்.
EASYWAY 403, மணிக்கூட்டு வீதி, யாழ்நகர். 021 320 3313 077 1570 486



# இலங்கையின் படுதோல்விக்கு கிரிக்கெட் சபையே காரணம்

## ரணதுங்க சாடல்

"இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை அணி 0:3 என்று முழுமையாக இழந்தமைக்கு, இலங்கை கிரிக்கெட் சபையே காரணம்" என்று அந்த அணியின் முன்னாள் தலைவர் ரணதுங்க சாடியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றுகையிலேயே ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

"இலங்கை கிரிக்கெட் அணி படுமோசமான நிலையை நோக்கிச் செல்கிறது. இந்தத் தோல்விக்கு நீங்கள் எந்த ஒரு வீரரையும் குறைசொல்லக் கூடாது. இதற்கு முழுமுதல் காரணம் அணி நிர்வாகத்தினர்தான். இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபாலவிடம், இலங்கை அணி அடைந்த தோல்வி குறித்து பன்னாட்டு கிரிக்கெட் சபை விசாரணை நடத்த



வேண்டும். எங்களிடம் தகுதியான வீரர்களை தேர்வு செய்யும் சிறப்பான தேர்வாளர்கள் இல்லை" என ரணதுங்க மேலும் தெரிவித்தார். (ம)

# ஒரு டெஸ்ட்டையாவது மே.தீவுகள் வெல்லும்

## அம்புரோஸ் நம்பிக்கை

"இங்கிலாந்துக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில், குறைந்த பட்சம் ஒரு ஆட்டத்தையேனும் மேற்கிந்தியத் தீவுகள் அணி கைப்பற்றும்" என்று தெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் அம்புரோஸ்.

இந்த இருதரப்பு டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது. இது தொடர்பாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அம்புரோஸ் இவ்வாறு குறிப் பிட்டார்.

"மேற்கிந்தியத் தீவுகள் அணி கடந்த சில ஆட்டங்களில் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகிறது. இதை மறுக்கவில்லை. ஆனால் இங்கிலாந்துக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக்கொண்ட ஒருநாள் தொடரில் குறைந்த பட்சம் ஓர் ஆட்டத்திலாவது வெற்றிபெறும். மிகச் சவாலான ஆட்டத்தை மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்கள் வெளிப்படுத்துவார்கள்" என அம்புரோஸ் மேலும் தெரிவித்தார்.

கடந்த 2014ஆம் ஆண்டு பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி கைப்பற்றியதன் பின்னர் தொடர்ச்சியாக 6 தொடர்களை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# இங்கிலாந்து - தீவுகள் டெஸ்ட் இன்று ஆரம்பம்



இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் இந்தத் தொடரில் பங்கெடுப்பதற்காக கடந்த மாதம் இறுதிப் பகுதியில் இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்திருந்தது. நீண்ட பயிற்சியின் பின்னர் அந்த அணி இங்கிலாந்தை அதன் மண்ணில் இன்று எதிர்கொள்கிறது. எட்ஜ்பஸ்டன் மைதானத்தில் இலங்கை நேரப்படி மாலை 6.30 மணிக்கு இந்த ஆட்டம் ஆரம்ப மாகவுள்ளது. இரண்டாவது ஆட்டம் லீட்ஸில் எதிர்வரும் 25ஆம் திகதியும், மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் லோட்ஸில் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இன்றைய ஆட்டத்துக்காக இரண்டு அணிகளும் நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்ட ஒளிப்படங்களை இரு நாடுகளின் கிரிக்கெட் சபைகளும் தத்தமது சமூக வலைத்தளங்களில் வெளியிட்டிருந்தன. (ம)

பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.08.2017 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.